சங்கச் செவ்வியல் அறிமுகம்

# நற்றிணை மலர்கள்

பன்முகப்பார்வையில் இலக்கிய விளக்கம்

தமிழண்ணல்

சங்கச் செவ்வியல் அறிமுகம்

# நற்றிணை மலர்கள்

பன்முகப் பார்வையில் இலக்கிய விளக்கம்

தமிழண்ணல்

**தமிழ்ப் பயிற்சிக் களம்**

புதிய தமிழியக்கம்

'ஏரகம்', 4/585 (732) சதாசிவ நகர்,

முதன்மைச் சாலை, மதுரை - 625 020.

பேசி : 0452-2533792 செல்-பேசி : 94430-64749

இந்நூல் கோவை, **'கற்பகம் பல்கலைக்கழகம்'** அறக்கட்டளை வழங்கிய பொருளுதவியுடன் வெளியிடப்படுகிறது.

முதற் பதிப்பு : தி வ.ஆண்டு 2040, ஆடி (ஆகஸ்டு 2009)

உரிமை : ஆசிரியருக்கு

விலை உருவா : **50.00**

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நற்றிணை மலர்கள் |
| உரையாசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | இலக்கிய விளக்கம் அறிமுகம் |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்டு, 2009 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூல் அளவு | : | கிரவுன் |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 144 |
| நூலின் விலை | : | உருவா **50.00** |
| அச்சிட்டோர் | : | மோனார்க் கிராபிக்ஸ், சென்னை. |
| ஒளி அச்சுக் கோவை | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| வெளியீடு | : | தமிழ்ப் பயிற்சிக்களம் |

---

**SELLING RIGHTS**

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

# பயிற்சிக் களக் கையேடு

சங்கச் செவ்வியல் இலக்கியம் முற்காலத்தன எனக் கிடைத்திருப்பன 22 நூல்கள். தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை.

கதை நூல்கள் பரவிய அளவு மாந்தர்தம் நிலவுலக வாழ்வு பற்றிய சங்கச் செவ்வியல் இலக்கியம், ஆர்வலர்களிடமும் ஆய்வாளர்களிடமும் பரவவில்லை. இனியேனும் சங்க நூல்களை நாள்தோறும் பயிற்றுவித்து பொதுமக்களிடையே பரப்பும் பணியில் ஈடுபடவேண்டும்.

அப்போதுதான் தமிழர் பண்பாடும் நாகரிகமும் இலக்கியச் சிறப்பும் தமிழர்களால் உணரப்பட்டு, உலகினர்க்கும் உணர்த்தப்படும். தமிழ் தழைத்துச் செழிக்க அதன் வேரை வலுப்படுத்த வேண்டும். செம்மொழி (Classical Language) என 12.10.2004இல் அறிவித்ததை, இடைக்காலச் சோழராட்சியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி போல நிலைநிறுத்தக் கோவை, கற்பகம் பல்கலைக் கழகம் முன்வந்துள்ளது.

சான்றிதழ் வகுப்பு முதல் ஆய்வுக் கல்விவரை படிப்படியாக இதனை வளர்க்க, முதற்கண் வழிகாட்டும் அறிமுக விளக்கக் கையேடுகளும் ஆய்வு நூல்களும் வெளியிடப்படுகின்றன. திருநெறிய தெய்வத் தமிழில் ஈடற்ற ஈடுபாடு கொண்ட கற்பகம் பல்கலைக் கழகத்தின் வேந்தர் மேதகு இராச வசந்த குமாரவர்கள், இந் நற்பணிக்கு உதவ முன்வந்திருப்பது தமிழ்செய்த தவப்பேறாகும்.

தமிழண்ணல்

# உள்ளுறை

## பன்முகப் பார்வை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | காதலென்பது களங்கமற்றது | 5 |
| 2. | ஐயறிவுயிர்களின் அன்பு வாழ்க்கை | 49 |
| 3. | அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே | 79 |
| 4. | பழந்தமிழர் வாழ்க்கைப் படங்களின் தொகுப்பு | 115 |

# 1

# காதலென்பது களங்கமற்றது

சங்கச் செவ்வியல் அகத்திணைப் பாடல்கள் பல்வேறு பரிமாணங்களை உடையன. காதலைச் சொல்லவந்து கடமையை வற்புறுத்துவன. இனிப்புடன் மருந்தைக் கலந்து தருவன. மாந்தன் காட்டுமிராண்டியாய் வாழ்ந்ததொரு காலம். காலம் செல்லச் செல்லவே அவன் பண்படுத்தப்பட்டான். ஆயினும் நேற்றும் இன்றும் கூட அவனிடம் பழைய குற்றங்குறைகள் வேறு ஒரு வகையில், பிறிதொரு கோணத்தில் வெளிப்படவே செய்கின்றன.

ஓரினச் சேர்க்கையை நீதிமன்றம் மூலம் நியாயப் படுத்துகிற நிலைக்கு வளர்ந்தாயிற்று. பழங்கால மாந்தரிடம் காணப்பட்ட பரத்தைமை அகப் பாடல்களில் வெளிப்படப் புனையப்பட்டுள்ளது. உடனே பலர் சங்க காலமே பரத்தைமைக் காலம் என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றனர். இன்றும் நடக்கும் காதலர் தினம் பற்றியும் அந்நாளில் ஐந்து விண்மீன் வளமனை விடுதிகள் படும்பாட்டையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

சங்க கால மக்கள் வாழ்நிலையையும் அவர்களின் வாழ்வைப் புனைந்து தந்திருக்கும் சங்க இலக்கியப் புனைவு நெறிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இலக்கியப் படைப்பாளி உள்ளதை உள்ளவாறு புனையும்போதே, உள்ளதை உயர்த்துமாறும், குற்றங் குறைகளைக் களையுமாறும் புனைதல் வேண்டும். எழுத்து அறம் அதுவே.

சங்க இலக்கியம் இந்த வகையில் எந்த அளவு வெற்றி பெற்றது என்பதை, முழுமையாக நடுவுநிலையுடன் ஆராய வேண்டும். அவ் இலக்கியத்தைப் பற்றி நன்கு அறியாமலே கருத்துக்கூற முற்படுவது கடுங்குற்றமாகும்.

அகத்திணைப் பாடல்களாக இன்று கிடைப்பன 1862 ஆகும். **இதில் ஒரு பாடலில் வரும் தலைவன் தலைவிக்கும் அடுத்த பாடலில் வருபவர்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.**

ஒவ்வொரு பாடலும் ஒருசிறு நாடகம். பாடலே நாடக அரங்கம். அதில் 'கூற்று' நிகழ்த்துபவர் தோன்றுகிறார். அவர் மூலம் பிறரையும் அறிகின்றோம். இதனால் இவை பெரிதும் ஒரு கூற்று நாடகங்கள் எனலாம். பிறிதொரு வகையிற் சொன்னால் பாடலென்பது மக்கள் வாழ்விடம். அதில் வரும் மக்கள் இன்றும் உயிர்ப்புடன் உள்ளனர். கூர்ந்து கற்றால் பழங்காலத் தமிழகத்தை மீண்டும் பார்க்க முடியும். அதில் திரும்பவும் வாழமுடியும்.

அகத்திணையில் 'கூற்று' என்று கூறவேண்டும். புறத்திணையில் 'துறை' எனல் வேண்டும். புறப்பாடல்களில் புலவன் நேரே பேசுகின்றான். அகப் பாடல்களில் புலவன், கூற்றுக்குரிய மாந்தர் வாயிலாகப் பேசுகின்றான். புறத்திணை புலவர்தம் உளவியலை வெளிப்படுத்தும். அகத்திணைதான் உலக மாந்தர்தம் உளவியலை வெளிப்படுத்துகின்றது.

ஒருவர் மீது ஒருவர் உயிரனைய காதல் கொண்டதற்குக் காரணம் முன்வினைப் பயன் என எண்ணினர். சந்திக்க நேர்ந்தவர்களையெல்லாம் காதலிப்பதென்பது காமம்; அது காதலன்று. உயிர்கள் இணைவது போன்ற பொருத்தம் மிக்க இருவர், முன்பின் அறிமுகமில்லாதவராக இருந்தும், சந்திக்கப் பெற்றுப் பிரிவறியாக் காதல் கொள்வது தெய்விகமானது என நம்பினர். இத்தகைய நம்பிக்கைகளால், காதலர்கள் ஒரு கட்டிற்குள் உட்படுத்தப்படுகின்றனர். இது அடிமைப்படுத்துவதாகாது.

அரங்கம் அமைத்து, சில விதிகள் வகுத்து, அவற்றிற்குக் கட்டுப்பட்டு விளையாடுவதுதான், விளையாட்டு. கண்டபடி ஆடுவேன் என்றால், நெறியாளர் விளையாட்டைவிட்டு விதி மீறியவனைத் தள்ளிவிடுவார். கோடு இடப்பெற்றிருக்குமேல், அதைத் தாண்டி ஓரங்குலம் மட்டுமே, முன் காற் பெருவிரலை வைத்தாலும் ஆட்டம் தள்ளப்பட்டுவிடும். அது போலவேதான், காதல் வாழ்விலும் இம்மியளவேனும் தவறுபடாது, இன்பம் தருமாறு நடக்கவேண்டும். அரங்கமாவது, கோடாவது, எல்லையாவது, விதிகளாவது – எல்லாம் அடிமைப் படுத்தும் சூழ்ச்சி எனக் கூறிக் கண்டபடி ஆடமுற்படுதல் காதலாகாது.

காதல் வாழ்க்கையை சில கூறுகளாகப் பகுத்துக் கொண்டு (Units) பாடியுள்ளனர்.

தலைவன் முதலில் காதலியைக் கண்டு கூடிமகிழ்ந்து கூறுபவை; பாங்கன் இடித்துக் கூற மறுமொழி கூறுபவை; தலைவியும் தோழியும் இசையாதபோது வருந்திக் கூறுபவை. உடன் போக்கில் கூறுபவை என இவை களவொழுக்கத்தில் புனையப்படுகின்றன.

தலைவியும் தோழியும் தலைவனின் காதலுக்கு முதலில் இசைய மறுத்தல்; பிறகு இசைதல், முதற் கூட்டத்தின்பின் தலைவன் பொருள் தேடிவந்து மணம் செய்து கொள்வதாகப் பிரிய முயலுதல்; பிரிவை விரும்பாத மகளிர் நிலை; பிரிந்தவன் காலம் நீட்டிக்க வருந்துதல்; உடன்போக்கு உடம்படல், மறுத்தல், வரைவு (திருமணம்) கைகூடுதல், மகிழ்தல்; கைகூடாது காலம் நீட்டிக்கவே ஆற்றாமை மீக்கூர்தல் என இவை போல்வன களவுக்காலக் கூறுகளாகப் பாடப்பட்டுள்ளன.

கற்பில் இல்லறம் பற்றியவை, பொருள் தேடப் பிரிதல் பற்றியவை; பலவகைப் பிரிவுகளில் தலைவிவருந்துபவை, தோழி ஆற்றியிருக்க வற்புறுத்துபவை, தலைவனின் பரத்தைமை ஒழுக்கத்தால் மகளிர் வருந்திக் கூறுபவை, தலைவன் ஊடல் தீர்க்க முயல்பவை என இவைபோல்வன கூறுகளாகின்றன.

இதனை முழுமைபெறத் தொகுத்தும் பகுத்தும் பார்க்கலாம். சில வகைக் கூறுகளால், முழுமையை உணர்த்த முடியும் என்ற புலவர் திறத்தை எண்ணிப்பார்க்க வேண்டும்.

**யார் மகள்கொல், இவள்?**

முதன் முதலாகக் காதல் கொண்டு, காதலியின் அழகை வியந்து பேசுகிறான், தலைவன். யானும் நீயும் எவ்வழி அறிதும்? என்ற குறுந்தொகைச் செய்திபோல, முன்பின் தெரியாதவள் போலும்! அவள் அழகை விவரித்தலால், இயற்கைப் புணர்ச்சி (முதற்கூட்டம்) இறுதிக்கண், தலைவன் கூறியதென அடிக்குறிப்பாளர் குறித்துள்ளார்.

**அல்குபடர் உழந்த அரிமதர் மழைக்கண்**
**பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்**
**திருமணி புரையும் மேனி மடவோள்**
**யார்மகள்கொல்? இவள் தந்தை வாழியர்!**
**துயரம் உறீஇயினள் எம்மே, அகல்வயல்**
**அரிவனர் அரிந்தும் தருவனர்ப் பெற்றும்**
**தண்சேறு தாஅய், மதனுடை நோன்தாள்**
**கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்**
**திண்தேர்ப் பொறையன் தொண்டி**
**தன்திறம் பெறுகஇவள் ஈன்ற தாயே!** (8)

மிகுந்த துன்பத்தில் உழன்ற, செவ்வரியோடிய அழகிய குளிர்ந்த கண்கள்; பலவகைப் பூக்களை வைத்துத் தைத்த, ஒன்றற்கொன்று மாறுபட்ட நிறமுடைய தழையுடை அசையும்இடுப்பு, நீலமணிபோலும் மேனி - இவற்றையுடைய இவ் இளையோள் யார் மகளோ?

இவள் தந்தை வாழ்வாராக! இவளை ஈன்ற தாயும் சேரர்தம் தொண்டி நகர் போன்ற வாழ்வும் வளமும் பெறுவாளாக!

அகன்ற வயலில் நெற்பயிரை அறுவடை செய்வோர் அரிந்தும், அரிச் சூட்டுகளைக் கொண்டு தருவோர் தந்தும் குவித்தனர். அந் நெற்போரில், அழகிய வலிய தண்டினையுடைய கண்போன்ற நெய்தற்பூ மலர்கின்றது. அத்தகைய திண் தேர்ப் பொறையனாகிய சேரனின் தொண்டி போன்ற சிறப்பினை இவளை ஈன்றதாய் பெறுவாளாக!

அவளும் காதல்வயப்பட்டதாற்போலும், அவள் கண்களும் 'அல்கு படர் உழந்தன'! நெய்தல் தான் அரியப் பட்டு, நெற்போரில் கொண்டுவந்து போடப்பட்ட பிறகும் இதழ்விரிந்து மலர்கிறது. இவள் மணம்செய்து தலைவன் வீடு சென்ற பிறகும் சிறப்புறுவாள்; துன்பத்தைத் தாங்கி, முகம் மலர்ந்திருப்பாள் என்பது உள்ளுறை. தொண்டி நகரம் சேரநாட்டுத் துறைமுக நகரமாகமிகுந்த சிறப்புடன் விளங்கிக் கடலால் கொள்ளப்பட்டது.

காதலியைத் தனக்குரித்தாகப் பெற்ற மகிழ்ச்சியால், அவள் பெற்றோரை வாழ்த்துகின்றான்.

**கண்மட்டுமன்று, தோளுமல்லவா வருத்துகிறது!**

முதலிற் சந்தித்த பின், மீண்டும் மீண்டும் காணவேண்டும் என்று நெஞ்சம் துடித்தது. அதனால் இரண்டாம் முறையாக அவன் அவளைக் கண்டான். அவளோ பெண்மை காரணமாக, அவன் கேட்டதற்கு மறுமொழியாது, பேசாதிருந்தாள். விரைந்து முகத்தை வெட்கத்தால் கவிழ்த்துக்கொண்டாள். இதனால் காதலனின் உணர்ச்சி மீக்கூர்ந்தது. இதனை எவ்வாறு தாங்குவேன் என்றான், அவன். நிறம் விளங்கும் புலியின் முதுகில் குத்திக் கொன்று விளையாடிய யானையின் தந்தங்களில் நுனி குருதிதோய்ந்திருந்தது. அதுபோல் கடைமணி சிவந்த கண்கள் காதலனைத் தாக்கி வருத்தின. அவை மட்டுமா?

பகைவர்கள் அரணுள்ள மதிலிடத்து வந்து தாக்கவும், அவர்களை வென்று முரசைக் கைப்பற்றி, பாதுகாவலான அவர்தம் கோட்டையை வென்ற, போர் வல்ல பாண்டியனது மிக்க புகழையுடைய கூடல்போன்ற

அவளுடைய, கரும்பைத் தொய்யிலாக எழுதிய தோளுமல்லவா அவனை வருத்துகிறது?

இதனைக் காதலனே காதலியிடம் பேசப்பேச, அவள் நாணத்தாற் தலை கவிழ்ந்து, எதிர் பேசாதிருக்கின்றாள். இவ்வாறு பேசி அவளைத் தன் வயம் ஆக்கிக் கொள்கிறான் என்பது கருத்து.

சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?
கொடுங்கேழ் இரும்புறம் நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப்பு ஏய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ அல்ல,
நண்ணார்
ஆண்டலைமதில ராகவும் முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன்
பெரும் பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே! (39)

யாழ் – முன்னிலை அசை. கதுமென – விரைவாக. கேழ் – நிறம். புறம் – முதுகு. புலியைக் கொன்று விளையாடிய வேழம். தலை மருப்பு – தந்தநுனி. கதவ அல்ல – தாக்கினவல்ல. நண்ணார் – பகைவர். ஆண்டலை – அரண். ஓம்பு அரண் – பகைவரது பாதுகாவலான மதில். கரும்பு – மகளிரின் தோள் முதலியவற்றில் கருப்பு மையினால் தொய்யில் எழுதுவர். உடம்பில் ஓவியம் வரைவது, அழகுக்காக! இங்குக் கரும்பு வரையப்பட்டுள்ளது.

## இரந்து பின்னிற்கும் காதலன்

காதலன்தான் தன்பால் ஓரளவு அன்பு காட்டும் தன் காதலியின் காதலைப் பெற, அவளிடம் இரந்துபின்னிற்க நேரும். நாணத்தாலும் மடப்பத்தாலும் ஒரு பெண் தன் காதலை எளிதில் வெளிப்படுத்தமாட்டாள். அவள் தயக்கமும் சுணக்கமும் தலைவனிடம் வேட்கையை மிகுவிக்கும். இதுவே பண்புடைக் காதலின் அடையாளம்.

அவன் அவள் அன்பைப் பெறத் தேரிலே வந்தான். ஊரார் அறிவர் என்று தேரை சேய்மையில் நிறுத்திவிட்டு நடந்தும் வந்தான். உப்பங்கழி நீர்நிலைகளில் அடும்பு மலர்களை, அவளுக்காகக் கொய்துகொடுத்தான். தாழம்பூவை எடுத்துக்கொள்ள, அதனை வளைத்துக் கொடுத்தான். தழையுடைக்காக நெய்தற் பூக்களைக் கொய்து கொடுத்தான். இதனால் அவளை அடைந்தவன் போலப் பழகிய உணர்வுடன், நாள்தோறும் இத்தகையவன் ஆனான்.

புனைந்த மாலையையுடைய, பொன் அணிபூண்ட வேந்தர்கள் போரிட்ட பாசறையில் வீரர்கள், அப் படைக்கடலிடையே யானைகள் விழுமாறு கொன்று செய்த போரினால் புண்பட்டுக் கிடப்பர். அப்பிணங்களை நரியோ, கழுகோ கொத்தாதபடி பேய்கள் காத்துநிற்கும். அதைப்போல இவளைக் காத்து, இவள்பின் நிற்றலை வெறுக்காது, பணிவுடன் உள்ள நம்மைப் பற்றி, இப்பரதவர் மகள் என்னதான் நினைத்திருக்கின்றாளோ? ஒன்றும் தெரியவில்லையே!

இவ்வாறு தலைவன் தனக்குத் தானே உரத்துப் பேசிக்கொள்கின்றான். இது தோழியின் காதில் விழுகிறது. இதன் பயன் தோழி கேட்டுக் குறைதீர்ப்பாள் என்பதாம்.

**கடுந்தேர் ஏறியும் காலில் சென்றும்**
**கொடுங்கழி மருங்கின் அடும்புமலர் கொய்தும்**

கைதை தூக்கியும் நெய்தல் குற்றும்
புணர்ந்தாம் போல உணர்ந்த நெஞ்சமொடு
வைகலும் இனையம் ஆகவும்
செய்தார்ப்
பசும்பூண் வேந்தர் அழிந்த பாசறை
ஒளிறுவேல் அழுவத்துக் களிறுபடப் பொருத
பெரும்புண் உறுநர்க்குப் பேஎய் போலப்
பின்னிலை முனியா நம்வயின்
என்னென நினையுங்கொல் பரதவர் மகளே (349)

கைதை - தாழை. குற்றும் - கொய்தும். அழுவத்து - காட்டில், பெரும்புண் - இறப்பைத் தந்தபுண்.

மருந்து பிறிதில்லை

காதல் நோய்க்குக் காதல் கைகூடுதலே மருந்து. அவளால் வந்த நோய்க்கு அவளே மருந்து. இதுபோல் அவனே மருந்தாவான். தேன், தான்செய் நோய்க்குத் தானே மருந்துமாகுமாம். அதுபோன்றதே காதலால் வரும் நோயும்.

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து (1102)

என்பது வள்ளுவம்.

திருமணம் செய்துகொள்ள முனையாது அடிக்கடி வந்தவனைத் தோழி 'சேப்படுத்தாள்' (வராதீர் எனத் தடுத்தாள்). அதனால் மனம் வருந்திய தலைவன், தோழி காதில் விழத் தனக்குத் தானே பேசிக்கொள்கின்றான்.

மன்றத்தே கருநிற எருமையைக் கட்டிப் போட்டுளது, அதனிடமிருந்து நிரம்பப் பால் கறக்க வேண்டுமேல், காலையில் மேய்ச்சல் நிலத்துக்குக் கொண்டு போக வேண்டும். கன்றுகளை வீட்டிலே விட்டுவிட்டு,

ஊர்ச்சிறுவர்கள் எருமைகளின் முதுகிலேறி மேய்ச்சல் நிலத்திற்கு விடியற்காலத்தில் போகின்றனர். அத்தகைய காலைப் பொழுதில் தலைவன் தலைவிக்குத் தழையுடையும் தார்மாலையும் தந்தனன். அதனை ஏற்றுக் கொண்ட அவள் நாணப்பட்டாள். தன் தோழியருடன் நல்ல கணவன் வாய்க்க வேண்டுமென்று தைத்திங்களில் நோன்பிருந்து குளிர்ந்த குளங்களில் நீராடினாள். அப் பெருந்தோள் குறுமகள் - இளம் கன்னி அல்லது என் நோய்க்கு மருந்து பிறிதில்லை. என்செய்வேன்? இதைக் கேட்ட தோழி இரக்கப்படுவாள் என எதிர்பார்க்கின்றான்.

மன்ற எருமை மலர்தலைக் காரான்
இன்தீம் பால்பயம் கொண்மார் கன்றுவிட்டு
ஊர்க்குறு மாக்கள் மேற்கொண்டு போத்தந்து
தழையும் தாரும் தந்தனன் இவன் என
இழைஅணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் அல்லது
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே (௮0)

மலர் தலை - எருமையின் பெரியதலை. மேற்கொண்டு - எருமை முதுகிலேறி. போத்தந்து - (தலைவன் விடியலில்) விரும்பிவந்து (தலைவிக்குத் தழையும் தாரும் தந்தான்). இதனால் தோழியிற் கூட்டத்திடையே இருந்த அவள் நாணம் உற்றாள். கணவன் வாய்க்கத் 'தவத் தைந் நீராடுவர்'. மலர் தலைக்காரான், இன்தீம்பால், ஊர்க்குறுமாக்கள், பெரும்புலர் விடியல், இழையணி ஆயம், பெருந்தோள் குறுமகள் எனும் தொடர்கள் பாடலை அழகுபடுத்துகின்றன.

## தலைவிக்குத் தலைவனும் மருந்தாதல்

காதலன் வரையாது வந்து போதலை மகளிர் விரும்புவதில்லை. தோழி இதனை மிகக் கண்டிப்பாக அறிவுறுத்துகிறாள். தலைவன்

திருமணம் செய்துகொள்ளாமல், பகைவர் நாட்டில் போர் செய்யப் புறப்படுகின்றான். நீண்ட காலமாக வலிமையொடு சினங்கொண்டிருந்த யானை, புலியைக் கொன்றது. அதன் குருதி படிந்த தந்தத்தை, மழை பெய்து கழுவியது. அம்முகில், வில்லாலடித்த பஞ்சுபோல், வைகறையில் மலையுச்சியில் தவழ்ந்தது. "அத்தகைய நாடனே! நீ அவளிடம் இரக்கம் கொண்டு கருணை காட்டாயாயினும், அவள் விரும்பாதவற்றைச் செய்தாயாயினும் உன் உள்ளம் போல் நடப்பவள் என் தலைவி. அவளது நல்ல நெற்றியில் தங்கிச் சிறிது சிறிதாகக்கூடிய பசலை நோய்க்கு, உன்னைத் தவிர மருந்து பிறிதில்லை. இதை நன்கு அறிந்து கொண்டு, வினைமேற் செல்வதானால் செல்!"

தொன்றுபடு துப்பொடு முரண்மிகச் சினைஇக்
கொன்ற யானைச் செங்கோடு கழாஅ
அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி
எஃகுறுபஞ்சிற் றாகி வைகறைக்
கோடுயர் நெடுவரை ஆடும் நாடநீ
நல்கா யாயினும் நயனில செய்யினும்
நின்வழிப் படூஉம்என் தோழி நன்னுதல்
இருந்திறை கூடிய பசலைக்கு
மருந்துபிறி தின்மைநன்கு அறிந்தனை சென்மே (247)

துப்பு – வலிமை. கழாஅ – கழுவ. எழிலி – மேகத்திற்கு அழகான பெயர். எஃகு – வில், பஞ்சடிப்பது. கோடு மலை உச்சி. நயனில – நல்லதல்லாத. இறை கூடிய – சிறிது சிறிதாகக் கூடிய.

நீயே உன்னொடு சிந்திக்க!

தோழி தலைவியிடம் 'நீயே உன்னொடு சூழ்க (சிந்திக்க)' என அழுத்தமாகக் கூறுகிறாள். எதற்கு? தலைவன் கேட்க அவள் பேசுகிறாள். களவுக் காதலைக் கண்டித்துத் தலைவனை மணக்கத் தூண்டுவதற்காக,

இவ்வாறு பேசுகிறாள். தலைவனுக்கு நிலைமையை அறிவிக்கும் தோழியின் சாதுரியம் இது.

மலையடுக்கத்தில் என் ஐயன்மார் உழுத, கருங்காற் செந்திணைப் பயிர் முற்றி, அறுக்கப்பட்டு விட்டது. மலை சூழ்ந்த காட்டுப்பகுதியிலுள்ள சிறுகுடி ஊரிலுள்ள தாழ்ந்த பகுதிகளில் மல்லிகையும் அரும்பின. இடி இடிக்கும் அச்சந்தரும் நள்ளிருளில், மலைநாடன் வரைய வருவான் என்பது உண்மையா? இல்லையா? என்ன ஆகும்? என்று தாயும் அமைதியாக, தீர ஆராய்கின்றாள். எனவே, பூப்போன்ற கண்ணி! உன்னொடு நீயே சூழ்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். எது பொருத்தமென்று ஆராய்வாயாக!

இருங்கல் அடுக்கத்து என்ஐயர் உழுத
கருங்காற் செந்தினை கடியும் உண்டன,
கல்லக வரைப்பில் கான்கெழு சிறுகுடி,
மெல்லவல் மருங்கின் மௌவலும் அரும்பின,
நரை உரும் உரறும் நாம நள்ளிருள்
வரையக நாடன் வரூஉம் என்பது
உண்டுகொல்? அன்றுகொல்? யாதுகொல்மற்று? என
நின்று,
மதிவல் உள்ளமொடு மறைந்தவை ஆடி
அன்னையும் அமரா முகத்தினள், நின்னொடு
நீயே சூழ்தல்வேண்டும்
பூவேய் கண்ணி! அது பொருந்து மாறே (122)

ஐயர் - தந்தையும் தமையன்மாரும். கடியுண்ணல் - அறுக்கப்படுதல். மெல்லவல் - பள்ளங்கள். மௌவல் - காட்டு மல்லிகை. நரை உரும் - மின்னலுடன் கூடிய இடி. நாம - அச்சந்தரும். மதிவல் உள்ளம் - ஆழ்ந்த அறிவுடன் கூடிய சிந்தனை. ஆடி - ஆராய்ந்து. அமரா

முகத்தினள்– மாறுபட்ட முகத்தினளாய். தலைவனுக்குக் கூற வேண்டியதை, இவ்வாறு அவன் கேட்கத் தலைவியிடம் கூறுகிறாள்.

**உயிர்பகுத் தன்ன உறவு**

தலைவி தோழிக்குத் தன் களவை முழுமையாகத் தெரிவிக்க வில்லை. தோழியோ தலைவியுடன் ஓருயிர் ஈருடல் போலப் பழகுபவள். அதாவது ஒருயிரை இரண்டாகப் பகுத்து, இரண்டு உடம்பில் வைத்தாற் போன்ற உறவுடையவள் தோழியாதலின், அவளுக்கு 'மறைத்த செய்தி' தெரிந்து விட்டது. இதைப் பார்த்த தலைவி, தான் தவறு செய்து விட்டதாக அழுதாள். அதற்குத் தோழி தனக்கும் அவ்வாறு ஒன்று நிகழ்ந்ததாகப் படைத்து மொழிகின்றாள்; பொய்யாகக் கட்டிச் சொல்கின்றாள். தினைப்புனம் காத்துக் கொண்டிருந்த போது ஒருவன் இடையிலே வந்தான். அவன் கண்ணி சூடியவன், கழலணிந்தவன், மாலை யணிந்தவன். அவன் குளிர்ச்சி பொருந்த என்னைத் தழுவிக் கொண்டான். அன்றிலிருந்து அதையே நினைத்துக் கொண்டு, யானடைந்த பசலைநோய் இவ்வாறானது, என்று தோழி கூறினாள்.

இதைக் கேட்ட தலைவி தனக்கு நேர்ந்ததைத் தோழி தனக்கு நேர்ந்ததாகக் கூறியதை விளங்கிக் கொண்டாள். தலைவி ஆறுதலடைய வேண்டுமென்றே தோழி இவ்வாறு படைத்து மொழிந்தாள்.

**பகலெரி சுடரின் மேனி சாயவும்**
**பாம்பூர் மதியின் நுதலொளி கரப்பவும்**
**எனக்குநீ உரையாய் ஆயினை நினக்கு யான்**
**உயிர்பகுத்தன்ன மாண்பினேன் ஆகலின்**
**'அது' கண்டிசினால் யானே என்றுநனி**
**அழுதல் ஆன்றிசின்! ஆயிழை!**

**ஒலிகுரல்**

ஏனல் காவலின் இடையுற்று ஒருவன்
கண்ணியன் கழலன் தாரன் தண்ணெனச்
சிறுபுறம் கவையின னாக அதற்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃதா கின்றுயான் உற்ற நோயே. (128)

பகலெரி சுடர் என ஒரு தொடர் உருவாக்கப்பட்டு, செறிவுடன் காணப்படுகிறது. பகலில் எரியும் விளக்கு ஒளி வீசாது மங்கியே காணப்படும். தலைவியின் மேனி அழகு அது போல் மங்கிவிட்டதாம். மதி பாம்பினால் (இராகுவினால்) பற்றப்பட்டதைக் 'கிரகணம்' என்பர். ஆன்றிசின் - நிறுத்து. ஒலி குரல் ஏனல் - தினைக்கதிர் தழைத்தமை. சிறுபுறம் - முதுகு. கவையினன் - தழுவினன்.

தலைவி தன்னிடம் எதனையும் மறைக்க முடியாது என்பதைத் தோழி இவ்வாறு படைத்து மொழிந்து கூறினாள்தல் வேண்டும். தோழியின் காதல் என்று புனைவது மரபன்று; அப்படி வருமாயின் அவள் தலைவி என்று கருதப்படுவாள். இப் பாடலுக்குத் தலைவி தோழியிடம் அறத்தொடு நின்றது (தன் காதலை வெளிப்படுத்தியது) என்றும் கூற்று விளக்கம் குறித்துள்ளனர். பாடியவர் யார் கூற்று எனக் குறிப்பதில்லை. பாடலுக்குள் அதற்கான வழிகாட்டுதல் இருக்கும்; பாடலைப் படிப்பவரே அதை உய்த்துணர்வர். இதுவே முன்னம் என்ற கோட்பாடாகும்.

### அன்னை கூறிய புன்னையின் சிறப்பு

இளையோர் சிறு விதையை அல்லது அது போன்ற ஒன்றை, மணலுள் வைத்து மறைத்துக் கண்டு பிடிப்பதாக விளையாடுவர். தலைவியும் தோழியரும் அங்ஙனம் விளையாடிய புன்னை விதையை, மணலுள் வைத்தவர்கள் மறந்துவிட்டனர். அது மழையால் ஊன்றப்பட்டு, முளைவிட்டுத் தழைக்கத் தொடங்கியது. அதைப் பார்த்த அவ் இளம் மகளிர் அதைத் தமக்கு உறவுடையது போலக் கருதி வளர்த்தனர். தலைவி தனக்குத்

தரப்பட்ட நெய்பெய் தீம்பாலையும் அதற்கு ஊற்றி பாசத்தோடு வளர்த்தாள். இதைப் பார்த்த அவளுடைய தாய் அடிக்கடி உங்களைவிட உங்கள் தங்கையாகிய புன்னை சிறந்தவள்; அவள் அடமே செய்வதில்லை என்று கூறுவாள். அதனால் புன்னைக்கும் இளம் மகளிர்க்குமுள்ள உறவு வலுப்பட்டது.

பின்னர் ஒருநாள் தலைவி தன் காதலனை அப் புன்னை மர நிழலில் சந்தித்தாள். காதலன் அவளுடன் அன்பாகப் பழகிய போது, தலைவிக்குக் கூச்சமாக இருந்தது. காரணம் அவளுக்கு அப் புன்னை மரமாகத் தோன்றவில்லை; தங்கையாகத் தோன்றியது. அவள் தன் காதலனிடம் அப் புன்னையின் சிறப்பைக் கூறி என் தங்கையின் முன் உம்முடன் நகையாடி விளையாடுவதற்குக் கூச்சமாக இருக்கிறது. நீங்கள் விரும்பினால் மணமுள்ள நிழல்தருமிடங்கள் இக் கடற்கரைக் கண்ணே பலவுள. அங்கு நாம் செல்வது நல்லது என்றாள்.

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நறைபடு நீழல் பிறவுமார் உளவே (172)

விளையாடு ஆயம் - தோழியர் கூட்டம். காழ்முளை புன்னையின் முதிர்ந்த விதை. அகைய - தழைக்க, முளைவிட்டு வெளிவர. நெய்யைக் கலந்த இனிய பாலை ஊற்றி வளர்த்தனர். அது புன்னை மரமாக வளர்ந்தது. அவளின் தாய், 'உங்களைவிட உங்கள் தங்கையாகிய புன்னை மிக நல்லவள்' என்று அடிக்கடி புன்னையின் சிறப்பைக் கூறினாள். அதனால் 'உம்முடன் இவ்விடத்தே நகையாட (விளையாடிப்பேச) யான்

வெட்கப்படுகின்றேன்'. புதிய பாணரின் விளரிப்பண்ணிசை போல வெண்ணிற வலம்புரிச் சங்குகள் ஓசை எழுப்பும் கடற்கரைத் தலைவனே! நீர் விரும்பினால் வேறிடங்களும் பலவுள என்றாள், தலைவி. வான்கோடு – வெண்ணிறச் சங்கு. நரலும் – மெல்லிதாய் ஒலிக்கும். கொண்கன் – நெய்தல் தலைவன். நல்கின் – விரும்பினால். நறை – மணம்.

மரத்துடன் உறவாடும் இது, மக்கள் எந்த அளவு இயற்கையுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகிறது. தமிழ் அறிஞர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டி, விளக்கி மகிழ்ந்த பாட்டு இது.

**நம்பிக்கையே வாழ்க்கை**

மனித வாழ்க்கையை நம்பிக்கைகள்தான் நடத்துகின்றன. நம்பிக்கைகளில் நல்லனவும் உண்டு; அல்லனவும் உண்டு. எனினும் அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பதுபோல, மூடநம்பிக்கையோ, நன்னம்பிக்கையோ எதுவாயினும் மனித மனத்திற்கு ஓர் ஊன்றுகோல் தேவைப்படுகிறது.

மாந்தர்கள் கனவு காண்கின்றனர். அவர்களுக்கு நிகழ்காலம் இருள்போலவும் எதிர்காலம் விடிவெள்ளி போலவும் தோற்றுகின்றன. எனவே நாளைக்கு நடக்கும், வருங்காலம் சிறக்கும் என்று கருதிக் கருதி, நிகழ்காலத்தில் மகிழ்ச்சியடைய முற்படுகின்றனர்.

தலைவன் பிரிய எண்ணுகிறான் என்று தோழி அதை ஒரு குறையாகச் சொல்கிறாள். அதற்குத் தலைவி தன் காதலரின் உயரிய பண்புகளைக் கூறி மறுக்கின்றாள். நற்றிணையின் முதற்பாடலே நம்பிக்கை ஒளிவீசித் திகழ்கிறது.

'அவர் சொன்ன சொல் தவறாதவர், நினைக்குந் தோறும் இனிமை தருபவர். என்னைப் பிரிய நினைக்கமாட்டார்.

தாமரையில் மகரந்தப் பொடியை ஊதி, மலைமேலே

சந்தனமரத்தில் கூடுகட்டினால், அத்தேனிறால் எத்துணை இனிமையும் மணமும் உடையதாயிருக்குமோ அது போன்றது மேலோர் நட்பு.

மேலோர் கேண்மை என்றும் மேன்மையுடையதாகவே இருக்கும். மழையின்றி அமையாத உலகம் போல நமக்கு அவரின்றி வாழ்க்கையில்லை என்பதை அவர் நன்கறிவார். அவர் நம்மிடம் விரும்பி அருள்கொண்டு, பிரிந்தால் நம் நெற்றி அழகு கெடும் என்பதை உணர்வார். எக் காரணத்தைக் கொண்டும் செய்வதறியாது சிறுமைசெய்யமாட்டார்!

**நின்ற சொல்லர் நீடுதோ றினியர்**
**என்றும் என்தோள் பிரிபறி யலரே**
**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீந்தேன் போல**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீரின் றமையா உலகம் போலத்**
**தம்மின் றமையா நம்நயந் தருளி**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ செய்பறியரே** (1)

மீமிசை – மலைமேலே. சாந்து – சந்தன மரம். புரை – மேன்மை புரையோர் – மேலோர். சிறுமை – சிறிய செயல், பிரிவு.

## மகளிர் குறும்பு

காதல் வாழ்க்கை என்பது ஆணும் பெண்ணும் பாலுறவு கொள்வதே என்ற எண்ணம் முற்றிலும் தவறானது. திருவள்ளுவர் கூடலைவிட ஊடல் இனிது என்பார். ஒருவரை ஒருவர் ஏதிலார் போலச் சீண்டுதல், சிரித்து விளையாடுதல், சிற்சில குறும்புகள், அளவான சிணுங்கல்கள், கடமைகளில் இணைந்து பணியாற்றுதல், பிரிதல், நினைதல், போற்றுதல், தேற்றுதல் என வாழ்ந்து பார்க்க வேண்டுவன பலவாகும்.

தலைவன் தலைவியைக் காண வருவதாகச் சொன்னான். குறியிடத்தில் தலைவியும் தோழியும் நீண்ட நேரம் காத்திருந்தனர். காலம் தாழ்த்து, அவனுடைய தேர்வரும் ஓசைகேட்டது. உடனே தோழி தலைவியிடம், 'நாம் இருவரும் புன்னை மரத்தின் அடியில் சிறிதுநேரம் ஒளிந்து கொள்வோம். நம்மைக் காக்க வைத்த அவன் நம்மைக் காணாது திகைத்து அல்லற்படுவதை நாமும் கண்டு மகிழ்வோம். வா', எனச் சொல்லி அழைக்கின்றாள்.

'பெரிய தேர்வரும் மணிஒலி கேட்கிறது. தேருடன் வரும் இளையர் எழுப்பும் ஓசையும் கேட்கிறது. அகன்ற கடலிடத்தே நீராடிமகிழும்போது, நின் அழகுவிளங்கும் இடையைப் பாராட்ட கடற்கரைத் தலைவன் வருகின்றான். நாம் உடனே புன்னை மரத்தின் முழவு போன்ற அடியில் மறைந்து கொள்வோம், வா! இந் நடுயாமத்தில் மரச்சோலையில் அவன் வந்து நம்மைக் காணாது அல்லற்படுவதைச் சிறிது காண்போம்!' எனத் தோழி தலைவியை அழைக்கின்றாள்.

கவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்
பெயர்பட இயங்கிய இளையரும் ஒலிப்பர்
கடலாடு வியலிடைப் பேரணிப் பொலிந்த
திதலை அல்குல் நலம்பா ராட்டிய
வருமே தோழி வார்மணற் சேர்ப்பன்
இற்பட வாங்கிய முழவுமுதற் புன்னை
மாஅரை மறைகம் வம்மதி பானாள்
பூவிரி கானல் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணாதவன்
அல்லல் அரும்படர் காண்கநாம் சிறிதே (307)

கவர்பரி – விரைந்து ஓடும் குதிரைகள். பெயர்பட – இடத்தை விட்டு விரைந்து. பேரணி – ஒப்பனை. திதலை – அழகுத்தேமல். வார்மணல் – நீண்ட கடற்கரை. வம்மதி – வா. பானாள் – நள்ளிரவு. கானல் – கடற்கரைச் சோலை.

## தடுமாறுகிறாள் தலைவி

ஒரு கடுந்துன்பம் நேர்ந்தால் மனம் தடுமாறும்; வாய் ஏதேனும் புலம்பும். மூடிய குடத்துள் தண்ணீரை நிரப்பிக் கொதிக்க வைத்தால், உள்ளிருந்து எழும் ஆவியால் குடம் ததும்பும். தலைவியின் களவுக்காதல், ஓரளவுக்குமேல் போய்விட்டது. தலைவன் வரையாது வந்தொழுகுவதே காரணம். தாயர்க்கும் ஐயங்கள் அடிக்கடி ஏற்படத் தொடங்கின. இதைத் தலைவனுக்கு அறிவிக்க வேண்டும். அவன் வந்து, வீட்டருகே கேட்கும், அண்மையனாக நிற்கின்றான். தலைவி தோழியிடம் பேசுவதுபோல், அவன் காதுகளில் விழ, நடந்ததாகவோ கற்பனையாகவோ ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறாள்.

காலையில் மலைமீது முகில்கள் தவழ்கின்றன. அங்கிருந்து கடலலைபோல அருவி வெள்ளமாக ஓடிவருகிறது. அது அகன்ற காட்டில் ஆறாக ஓடித் தங்குகிறது. அது அவனுடைய ஊரிலிருந்து வருகிறது என்பதால் கரையிலே அமர்ந்து பார்க்கின்றாள். கண்ணீர் பெருகுகிறது. அதைத் தாங்கமுயன்றும் முடியாமல், கண்கள் முழுவதும் நீர் சுழல்கின்றது. இவ்வாறு அவளுடைய அழகிய கண்களில் நீர்வடிவதைப் பார்த்த அன்னை, ‘என்னடி ஆனது? என்ன செய்தாய்?’ என்று கூறி, முத்தம் கொடுத்து அன்புடன் வினவுகின்றாள்.

அப்போது தலைவி உயிரினும் சிறந்த நாணையும் மறந்து, உண்மையை உளறத் தொடங்கிவிட்டாள். மலைச்சாரலில் காந்தட் பூக்களில் தேனுண்ட மணிநிறத்தும்பி, இனிய யாழ் நரம்புபோல இசைக்கும், வானளாவிய மலைநாடனின் மார்பினால் வந்த துன்பம் எனக் கூறத் தொடங்கி, நினைவு வர நிறுத்திக்கொள்கிறாள்.

**நாள் மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து**
**மால்கடல் திரையின் இழிதரும் அருவி**
**அகலிருங் கானத்து அல்கு அணி நோக்கித்**

தாங்கவும் தகைவரை நில்லா நீர்சுழல்பு
ஏந்தெழில் மழைக்கண் கலுழ்தலின் அன்னை
எவன்செய் தனையோ நின் இலங்கெயிறு உண்களென
மெல்லிய இனிய கூறலின் வல்விரைந்து
உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்து
உரைக்கலுய்ந்தனனே தோழி சாரல்
காந்த ளூதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நாம்பின் முரலும்
வான்தோய் வெற்பன் மார்பணங்கு எனவே (17)

நாள் மழை - காலை மேகம். மால் கடல் திரையின் - பெரிய கடலலைபோல. அல்கு அணி - ஊரருகே வந்து தங்கும் ஆற்றின் அழகு. தகைவரை நில்லா - அடக்க முயன்றும் அடங்காமல். எயிறு - பல்வரிசை. எயிறு உண்கு - முத்தம் கொடுக்க.

மணமகள் புதிய மண-மகளானமை

உடலில் நறுமணம் வேண்டுமென்று, பலவகை நறுமணப் பொடி, மா, ஆவி வகைகளைப் பயன்படுத்துகின்றனர். முன்பு பலவகை நறுமண மலர்களை அணியாகவும் ஆடையாகவும் பயன்படுத்தியதாலும் சந்தனம் அகில் முதலியவற்றை அரைத்துப் பூசிக் கொண்டதாலும் நறுமணப் புகைகளைத் தலைமுடி, உடம்புக்குப் படியச் செய்ததாலும் மாந்தர்கள் ஆணும் பெண்ணும் நறுமணமுடன் திகழ்ந்தனர்; வியர்வை நாற்றம் விலகிப்போனது.

இவையே 'பூசனை' ஆகும். மாந்தன் தனக்குப் பயன்படுத்திய இவை, இன்று இறைத் திருமேனிகட்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தலைவன் வரைவு இடைவைத்துப் பொருள்தேடப் போய்த் திரும்பிவந்தான். அவனை விரைவில் வரைக எனத் தூண்ட நினைத்த தோழி, முன்பு நடந்த ஒன்றைக் கூறினாள்.

தலைவன் விரைவில் மணப்பதாகக் கூறிக் காலம் கடத்தியதால், சினம் பொங்கத் தொடங்குகிறாள், தோழி.

'ஓங்கு மலை நாடனே! உன் வாய்மை எல்லாம் போய் ஒழியட்டும்! மூங்கில்கள் அடர்ந்த கற்பாறைகளிடையேயுள்ள சிறிய வழியில், விலங்குகளால் ஏற்படும் இடர்களை எண்ணாது இரவிலே வந்து, இவள் மார்பைத் தழுவிக் கொண்டாய்.

உன் உடம்பில் பலவித நறுமணப் பொருள்களைப் பூசியிருந்ததால், அவை இவளுடம்பிலே பட்டு அதன் காரணமாக வண்டுகள் இவள் உடலிலே மொய்க்கலாயின.

புதிய மணம் கமழ்வதைத் தன் கண்களால் கொல்பவள் போல் பார்த்த அன்னை, 'முன்பும் நீ இத்தகைய மணம் உடையையோ' என வினவினாள். அதற்கு விடை கூற முடியாமல் சோர்ந்து, தலைவி என் முகத்தை நோக்கினாள். இவள் இதற்கு ஏற்ற விடை கூறி எங்ஙனம் தப்பிக்கப் போகிறாள் என எண்ணி நான் விடை கூறினேன். 'அன்னையே! இதோ பார்! நெருப்பிலிட்ட சந்தன விறகு! இதை அடுப்பிலிட்டதும் அதிலிருந்த வண்டுகள் இவளுடம்பில் மொய்த்தன', என்று கூறிக் காப்பாற்றினேன் என்றாள், தோழி.

**ஓங்குமலை நாட! ஒழிகநின் வாய்மை!**
**காம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி**
**உறுபகை பேணாது இரவின் வந்துஇவள்**
**பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்பு**
**அறுகாற் பறவை அளவில மொய்த்தலின்**
**கண்கோளாக நோக்கி,**
**பண்டும்**
**இனையை யோவென வினவினள்யாயே**
**அதனெதிர் சொல்லா ளாகி அல்லாந்து**

என்முகம் நோக்கி யோளே அன்னாய்
யாங்குணர்ந்து உய்குவள்கொல்என மடுத்த
சாந்தம் ஞெகிழி காட்டி
ஈங்கா யினவால் என்றிசின் யானே (55)

காம்பு – மூங்கில். தலைமணந்த – அடர்ந்துள்ள. அறுகாற் பறவை – வண்டு. கோளாக – கோள் – கொல்லுதல். அல்லாந்து – சோர்ந்து. யாங்குணர்ந்து உய்குவள் – எவ்வாறு சிந்தித்து இதற்கு விடை கூறித் தப்பிப்பாள். மடுத்த – அடுப்பிலிட்ட . ஞெகிழி – சந்தன விறகுக் கட்டை. ஈங்காயின – இதனால் ஆனது.

தலைவனின் நடிப்பு

காம உணர்வு பசி போன்றது. அதனால் உணவுக் கட்டுப்பாடு உடல்நலத்தைக் காப்பதுபோல், இதிலும் சில வரன்முறைகள் வேண்டும். ஆசைக்கு இரையாகிவிடக் கூடாது. ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள் என்பது பழமொழி. அதனால் இதில் மிகுந்த தயக்கமும் எச்சரிக்கையும் வேண்டும்.

ஆடவர் மனம் சலனப் படுவது, மகளிர் மனம் எளிதில் அலைபாய்வதில்லை.

தலைவன் முதலில் மிகுந்த அன்புடையவனாக நடித்தான். பிறகு விரிந்து கொடுமை செய்பவனாக மாறிவிட்டான். இதைச் சொல்லுகிற விதம், பாடலில் மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்கிறது.

இவள் கையைக் கொண்டு அவன் கண்ணில் ஒற்றிக் கொண்டானாம். அவன் தன் கையால் இவள் நெற்றியைத் தடவிக் கொடுத்தானாம். அன்னை போல இனிமையாகப் பேசினானாம். ஆனால் கள்வர் போலக் கொடுமையாக நடந்து கொண்டானாம்.

நீலமணி போல் கொட்டும் அருவியையும் பொன்போன்று பரந்த, வேங்கைப் பூக்களையுமுடைய உயர்ந்த மலையடுக்கத்தில், அசையும்

தண்டுயர்ந்த, பசிய கணுக்களையுடைய மூங்கில், ஓடும் மேகத்தைக் கிழிக்கும் உயர்ந்த மலைநாடன் அவன்.

என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியும்
தன்கைக் கொண்டுஎன் நன்னுதல் நீவியும்
அன்னை போல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன் மாதோ
மணியென இழிதரும் அருவிப் பொன்னென
வேங்கை தாய ஓங்குமலை அடுக்கத்து
ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடுமழைகிழிக்கும் சென்னிக்
கோடுயர் பிறங்கல் மலைகிழ வோனே (28)

கழை - தண்டு. பைங்கண் - பசிய கணுக்கள். ஓடு மழை - மலைமீது ஓடும் மேகம். சென்னிக் கோடு - மலை உச்சி. பிறங்கல் - மலை.

நிலவு அறியாத நிலவுலகமும் உண்டோ?

காதல் வெளிப்பட்ட பிறகு திருமணம் நடக்க வேண்டும். காதலன் வரைவிடை வைத்துப் பொருள் தேடிச் சென்று நெடுங்காலம் ஆயிற்று. எங்குள்ளான், எப்பொழுது திரும்புவான் என்று தெரிய வில்லை. இதனால் மனம் வருந்திய தலைவி, மதியத்துடன் மனம் நொந்து பேசுகிறாள்.

பல கதிர்களை இணைத்தது போன்றும் பாலை முகந்துவைத்தாற் போன்றும் முழுநிலவு ஒளிவீசுகிறது. மலைமேல் மால்பு - கண்ணேணி வைத்து அறிய முடியாத, எல்லாக் கலைகளும் நிறைந்த முழுமதியே! நீ பண்பும் நடுவுநிலைமையும் உடையை. உனக்குத் தெரியாமல் மறைந்திருக்கக்கூடிய உலகம் என்று எதுவும் இருக்க முடியாது. ஆதலின் எனக்குத் தெரியாது மறைந்திருக்கும் என் காதலன் உள்ள இடத்தை எனக்குக் காட்டுவாயாக! நீ அறிந்திருந்தும் சான்று கூறாது பொய்க்கலாமா?

நல்ல அழகை இழந்த என் தோள்போல் மெலிந்து, சிறுகச்சிறுகக் குறைந்துபோதலினால், உன்னால் காட்ட முடியாது போலும்!

பங்குசெறிந் தன்ன பல்கதிர் இடையிடைப்
பால்முகந் தன்ன பசுவெண் நிலவின்
மால்பிடர் அறியா நிறையுறு மதியம்!
சால்பும் செம்மையும் உடையை ஆதலின்
நிற்கரந்து உறையும் உலகம் இன்மையின்
எற்கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்!
நற்கவின் இழந்தஎன் தோள்போற் சாஅய்ச்
சிறுகுபு சிறுகுபு செரீஇ
அறிகரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே (196)

மால்பு - ஏணி. நிறையுறு - கலைகள் நிறைந்த. கரி –சான்று. மதியம் அறிந்திருந்தும் சான்று கூறவில்லை எனத் தனக்குள் சொல்லி அழுகின்றாள்,

**கருநிற வண்டே, நின் அறிவும் கரிதோ?**

களவு வெளிப்பட்டபின் வரையாது தலைவன் நெட்டிடைக் கழிந்து பொருள்வயிற் பிரிந்தான். அவன் திரும்புவதாகத் தெரியவில்லை. இந்நிலையில் ஆற்றாமையால் தலைவி ஒரு தும்பி வண்டிடம் தன் வருத்தத்தைக் கொட்டுகிறாள். அறிவுள்ள வண்டாக இருந்தால், தலைவன் இருக்குமிடம் சென்று தனது துன்புற்ற நிலையை எடுத்துக் கூறியிருக்கும்; ஆனால் இதற்கோ உடம்புபோல் அறிவும் கருப்பாகிப்போனது என்று வருந்துகின்றாள்.

தும்பியே! எம் மனையைச் சுற்றிக் காவலாய்க் கிடக்கும் கூரிய முள்ளையுடைய வேலியில் படர்ந்திருக்கும் தேனொடு தழைத்த, குலை கட்டிய பீர்க்கம்பூவில் தேனுண்டாய். அதினின்றும் வேறுபட்ட என் பசலையில் மணம் இன்மையின் அதில் ஊதி முரன்றாயல்லை. உன்

பிணையான சிறிய பெண் வண்டுக்காக ஓடி அதற்கு நெஞ்சு நெகிழும்படி கூடி இன்பம் தந்தாய். என்பால் அன்பிலராய், வெப்பம் மிக்க அரிய சுரவழியிலே பிரிந்து போனவர்க்கு, அங்கு சென்று அவரை இங்கு வருமாறு செய்ய, என் நிலையைக் கூறமாட்டாய்! அறநெறி இல்லாத வண்டே! நின் உடம்புதான் கருமையன்றியும் அறிவும் கரிதோ? கூறாய்! நீ கொடியை! யான் இதை உனக்குக் கூறியதனால், இனி இறந்தொழி வேனாக!

கொடியை வாழிதும்பி! இந்நோய்
படுகதில் அம்ம, யான் நினக்கு உரைத்தென,

மெய்யே கருமை அன்றியும், செவ்வன்
அறிவும் கரிதோ! அறனிலோய், நினக்கே!

மனைஉறக் காக்கும் மாண்பெரும் கிடக்கை
நுண்முள் வேலித் தாதொடு பொதுளிய
தாறுபடு பீரம் ஊதி, வேறுபட
நாற்றம் இன்மையின் பசலை ஊதாய்!

சிறுகுறும் பறவைக்கு ஓடி, விரைவுடன்
நெஞ்சுநெகிழ் செய்ததன் பயனோ? அன்புஇலர்
வெம்மலை அருஞ்சுரம் இறந்தோர்க்கு
என்னிலை உரையாய் சென்றுஅவண் வரவே. (277)

தும்பி – ஒருவகை வண்டு, வாயில் நீண்ட உட்துளையுடையது. படுகதில் – இறந்தொழிக! கிடக்கை – வீட்டைச் சுற்றிக் கிடத்தல். வேலியில் படர்ந்த கொடியில் பூத்துக் காய்த்த பீர்க்கு. குறும்பறவை– சிறிய பெண் வண்டு. தூது போய் வரச் சொல்லாத வண்டைக் கடிகின்றாள். தனக்குள் போராடும், துன்பமிகுதியின் வெளிப்பாடு இது.

காதல் வாழ்வில் வருத்தம் மிகும்போது கிளி (102), தினை (251), குருகு (54, 70), கூகை (83), வாடை (193) என இவ்வாறு பலவற்றொடும் பேசி மனக்கவலைக்கு ஒரு வெளிப்பாடு தேடிக் கொள்கின்றனர்.

ஆறாத்துயரம்

தலைவன் வினைவயிற் பிரிந்தவன் திரும்பிவரவில்லை. காத்திருந்து காத்திருந்து தலைவி நம்பிக்கை இழந்தாள். தோழி ‘வந்து விடுவான்’ என்று கூறித் தேற்றவும், அவள் தனது பேரவல நிலையைக் கூறி ‘ஆற்றியிருக்க முயல்வேன்’ என்று மறுமொழிகின்ற கட்டம் இது. ‘சாவு நெருங்குவதை அறிகிறேன். நாள் கடந்ததாகத் தோள் மெலிந்தது. நீண்ட பாலைவழியில் போனவர் திரும்புவாரோ என்று பார்த்துப் பார்த்துப் பார்த்த கண்கள் பூத்துப் போயின; ஒளி இழந்தன. என் அறிவும் என்னைக் கைவிட்டு மயக்கமுற்று என்னை விட்டு நீங்கி விட்டது. சாவதற்குமுன் வந்த நோய் தீர்ந்து முடியும் என்பார்கள். போதாதற்கு மாலையும் வந்து விட்டது’ இனி என் நிலை யாதாகுமோ, யான் அறியேன். பிறந்தவரெல்லாம் சாவதுறுதியே. அதனால் நான் சாவதற்கு அஞ்ச வில்லை. ஒருவேளை நான் இறந்து, அடுத்த பிறப்பு வேறுபட அமையுமானால், என் காதலனை மறக்க நேருமோ என அதற்கே அஞ்சுகின்றேன்’.

தோளும் அழியும் நாளும் சென்றென
நீளிடை அத்தம் நோக்கி வாளற்றுக்
கண்ணும் காட்சி தௌவின என்நீத்து
அறிவும் மயங்கிப் பிறிதாகின்றே
நோயும் பேரும் மாலையும் வந்தன்று
யாங்காகுவென் கொல் யானே ஈங்கோ
சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்புப் பிறிதாகுவது ஆயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே (397)

அத்தம் – பாலைவழி. நோயும் பேரும் – சாகுமுன் அவருக்குற்ற நோய் போய்விடுமாம். இதனை ‘தெளிவு கொடுக்கிறது. இது சாகுமுன் ஏற்படுவது’ என்பர். பின்னத்தூர் அ.நாராயணசாமி அய்யர், ‘இறக்குமுன் நோய் காடேறிற்று என்னும் வழக்கு’ என எழுதுகிறார்

மனைவி எத்துணைக் கொடிய தன்மையளாயினும் அவள்பால் அன்பு செலுத்தும் கணவன்மார் உண்டு; கணவன் மீது கொண்ட காதலால் அவன் குடிகாரன், கடமை தவறுபவன் என்றாலும் அவன் மீதே அன்பு செலுத்தும் மனைவியரும் உளர். இத்தகையார் உலகில் அருகிக் காணப்படினும், குடும்பவண்டி குடைசாய்ந்து விடாமல் காப்பாற்றுபவர் எனக் கருதவேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவரை விட்டு ஒருவருக்கு விடுதலை என்பது சீரழிவு; இருவருக்கும் 'சமனிலைப் பாடு' என்பதே சீர்பெருக்கும்.

### உடன்போக்குத்தான் ஒரேவழி

காதல் வாழ்வில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறியும் காதலித்தபின் கண்டபடி தடுமாறாது அவளுக்கு அவன் எனவும் அவனுக்கு அவள் எனவும் நிறைகுறைகள் அனைத்தையும் பொறுத்து ஏற்று ஒன்றுபட்டிருப்பதே உலக மன்னாயம் உய்ய வழி. சின்னச்சின்ன மனவேறுபாடு, குறைகளுக்குக் கூட கணவன், மனைவி என்ற புனிதமான – உலகின் உயர்ந்த உறவுநிலையை மாற்றிக் கொண்டே இருப்பது அவரவர் உடலுக்கும் கேடு; உள்ளத்திற்கும் கேடு; உலகிற்கும் கேடு.

இருவரும் காதல் கொண்டனர்; பெற்றோர் ஒப்பவில்லை பழங்காலத்தில் ஆயிரம் குறைகளுக்குள்ளே, ஒரு நற்குலப் பெண் தன்னைத் தொட்டவனைத் தவிர வேறுஒருவனை மனத்தால் ஏற்கவும் ஒப்பமாட்டாள்.

இதனால் அக்காலச் சமுதாயத்தில் – மன்னாய வாழ்வில் 'உடன் போக்கு' ஏற்கப்பட்டது. அதையே ஒரு திருமணமாக நம்பிய காலம் உண்டு. பின்னர் உடன்போனவர்களுக்கு காதலன் வீட்டிலோ, திரும்ப அழைத்துவந்து தலைவி வீட்டிலோ திருமணம் செய்துவைக்க வேண்டும் என்ற கட்டாயம் உருவானது. கற்பு என்பது சொல் மாறாதது, கொள்கை மாறாதது, கணவன் மனைவி என்ற உறவும் மாறாதது.

இதனால் ஊரார் பழிச்சொல் கூடியதும் தலைவி தலைவன் அழைத்தபடி, உடன்போக வேண்டியதாயிற்று.

'ஊரில் சிலரும் பலரும் கடைக்கண்ணால் பார்த்து, மூக்கின் உச்சியில் சுட்டுவிரலைவைத்து, தெருக்களில் கூடிப் பழிச் சொல் பேசினர். இவர்கள் காதலைப் பற்றி அம்பல் தூற்றினர், கிசுகிசுத் தனர். இதை அறிந்த தாய் கோலெடுத்து, அடித்துத் துன்புறுத்தினாள். கடற்கரைச் சோலையிலுள்ள பூமணக்கும் பிடரி மயிரையுடைய குதிரைகள் பூண்ட தேரைச் செலுத்திக் கொண்டு நள்ளிருளில் வரும் கொண்கனொடு (கடற்கரைத் தலைவன்) யான் உடன்போகச் சம்மதித்து விட்டேன். இனி இவ் அழுங்கல் ஊர் அலர்சுமந்து ஒழியட்டும்!' இவ்வாறு மகளிர் வருந்துகின்றனர்.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகின் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச் சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந்திசினால் யானே
அலர் சுமந்து ஒழிக இவ் அழுங்கல் ஊரே (149)

மறுகில் பெண்டிர் – தெருவில் திரியும் பெண்டிர், இகழ்ச்சிக் குறிப்பு. அம்பல் – சைகை காட்டி முணுமுணுத்தல். முதல் இரண்டு அடிகளில் உள்ள மெய்ப்பாடு, இன்றும் சிற்றூர்ப் புற மகளிரிடம் காணப்படுகிறது. சுவல் – குதிரையின் பிடரி. அது பூமாலை சூடி மணம் கமழ்கிறது. கடுமா – விரைந்தோடும் குதிரை. கொண்கன் – நெய்தல் நிலத் தலைவன். இதுவே கணவன் என மருவிற்று. அழுங்கல் ஊர் – புழுங்கும், பொறாமைப் படும் ஊர். இதுவே அழுக்காறு என ஆயிற்று.

**மகட் போக்கிய தாயின் அவலம்**

தன் மகள் காதலனுடன் போய், அங்கு ஏழைக் குடும்பத்தில் எளியவாழ்வுடன் இன்புற்றிருப்பதைத் தாய் கேள்விப்பட்டாள். இவர்கள் வீடு செல்வச் செழிப்புமிக்கது. தேன் கலந்த சுவைமிக்க பாலை, பொன் கலத்திலே ஏந்தி, சுற்றிலும் பூச்சுற்றிய சிறுகோலைக் கொண்டு பாலைக் குடி என்று, அக் கோலால் ஓங்கி அடிக்கவும் அதற்கு இசையாளாய் இங்கும் அங்கும் ஓடுவாள். நரைத்த கூந்தலையுடைய முதுமையடைந்த செவிலியர் பின் தொடர்ந்து ஓட முடியாமல் அயர்ந்து போவர். முத்து அரிகளையுடைய சிலம்பொலிக்க ஓடி, ஏவியதை ஏற்காமல் 'உண்ணேன்' என்று கூறி சிறுவிளையாடும் இச் சிறுமி, இத்தகைய அறிவையும் ஒழுக்கத்தையும் எங்கே அறிந்து கொண்டாள். தான் கைப்பிடித்த கணவன் குடி வறுமை வாய்ப்பட்டதாக, தன் தந்தை உதவ முன்வந்து கொடுத்த வளம் மிக்க உணவை பெறுதற்கு இசையாத மனம் படைத்தவளானாள். ஒரு நாளைக்கு ஒரு பொழுது மட்டும் உண்டு வாழும் மனவலிமையுடையவளாயினாள். இஃது வியப்பாயுளது!

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொன்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முதுச் செவிலியர்
பரீஇ மெலிந்தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்த தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்குஅறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமதுகையளே! (110)

பிரசம் – தேன். கதிர் – ஒளி. புடைப்பு – பக்கம். ஓக்குபு – அடிக்க ஓங்கி. தெண்ணீர் – தெளிந்த நீரோட்ட முடைய (முத்து). அரி – சிலம்பின் உள்ளிடு பரல். தத்துற்று – தாவி. பரீஇ – ஓடி (பரிஞ்சிட்டான் என்பர்) ஏவல் மறுக்கும் – ஏவியதைக் கேட்காத. கொழுஞ் சோறு – வளமான உணவு முதலியன. அதைப் பெறவும் நினைக்க மாட்டாளாம். நுணங்கு அறல் – ஆற்றோரம் மணலில் நீரோடும்போது, அம் மணல் அற்று அற்று, இடைவெளிவிட்டுக் காணப்படும். பொழுது மறுத்து – ஒருவேளை உண்டு, மறுவேளை உண்ணாமல். சிறு மதுகையள் – மனி வலிமையுடைய இளையவள்.

## மனைவிக்கு அஞ்சும் பெருந்தகையாளன்

நம் நாட்டைப் பொறுத்தவரை மனைவியே இல்லறத்தின் அரசி. வீட்டில் அவளுக்கு உரிமை அதிகம். இப்படி ஒரு பண்பாடு காலம் காலமாக வளர்க்கப்பட்டுள்ளது.

குடும்ப வாரிசு, குடி வழியைக் காக்க பிள்ளை பெற்றுத் தருபவள் அவளே. புறத்தொழுக்கம் போன தலைவன், மனைவிமுன் தலை கவிழ்ந்தே நிற்கின்றான்.

இன்று பெண்ணே புறத்தொ முக்கம் போவது என்ன கொடுமை? 'அஞ்சவந்த உரிமைக்கண்ணு'ம' என்பார், தொல்காப்பியர் (1092). பரத்தையுடன் தலைவன் ஆ டிப்பாடித் திரிந்தான். அவள் கைவளையலைப் பற்றினான். பிறகு மனைவி பூப்பெய்தியமைக்கு அடையாளமாகச் செவ்வணி அணிந்த மகளிரைத் தூதனுப்பினாள். அக் கால மரபுப்படி, தலைவி பூப்பெய்தியபின் தொடர்ந்து வரும் பன்னிரண்டு நாளும் கணவன் மனைவியைப் பிரியமாட்டான். அக் காலம் பெண்ணுக்குக் கருவுருவாகும் காலம். குழந்தைப் பேறு மிக இன்றியமையாததாகக் கருதப்பட்ட காலம் அது. அதனால் அப் பன்னிரண்டு நாளில் அவன் மனைவியைப் பிரிந்து பரத்தைவீடு செல்லமாட்டான்.

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான (1133)

என்பது தொல்காப்பியக் கற்பியல் சூத்திரம்.

பரத்தை ஒரு தந்திரம் செய்கிறாள். இச் சூழலில் தன்னைப் பிரிந்து வீடு செல்பவனைப் பற்றி, அவன் மனைவி அறிந்து வெறுப்படைய வேண்டுமென்று, தன் தோழியாகிய விறலியிடம் கூறுகிறாள்.

'தலைவன் விளையாட்டாக என் கூந்தலைப் பற்றி இழுத்து, என் வளையல்களையும் பறிக்க முயன்றதால் எங்களுக்குள் பெரிய பூசல் உண்டானது. அப்போது நான் இதை உன் மனைவியிடம் போய்ச் சொல்வேன் என்றதும் அவன் அதிர்ந்துபோனான். மலையன் என்பானின் திருவோலக்கத்தில், வேற்றுநாட்டுக் கூத்தர் வந்து முழக்கிய முழவின் ஓசைபோல நடுநடுங்கிப் போனான். இதை நினைக்குந்தோறும் சிரிப்பாய்வருகிறது', என்றாள் பரத்தை.

உள்ளுதொறும் நகுவேன் தோழி வள்ளுகிர்
மாரிக் கொக்கின் கூரலகு அன்ன
குண்டுநீர் ஆம்பல் தண்துறை ஊரன்
தேங்கமழ் ஐம்பால் பற்றி என்வயின்
வான்கோல் எல்வளை வௌவிய பூசல்
சினவிய முகத்துச் சினவாது சென்று நின்
மனையோட்கு உரைப்பல் என்றலின், முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்
புலம்பிரி வயிரியர் நலம் புரி முழவின்
மண்ணார் கண்ணின் அதிரும்
நன்னராளன் நடுங்களுர் நிலையே (100)

வள்ளுகிர் – கூரிய நகம். மழைக்காலக் கொக்கின் கூரிய அலகு போன்ற ஆம்பல் மொட்டு. ஐம்பால் – கூந்தல். வான் கோல் எல்வளை – வெண்மையான, திரண்ட, ஒளிவீசுகிற சங்கு வளையல்கள். சினவிய முகத்துச் சினவாது – கோபம் இருந்தும் அதை வெளிக் காட்டாமல். பகைவரின் ஆனிரைகளை வில்லினால் போரிட்டுக் கவரும். (மலையனின்) முந்தை – திருவோலக்கம். புலம்பிரி வயிரியர் – இடம் பிரிந்து திரியும் கூத்தர். அவரது மார்ச்சனை பொருந்திய முழவுபோல் தலைவன் அதிர்ந்து நடுங்கி அஞ்சினானாம்.

இதில் தலைவியின் உயர்வும் அதைப் பற்றிப் பரத்தை பொறாமைப் படுவதும் அவனை மீண்டும் தன்வயப்படுத்த முயல்வதும் புலனாகின்றன.

**ஊடல் தணிக்கும் மாமருந்து, விருந்து**

பெரிதும் பரத்தைமை காரணமாகவே தலைவி தன் கணவனிடம் ஊடல் கொள்வாள். பிறவாறு விளையாட்டாக சிறுசிறு கோபம் கொள்பவள் போல் அவள் 'வம்புக்கிழுப்பதுண்டு'. இவையெல்லாம் இன்பப் பொழுது போக்கில் அடங்குவனவாகவும், பரத்தைமையால் கொள்வன மன உளைச்சலின் வெளிப்பாடாகவும் காணப்படும்.

சிறு சச்சரவுடன் இவை முடிந்துவிடும். இவ் ஊடல் தணிப்பவர்களாகப் பாங்கன், பிற வாயில்கள் (தூதுவர்) பலர் குறிக்கப்பெறுகின்றனர். இதிலும் பெரும்பான்மை தோழியின் முயற்சியே பாடல்களில் காணப்படுகிறது. இவர்கள் தவிரப் புதல்வர்களாலும் ஊடல் தவிர்ந்துள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக, விருந்துவரின் தலைவி குடும்பச்சண்டையை வெளிக்காட்டாது மறைத்து, வந்தவர்களுக்கு விருந்தளித்து, அதன் மூலம் ஊடல் தவிர்வாள். இதனால் அக் காலத்தில் கணவன்மார் சிலர், விருந்தினரைக் கூட்டிக் கொண்டு, வீட்டிற்குச் செல்லும் வழக்கமும் இருந்துளது.

தலைவியின் ஊடலைத் தணிக்க எண்ணிய தலைவன் விருந்தினருடன் வீட்டிற்கு வந்தான். எருமைகள் கன்றுகளோடு தூண்தொறும் கட்டிக்கிடக்கும் காட்சி, அவ் வீட்டின் செல்வ வளத்தைக் காட்டுகிறது.

குழையணிந்த காதையுடைய அவன் மனைவி, தனது சிறு மோதிரமணிந்த விரல் சிவக்கும்படி, வாழையின் ஈரத் தண்டினை, மிக முயன்று வகிர்கின்றாள். சமைக்கும்போது எழுந்த புகைபட்டு, அமர்த்த கண்ணளாய், நெற்றியில் வியர்வை படிய, அழகிய துகிலினாலே அதைத் துடைத்துக்கொண்டு, அட்டிலில் விரைந்து வேலைசெய்து கொண்டு நம்மீது புலவியிருந்தாலும் சிரித்துப் பேசி நடந்து கொள்வாள். அதனால் அவள் இனி ஊடல் தவிர்வது உறுதி. இனியும் இதுபோல் எங்கட்குப் புதிய விருந்தினர் வருவார்களாக! வந்தால் கோபம் கொள்ளமாட்டாள். சிறு பல்வரிசை தோன்றப் புன்னகை பூக்கும் முகத்தைக் காணலாகும். இது என்றும் நிகழ்வதாக எனத் தனக்குள் தலைவன் கூறிக்கொள்கின்றான்.

தடமருப்பு எருமை மடநடைக் குழவி
காண்தொறும் யாத்த காண்தகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்சேய் பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த கண்ணள், தகைபெறப்
பிறை நுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே, சிவப்பாள் அன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே (120)

தடமருப்பு - வளைந்த கொம்பு - தூண்தொறும் கன்று கட்டியிருந்தது அந்நாளில் செல்வர்வீடு என்பதைக் காட்டும். குழை -

காதணி. செழும்செய் – செல்வவளம் மிக்க குடும்பப் பெண். தாழ் – மோதிரம். ஈர்ந்தடி – தண்டு. வல்லிதின் வகைஇ – வாழைத் தண்டையே வலிதாக முயன்று வகிர வேண்டியுள்ளது. அத்துணை மெல்லியள் என்பது கருத்து. அமர்த்த அழகுடைய அல்லது போரிடுவது போன்ற. அட்டில் – சமையற்கட்டு. அம் மா அரிவை – அழகிய மாமைநிறத் தலைவி. தில் – விருப்பத்தை உணர்த்தும் இடைச்சொல். சிவப்பாளன்று – முகம் சிவக்கமாட்டாள். எயிறு – பல்வரிசை.

இதன் மூலம் இல்லறம் என்பது விருந்து புறந் தருவதற்கு என்று கொண்ட பழந்தமிழர் பண்பாடு தெரிகிறது.

## இல்லற நாகரிகம்

தலைவன் தலைவியர் பிரிந்திருக்கும் போது தங்களை மிகுதியாக வெளியே பகட்டும்படி ஒப்பனை செய்து கொள்வதில்லை. இது ஓர் இல்லற நாகரிமாகக் கருதப்பட்டுளது. தலைவன் வந்துவிட்டான் என்று தெரிந்தும் தலைவி குளித்து, பூச்சூடி அவனை வரவேற்க ஆயத்தமாகிறாள்.

முன்பு நடந்த இக் காட்சியை, இப்போது பொருள்தேடி தேரில் வீடு திரும்பும் தலைவன் தன் தேர்ப்பாகனிடம் கூறுகிறான். இம்முறையும் அதுபோல் மகிழ்ச்சியுடன் காத்திருப்பாளாதலின், விரைந்து போக வேண்டும் என்பது கருத்து.

'பாகனே! அது மறத்தற்கரிது!' பலநாள் வறண்டு கிடந்த நிலத்தில், வழக்கமாகப் பெய்யும் மழை புதுநீரைப் பொழிந்ததாக, நாவால் இரைச்சலிடும் தவளைகள் ஒன்றாகக் கூடிக் கத்தும். அதனால் தேரில் கட்டிய நாவுள்ள மணிகள் ஓசைஎழுப்பினாலும் அவை தலைவியால் கேட்கப்படா. அதனால் நாம் வருவதை அவள் அறியாதிருப்பாள். 'தேருடன் வரும் இளையவர்களே! முன்னே விரைந்து சென்று, வீட்டினுள் புகுந்து, எம் வருகையை அறிவிப்பீராக' என ஏவினான். அவர்களும் அவ்வாறு அறிவித்ததும் அவள் பல நாட்களாக தூய்மை செய்யப்படாத கூந்தலின் மாசு நீங்கும்படி நன்கு குளித்தாள். பலவாகிய திரண்ட கூந்தலிலே சிலவாகிய நறுமணப் பூக்களைச் சூடிக்கொண்டாள்.

'அந்நேரம் நாம் உள்ளே புக, உடம்பு வருந்தும்படி ஓடோடி வந்து, கூந்தல் அவிழ்ந்து குலைய, என்னைத் தழுவிக் கொண்டாள். இவ்வாறு அவள் மகிழ்ந்து வரவேற்ற காட்சி என்னால் மறக்க ஒண்ணாதது' என்றான் தலைவன்,

மறத்தற் கரிதால் பாக! பன்னாள்
வறத்தொடு பொருந்திய உலகுதொழிற் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க, நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக்கு அறியுந ராக, மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துறாஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்து அயர் நிலையே (42)

வறத்தொடு பொருந்திய - வறண்டு கிடந்த. உலகு தொழிற் கொள்ளுதல் - மழைபெய்தவுடனேதான் அன்று மக்கள் தொழில் செய்துள்ளனர். பழ மழை - பருவம் தவறாத மழை. அவல - பள்ளத்திற்கிடந்த . கிளை – தவளைக்கூட்டம். அறியுநராக – அறிவித்தாராக. மண்ணாக் கூந்தல் – கழுவாத, குளிக்காத. பல்குரல் – பலவாகத் திரண்ட கூந்தல். அவிழ்பூமுடியினள். பூச்சூடிய தலைமுடி அவிழ்ந்து விழ. இது அவள் ஆர்வத்துடன் ஓடிவருவதை, மெய்ப்பாடு தோன்றக் காட்டுகிறது.

## முடிந்தது போன்ற முடியாத பாட்டு

தலைவன் பொருள் தேடிவந்து தன் காதலிக்குப் 'பரிசம்' போட்டு மணக்கவேண்டும். சங்கப் பாடல்கள் இதை மிகவும் வலியுறுத்துகின்றன. பொருள்தேட வெளிநாடு போவதும் ஒரு வழக்கமாக இருந்துளது. தமிழர்கள் அடிமைகளாய்க் குடியேற்றப்பட்டனரென்பது, ஐரோப்பியர் வந்தபின்

ஏற்பட்ட அவலநிலையாகும். அதற்குமுன் பல நூற்றாண்டுகளாகப் பொருளைக் கொண்டுபோய்க் கொடுத்தும் அங்குள்ளவற்றை வாங்கியும் வந்த வாணிக முறை காலிற்பிரிவாகவும் கடல்வழிப் பிரிவாகவும் நிகழ்ந்துள. கா்லிற்பிரிவு - தரைவழிப் பிரிவு. இதனால் களவுக் காலத்திலேயே காதலியைப் பிரிதலும் கற்புக் காலத்தில் மனைவியைப் பிரிதலும் தவிர்க்க முடியாததாயின. அன்று தகவல் தொடர்புக்கு வழியில்லை. 'ஊருக்குப் போனவன் செய்தி சாமிக்குத் தெரியும்' என்பதுபோல, ஊரிலுள்ளார் எதுவும் தெரியாமல் காத்திருக்க நேர்ந்தது.

கார்காலம் காதலர் கூடிவாழ்தற்குரியதென ஒரு வழக்கமும் வேரூன்றி இருந்தது. இதனால் மழைக்கு அறிகுறி தோன்றினாலே காதலன் வந்து மணம்புரிவான் எனக் காதலி மகிழ்வதும், அப் பருவத்தே வந்திலனேல் அளவு கடந்த துன்பமுறுவதும் நடைமுறை வாழ்வாயிற்று.

முதுவேனிற்காலத்தில் பிரிவது ஏன்? காடடர்ந்த இருள் சூழ்ந்தாற்போன்ற நிலப்பரப்பில், கோடை வெயிலில் செடி கொடி மரங்கள் வாடிய சூழலில் பிரிவதால் வழிபார்த்துச் செல்வது ஓரளவு எளிதாக இருந்தது. கார்காலமும் கூதிர்காலமும் அன்றைய சூழலில், மிகுந்த குளிரால் வீட்டில் இருக்கவும் உழவுத்தொழிலில் ஈடுபடவும் வாய்ப்பானது. இது மிகவும் தொடக்ககால நிலை.

பிற்பாடு பிற பருவங்களிலும் அவ்வப்போது ஏற்பட்ட சூழ்நிலைகள், பருவ மாற்றங்களால் பிரிவதும் திரும்புவதும் நேர்ந்திருக்கும். ஆயினும் இலக்கியம் சுவை கருதியதாகலின், வேனிலில் பிரிவதாகப் பாடினால், அதுவும் கோடையில், நண்பகலில் கொடிய வெப்பச் சூழலில் பிரிவதாகப் பாடினால், அவலச்சுவை மிகுந்து தோன்றும். கார்காலப் பின்னணியைப் பாடி காதலர்க்கு ஏற்ற சூழலாகக் காட்டினால், அதனால் ஏற்படும் காதலுணர்வு மிகுதியாக வெளிப்படும். இவ்வாறு நடைமுறை வாழ்வு, ஓர் இலக்கியக்கொள்கையானது.

எவ்வாறு தமிழ்மொழி இயற்கைவழித் தோன்றியதாகக் காணப்படுகிறதோ, அதுபோலவே தமிழ் இலக்கியக் கொள்கைகளும் இயற்கைவழித் தோன்றி வளர்ந்துள்ளன.

### எச்சப் பொருள்

ஒருவர் சூதாடுபவர்; வீட்டில் தங்கமாட்டார்; அடிக்கடி பொய் சொல்லிவிட்டுச் சூதாடப் போய்விடுவர். அவர் தம் மனைவியிடம், 'பெரியார் மருத்துவ மனையில் தம் நண்பருக்கு அறுவைச் சிகிச்சை' என்றும் அங்கு போய்விட்டு மறுநாள் வருவதாகவும் கூறிச் சென்றார் என்றால் மனைவி உடனே விளங்கிக் கொள்வாள். சூதாடுகளத்திற்குப் போகிறாரென்பது குறிப்பாக உணரப்படுகிறது. அவர் கூற்றில் உள்ள குறிப்புப் பொருள், அவர் பேச்சில் வெளிப்படையாக இல்லை. அவர் கூறிய சொற்கள், சொன்ன முறை, முகத் தோற்றம் குறிப்பை உணர்த்தி விடுகின்றன.

இதனையே இலக்கியமாக வடித்தால் இது குறிப்பெச்சம்; குறிப்புப் பொருள் மறைவாக உளது.

ஒருவர் தன் மகளுக்கு மாப்பிள்ளை தேடிப் போகிறார். அவ்வூரில் அவர் கேள்விப்பட்டதை வந்து மனைவியிடம் கூறுகிறார். "பையன் நல்லவன்தான். அந்தக் குடும்பத்தில் அவன்தான் படித்தவனாம். ஆனால் அவன் அப்பா ஒரு கொலை செய்து விட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, இப்பொழுது தான் பிணையம் மூலம் திரும்பியுள்ளாராம். அவனுடைய அண்ணன் பெருங்குடிகாரனாம். அவன் தம்பியோ தண்டச் சோறு சாப்பிட்டுக் கொண்டு வீட்டோடு கிடக்கின்றானாம். பையன் மட்டுமே நல்லவன் என்றார்கள்" என்று, அவர் கூறுவதில் எஞ்சிநிற்பது, 'இந்த மாப்பிள்ளை வேண்டாம்', 'இந்த இடம் வேண்டாம்' என்பதுதான். இதைக் கூற்றெச்சம் என்பர், இலக்கியத்தில்.

சங்கச் செவ்வியலில் இவ்வெச்சப் பொருளுள்ள பாடல்கள் பலவுள.

திருமணம் செய்யப் பொருள்தேடப் போனவன், நீண்ட காலமாகியும் திரும்பவில்லை. இவர்களின் காதல் உலகிற்குத் தெரிந்து விட்டதால், பலரும் பலவாறு பேசத் தலைப்பட்டனர். இதனால் மிகவும் வருத்தமுற்றிருந்த தலைவியை ஆற்றுவிக்குமாறு, தோழி ஆறுதல் கூறுகிறாள்.

'மலை மீது சுனைகளில் நீர் நிறையவும் மலை அடுக்கத்தில் அருவி ஆரவாரத்துடன் பெருக்கெடுத்து விழவும் காட்டாறு பாறைகளில் மோதி, மூங்கில்கள் மறையும்படி' பெருவெள்ளம் வரப்போகிறது. அது காட்டை அழித்து அலை மோதி ஆரவாரித்து ஓடி வரும்.

வெண்ணெல்லை உண்ட யானை குளிர்ந்த மலைப்பக்கத்தில் ஆழ்ந்து உறங்குகிறது. அப்பெரிய காட்டில், சந்தனமரம் வாடி வதங்கி நிற்கிறது. அங்கு அவை யாவும் தழைக்குமாறு, ஓசையிடும் கடுங்குரலுடன் இடி இடித்து முழங்கி, இப்போதே மழை பொழிய வானம் மின்னுகிறது பார், தோழி!

இவ்வாறு பாடல் முடிகிறது. ஏதோ தோழி, தலைவியிடம் மழை பெய்யப்போவதை, மிக விவரமாகச் சொல்வது போல் உளது. ஒருவகையில் இதை மழைப்பாட்டு என்றே கூறிவிடலாம். ஓர் அகத்திணைப்பாட்டு, மழை பெய்யும் வருணனைக்காகவா பாடப்படும்? சற்று உற்று நோக்கினால் இதில் ஏதோ ஒன்று எஞ்சி நிற்பது புலப்படும். சொல்ல வந்தது, பாட்டிற்கு வெளியே உளது. பாடலுக்குள் அடிக்கருத்தை வைக்காமல், அதைப் படித்துமுடித்த பின் உணரவைப்பது சிறந்த கவிதைக்கு அடையாளம் என்பர்.

**சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்**
**பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்**
**கல் அலைத்து இழிதரும் கடுவரல் கான்யாற்றுக்**
**கழைமாய் நீத்தம் காடுஅலை ஆர்ப்பத்**
**தழங்குகுரல் ஏறொடு முழங்கிவானம்**

இன்னே பெய்ய மின்னுமால் தோழி!
வெண்ணெல் அருந்திய வரிநுதல் யானை
தண்ணறும் சிலம்பின் துஞ்சும்
சிறியிலைச் சந்தின வாடுபெருங்காட்டே (7)

சூருடை நனந்தலை – அச்சம் தரும் அகன்ற இடம். கல் – பாறை. கான்யாறு – காட்டாறு. கழை – மூங்கில். உயர்ந்த மூங்கிலுக்கும் மேலே வெள்ளம் பெருகி ஓடுவதை இன்றைய மலையாள நாட்டிலும் மலைப்பகுதிகளிலும் காணலாம். தழங்கு குரல் – பேரொலி. ஏறு – இடி. சிலம்பு – மலை. சந்தன மர இலை சிறிதாக இருக்கும். வாடும் பெருங்காடு. சந்து, சாந்து, சந்தனம், சந்தனமரம்.

மழை தொடங்கிவிட்டதால் அதைக் காணும் தலைவர் விரைவில் திரும்பிவிடுவார். அதுவரை ஆற்றியிரு என்பது கூற்றில் எஞ்சிநிற்கிறது. கூற்று எஞ்சி நிற்பதால் இது கூற்றெச்சம் எனப்படும். 'வீட்டுத் தொல்லை பொறுக்க முடியவில்லை; சாமியாராகப் போகிறேன்' என்று, குடும்பத் தலைவன் சொன்னால், வீட்டிலுள்ளவர்கள் தொந்தரவு தருவதை நிறுத்த வேண்டும் என்ற குறிப்பு அதிலுள்ளது. பாடல்களிலும் குறிப்புப் பொருள் எஞ்சிநிற்கும். அது குறிப்பெச்சம் எனப்படும்.

**'எச்சம்' என்பது என்ன?**

தொல்காப்பியர் குறிப்பிடும் 34 உறுப்புக்களில் 'எச்சவகை' என்பது ஒன்று. பாட்டு முடிந்தும் பொருள் முடியாது எஞ்சி நிற்பது. சொல்லியதால் சொல்லாது விட்டதை அறிவது எச்சம். அது கூற்றெச்சம். கூற்றில் சொல்லி முடிக்க வேண்டியது எஞ்சிநிற்பது. குறிப்பெச்சம் – மனக்குறிப்பு எஞ்சிநிற்பது.

சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும் (1462)

கிளவி – கூற்று. இது பாடலில் உளது. பாடலை முடித்தாலும் அது முடிந்த பொருளைத் தராது. ஒருசில சொற்களைக் கொண்டு வந்து முடித்தால்தான் கூற்று முற்றுப்பெறும் என்றால் அது கூற்றெச்சம். ஒரு மனக் குறிப்பு எஞ்சி நின்று, அதை உணராவிட்டால் பொருள் முற்றுப்பெறாது என்றால் அது குறிப்பெச்சம். சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை – சொற்களையும் குறிப்பையும் கொண்டு வந்து முடிக்க வேண்டிய இயல்புடைய, அதாவது அவ்இயல்பைப் பொருந்திய கூற்று, எச்சம் எனப்படும்.

'பிறிதோர் சொல்லொடும் பிறிதோர் குறிப்பொடும் முடிவுகொள்ளும் இயற்கையைப் பொருந்தியது' என்பது இளம்பூரணம்.

'செய்யுளின் கண்ணதன்றிப் பின்கொணர்ந்து முடிக்கப்படும் என்பது பெற்றாம்' என்பது பேராசிரியம்.

'பயன்' என்பது ஒரு தொல்காப்பியக் கோட்பாடாகும். அது பாடலில் வரும் கூற்றுக்குப் பயன் என்ன என்பதாகும். தோழி தலைவியை அவள் பெற்றோர் வீட்டுக்காவலில் வைத்துள்ளதாகத் தலைவன் காதில் விழக் கூறுவான். அதன் பயன், 'இனி அவளைச் சந்திக்க முடியாது; விரைவில் மணம் செய்துகொள்' என்பதாகும்.

எனவே இவை இரண்டற்கும் வேறுபாடு உண்டு. எச்சம் பாடலுடன் ஒட்டி நிற்பது, பிரிக்க முடியாதது. எஞ்சியதைக் கொண்டு வந்து முடித்தால்தான் பாட்டுப் பொருள் முடியும்.

பாட்டுப்பொருள் முடிந்துவிடுகிறது. பிறகு இதை ஏன் கூறவேண்டும்? இவ்வாறு கூறியதன் பயன் யாது? – இவ்வாறு எண்ணிப் பார்ப்பது 'பயன்'.

'பயன்' பாட்டின் உறுப்பாவதில்லை. அது பாட்டுப் பொருளுடன் ஒட்டுவதில்லை. பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டில் தோழி முடிவாகக் கூறுவது இது. "தலைவன் நாள்தோறும் அச்சந்தரும் பல

விலங்குகள் திரியும் வழியில் தலைவியைப் பார்க்க வருகின்றான். அதனால் அவனுக்கு ஏதும் இடையூறு நேருமோ என எண்ணுந்தோறும் தலைவி கண்ணீர்விட்டு அழுகிறாள்" என்று முடிக்கின்றாள், தோழி. இதன் பயன் தாயர் இது பற்றிச் சிந்தித்து, உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்வர் என்பதாகும். பாட்டு முழுவதும் இவ் ஒருபயன் கருதியே சாதுரியமாகப் புனையப் படுகிறது. மேலும் 'அறத்தொடு நிலை' என்ற இப்பாட்டின் கூற்றும், திருமணம் செய்யத் தூண்டும் பயன் கருதியதே ஆகும்.

எனவே பயன் வேறு; எச்சம் வேறு. மேனாட்டார் suggestion என்று கூறும் பொதுவான குறிப்புப் பொருள் என்பதுடன் இது பொருந்தும். எனினும் இவை பெரிதும் அகத்திணைக் காதற்பாடல்களுக்கே உரியனவாகும்.

**என்ன மகன் கொல், இவன்?**

காதல் வாழ்வில் அன்றும் இன்றும் ஒரு 'தமிழ்நாகரிகம்' பின்பற்றப்படுகிறது. ஒரு பெண் தன் காதலைக் கண், முகம், மெய்ப்பாடு போன்றவற்றால் குறிப்பாக உணர்த்துவாளேயன்றி, வாய்விட்டுச் சொல்லமாட்டாள். பசுமண் கலத்துள் பெய்தநீர், புறம்பொசிந்து காட்டுவதுபோல, என்று இதற்கு உவமை கூறப்படும். 'I love you' என்று ஒரு பெண் அல்லது ஆண் சொல்வதும் 'I too love you' என்று எதிர்மொழிவதுமாக இன்று திரைப்படப் பாடல்களில் பாடி ஆடுகின்றார்கள். அவ்வாறே உரையாடல்களும் இடம்பெற்று, அக் காட்சிகளுக்குப் பார்ப்பவர்கள் வெட்கப்படுமளவு நடிக்கின்றார்கள்.

இன்றைய ஊடகங்கள் இவற்றை மிகைப்படுத்தி, இதுபோன்ற கதைகளையும் காட்சிகளையுமே காட்டி, இளையோர் மனத்தைக் கெடுக்கின்றன. இன்றைய இளைய சமுதாயம் விலங்கு நிலையை நோக்கி வளர்க்கப்படுகிறது. பணத்தை அள்ளிக் குவிக்க நினைக்கும் தொலைக்காட்சி, திரைப்படம் உள்ளிட்ட ஊடகங்கள், சங்க காலத்திற்கு முற்பட்ட விலங்கின வாழ்க்கைக்கு நம்மை ஈர்த்துச் செல்கின்றன. காதல்

தோல்வியால் தற்கொலை செய்து கொண்டதாகவும் ஒருசிறு செல் பேசிக்காகக் கொலை செய்ததாகவும் ஒரு தொலைக்காட்சித் தொடர் முடிகிறது. முடியும் போதே 'இன்னும் தொடரும்' என்று போடுகிறார்கள். அதாவது இத் தற்கொலையும் கொலையும் தொடரும் என்று பொருள்போலும். அடுத்து செய்தி வருகிறது. 'இன்றைய முக்கிய செய்திகள்; கல்லூரியில் காதலில் தோல்வியுற்ற மாணவர் சாவு; கொலையா? தற்கொலையா? என விசாரணை. உடன் படித்த மாணவர் தலைமறைவு' – என்று விரிவான செய்திகள் வாசிக்கப்படுகின்றன.

சங்க காலம் பொற்காலம் என்றும் இக்குற்றங்குறைகளே இல்லாத காலம் என்றும் கூறமுடியது.

ஆயினும் இவற்றை வெளிச்சம் போட்டுப் பேசுதல் கூடத் தவறென்று நினைத்த காலம் அது. இத்தகையன நடந்தால் அதற்காக வெட்கப்பட்ட காலம் அது. இன்று இவற்றையே திரும்பத் திரும்பக் காட்டி, மக்களின் மூளை சலவை செய்யப்படுகிறது. அன்றும் காதல் கொண்டனர் ஆணும் பெண்ணும் காமவயப்பட்டனர். அதைத் தீர்க்கும் வழிதேடினர்.

இவ்வளவிற்கும் அன்றைய ஆண் பெண் உடற்கட்டு, இன்று கோயிற்சிற்பங்களில் காண்பதுபோல், பலமடங்கு வலுவுடையதாய், சிங்கம் புலி கரடிகளுடன் போரிட்டுக் கட்டிப் புரளக்கூடிய அளவு தெம்புடையதாய் இருந்த காலம் அது.

சுருக்கமாகச் சொன்னால் விலங்கினத்தோடு விலங்கினமாய் வாழ்ந்த நிலையிலிருந்து முன்னேறி, சிறிது சிறிதாக நாகரிக நிலை நோக்கி முன்னேறிய காலம் அது. அதை மிகுந்த பண்பட்ட நிலைக்கு மாற்றியவர்கள் அன்று வாழ்ந்த சான்றோர்களே.

ஒருபெண் காதல் வயப்பட்டாள்; அவனும் காதலித்தான். அவர்கள் காதல் வாழ்வு அரும்பியது. ஆனால் பெண்களைவிட அவன் நாணம் மிக உடையவனாக இருந்ததால், திருமண ஏற்பாடு போன்றவற்றை முனைப்புடன் செய்ய முற்படவில்லை.

அவள் என்ன செய்வாள், பாவம்? ஊரார் அலர் தூற்றுவரே என எண்ணி அவள் அமைதிபூண்டு, தங்கள் காதலை உலகறியாதவாறு காக்க வேண்டியவளானாள். அவன்தான் செயற்பட வேண்டிய ஆண்மகன். அவனோ, அவளைவிட அடங்கியிருந்தால் இக் காம நோயைத் தீர்ப்பது எப்படி? திருமணம் எவ்வாறு நடக்கும்? இதனை எண்ணிய தலைவி தோழியிடம் பேசுகிறாள்.

'காமநோயால் அலைப்புற்றுக் கலங்கி வலிமை அழியும் சமயத்தில், அதனை எடுத்துக் கூறித் தலைவியை ஆற்றுவிக்கவும், அதற்கு ஒரு தீர்வு காணவும் ஆண்மகனால் முடியும்.

கைத்தொழில் வல்ல கம்மியனால் அழகு பொருந்தக் கழுவப்படாது, தூய்மையற்று மங்கிக் காட்சிதரும் முத்தினைப்போல, யான் என் காமஉணர்வை மறைத்து என் பெண்மை காரணமாக வெளிக் காட்டாதுள்ளேன்.

அவன்பால் ஆர்வமுடையவராய், அவன் மீது காதல் கொண்டு, அவனது மார்பை அடையத் துடித்து வருந்தும் நம் துன்பத்தை அறியாதிருக்கும் அவன் என்ன ஆண் மகனோ? யான் என் செய்வேன்?'

இவ்வாறு தலைவி வருந்துகிறாள்.

நோய்அலைக் கலங்கிய மதனழி பொழுதின்
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்!
யான் என்
பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கிக்
கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ
மண்ணாப் பசுமுத்து ஏய்ப்பக் குவிஇணர்ப்
புன்னை அரும்பிய புலவுநீர்ச் சேர்ப்பன்
என்ன மகன் கொல்? தோழி! தன்வயின்
ஆர்வமுடைய ராகி
மார்பணங்கு உறுநரை அறியா தோனே! 94

மதன் அழி பொழுது – வலிமை அழியும் பொழுது. மண்ணாப் பசுமுத்து – கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்தை, கம்மியன் கழுவிச் சுத்தம் செய்த பிறகே அது ஒளிவீசித் திகழுமாம். மண்ணுதல் – கழுவிச் சுத்தம் செய்தல். புன்னை அரும்பு, மண்ணாப் பசுமுத்துப்போல் உளது. அத்தகைய புன்னை அரும்பும் கடற்கரைத் தலைவன், 'தன் மார்பால் அணங்குற்று வருந்துபவரை அறிந்து, அவர்களைத் தேற்றி, அவர்கள் படும் துன்பத்தை நீக்க இயலாத, இவன் என்ன மகன்?' என்று வருந்திக் கூறுகிறாள். இங்கு 'மண்ணாப் பசுமுத்து' தலைவி; அவள் தலைவனால் ஆறுதல் கூறி அரவணைக்கப்படாததால், கம்மியினால் கழுவப்படாத முத்துப்போல உள்ளாள் என்பது உள்ளுறை.

## பூவிலையாட்டி, குயிலினும் கொடியள்

இளவேனிற் காலம் வந்துவிட்டது. கோடை காலத்தில் பிரிந்தவன் கார்காலத்தில் திரும்பவேண்டும்; அல்லது இளவேனிற் காலத்திலாவது திரும்பவேண்டும். இளவேனிலைப் பின்னாளில் வசந்தகாலம் என்றனர். 'இன்ப வேனில்' என்றும் கூறுவர். இளவெயிலுடன் மலர்கள் பூத்துக் குலுங்கும் காலம் இது.

இளவேனில் வந்ததும் வருவேன் என்று சொல்லிப் போனவன், அப் பருவம் வந்தும் திரும்பவில்லை. இதனால் வருந்திய தலைவி தன் துன்பத்தைத் தோழியிடம் கூறி, ஆறுதல் தேடுகிறாள்.

'போரில் பட்ட விழுப்புண் மார்பில் நிணமாய் இன்னும் காயாதிருக்கிறது. அத்தகைய மார்பில் மேலும் வேலைக் கொண்டு பாய்ச்சினால் எப்படி இருக்கும்?

அதைப்போல இளவேனில் வந்ததும் குயில்கள் ஆணும் பெண்ணும் பிரிவின்றி, இணைந்து நின்று கூவுகின்றன. இதைக் கேட்குந்தோறும் துன்பமாய் உளது. தெளிந்த நீர் பொருந்திய ஆறு, மென்மையாக ஓடிவந்து இளவேனிலின் இனிமையை நினைப்பூட்டுகிறது. இது குயிலைவிடக் கூடுதலான துன்பத்தைத் தருகிறது.

அதனினும் கொடியவளாய் அங்கே தெருவில் பூவிற்பவள் பூ வேண்டுமா எனக் கூவிக்கொண்டு போகின்றாள். அவள் தண்டலை சூழும்

இனிய நிலத்தில் வாழும் உழவரின், இளமை பொருந்திய மகள். அவள் அழகிய பஞ்சுபோன்ற தலையையுடைய இதழ்களைக் கொண்ட பசிய குருக்கத்திப் பூக்களுடன் பிச்சிப்பூக்களையும், கலந்த பலவகை மலர்களைக் கூறி, 'இவற்றை விலைக்கு வாங்கீரோ' என்று, வண்டு சூழும் புதுமலர்களையுடைய கடகப் பெட்டியுடன் தெருவிலே திரிதருகின்றாள். அவள் குரல் அவற்றினும் கொடிதாய் வருத்துகிறது. என்ன செய்வேன்!'

இவ்வாறு தலைவி கூற்றில், இளவேனிற் பருவமும் நமக்கு நன்கு உணர்த்தப்படுகிறது.

அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
எவ்வ நெஞ்சத்து ஏஃகுஎறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலும் குயிலினும்
தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே
அதனினும் கொடியள் தானே, மதனி
துய்த்தலை இதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீரோ என
வண்டுசூழ் வட்டியள் திரிதரும்
தண்டலை உழவர் தனிமட மகளே! (97)

அழுந்துபடு புண், விழுப்புண் – போரில் மார்பில் அழுந்தப் பாய்ந்த புண். வழும்பு வாய் புலரா – இன்னமும் நிணம் ஆறாத. நெஞ்சத்து – அம் மார்பிலே மேலும் வேலை எறிந்ததுபோல. 'வெந்த புண்ணில் வேலை எய்வது போல' என்பது பழமொழி. தேறுநீர் – தெளிந்த நீர். இளவேனில் வந்தும் வந்திலன். இளவேனிலை நினைப்பூட்டியது குயில்களின் குரல்; அதனினும் கொடியது யாற்று நீர்; அதனினும் கொடியள் அப் பருவத்தில் பூக்கும் மலர்களை நினைப்பூட்டி விற்கும் உழவர்மகள். இவ்வாறு அடுக்கிக் கூறுவது, துன்பம் அடுக்கி வருவதை உணர்த்துகிறது.

சங்கச்செவ்வியற் பாடல்கள் ஒவ்வொன்றும் – மரபு வழியிற் சொன்னதைச் சொல்வதுபோல் இருந்தாலும் – தனித்தன்மையையும் வெளிப்படுத்தும் திறனுடையனவாகும்.

# 2

# ஐயறிவுயிர்களின் அன்பு வாழ்க்கை

எட்டுத் தொகையுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு மூன்றும் சம காலத்தில் தொகுக்கப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் 8–12 அடிவரையயறைக் குட்பட்டவை குறுந்தொகை, 9–12 அடிகட்குட்பட்டவை நற்றிணை, 13–31 அடிகட்குட்பட்டவை நெடுந்தொகை (அகநானூறு) எனத் தொகுக்கப்பட்டிருப்பதில் ஓர் இயைபுளது. இவற்றுள் நடுவணதாகிய இது அளவான்அமைந்ததாகலின் நல்லதிணை – நற்றிணை எனப்பட்டது. நற்றிணை நானூறு என்பதற்கொப்ப நானூறு பாடல்கள் கொண்ட இதனைத் தொகுப்பித்தவன் பன்னாடுதந்த மாறன் வழுதி. தொகுத்தார் பெயர் தெரியவில்லை. இந்நூலில் 234ஆம் பாடல் காணவில்லை. 385ஆம் பாடலின் பிற்பகுதி இல்லை. இதன் கடவுள் வாழ்த்து மாயோனைப்பற்றிப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியது. இதிலுள்ளவை 192 புலவர்களால் பாடப்பெற்றவை. 56 பாடல்களுக்குப் பாடிய புலவர் பெயரில்லை. பாடலால் பெயர் பெற்றவர்கள் எழுவர். மேலும் ஒன்றிரண்டு பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் பாடலால் அமைந்திருக்கக் கூடும். பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் இதற்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார்.

அகத்திணைப் பாடல்களுள் புறச் செய்தி வருவது இந்நூலுள்ளும் குறைவாகவே உளது. திருக்குறளின் சொல், தொடர், கருத்துச் சாயலுடைய பாடல்கள் இத் தொகையில் மிகுதியாக உள.

சங்கச் செவ்வியற் கால மக்களின் வாழ்வு நிலைகளையும் இயற்கைச் சூழலையும் காட்டுவதில், இந்நூல் சிறப்பிடம் பெறுகிறது.

பழந்தமிழர்கள் இயற்கையைவிட்டுப் பிரிவறியா வாழ்க்கையை நடத்தினர். அடர்ந்து படர்ந்து செறிந்த காடுகளினூடேயும் மலைகளும் அருவிகளும் ஆறுகளுமாக எங்கு நோக்கினும் இயற்கைவளம் பொங்கிப் பொலிந்த சூழலிலேயும் அவர்கள் இயற்கை வாழ்வு நடத்தினர். இதனால் அவர்கள் வழங்கிய மொழி, இலக்கியம், மன்னாயப் பழக்கங்கள், சடங்குகள், விழாக்கள், பண்பாடு, நாகரிகம் அனைத்திலும் இயற்கை மணம் கமழ்ந்தது. அவை யாவும் மிக இயல்பாய் அமைந்தன.

பகற்போது கழிந்து சாயும் பொழுது தொடங்குகிறது. ஞாயிறு முகில்களினூடே, அவை நகர்ந்து கொண்டே இருப்பதால், தோன்றித் தோன்றி மறைகிறது. அது சூரியன் விழித்து இமைப்பது போல் இருக்கிறது. (நற். 241). மலைமீது கார்முகில்கள் கூடி மேலெழுந்து மழைபொழிகிறது. இடியுடன் மின்னல் வெட்டுகிறது. அது, 'மலை இமைப்பதுபோல்' இருக்கிறது. (நற். 112).

மலைமீது இருள் படர்ந்தது போன்ற சூழ்நிலைகள்; அங்கு வேட்டுவர்கள் நறுமணம் மிக்க அகில் மரத்தைப் புகைக்கின்றனர். அப்புகை மேகங்களை மறைக்கிறது. மேகங்கள் யானைக்கூட்டத்தில், களிற்றை மறைக்க பிடியானை தன் துணைவனைக் காணாது பிளிறுகின்றது.

இருளில் தினைப் புனத்தை யானைகள் மேய்ந்து விடாமல், ஞெகிழி என்னும் தீக்கொள்ளிகளை மலைவாழ்நர் அங்கங்கே பரண்களின்மேல் ஏற்றிவைத்துள்ளனர். இது நீலவானில் விண்மீன்கள் ஒளிவீசுவது போல் உளது.

இவ்வாறு நீங்கள் அவையப் பாடல்களின் உள் நுழைந்தால், பழங்காலத் தமிழகத்தைக் கண்ணெதிரே காணலாம்.

## சிற்றுயிர்களின் குடும்பவுணர்வு

ஓரறிவுயிராகிய செடி கொடி மரங்கள் முதல் பறவை, விலங்கினமாகிய ஐயறிவுயிர்கள் வரை, ஆண் பெண் இணை விழைச்சு, தாய்மகவு பாசப் பிணைப்பு, ஒன்றுடன் ஒன்று இணையும் நேயவுணர்வு, ஒன்றையொன்று தாக்கும் பகையுணர்வுபோல்வன, சிந்தித்து வந்தன என்னாமல், இயல்பாக அமைந்தன எனக் கருதத் தக்கன உள. சிற்றுயிர்களோடு இணைந்தும் பிணைந்தும் இரண்டறக்கலந்தும் வாழ்ந்த மக்கள், அவற்றின் செயற்பாடுகளை மிக நுட்பமாகக் கவனித்துப் பாடியுள்ளனர். அவர்களின் பாடல்களில் காலவழு, இடவழு, இயற்கைக்கு மாறான புனைவு வழு எதுவும் காணப்பெறாது.

யானை, மான், குரங்கு, நாய், பன்றி போலும் விலங்குகளிடத்தும் ஊர்க் குருவி, புறா, நாரை, கோழி, காக்கை, அன்றில் போலும் பறவைகளிடத்தும் காணப்பட்ட குடும்ப உறவு போலும் நிகழ்ச்சிகளை இயற்கைக்கு மாறுபடாமல் புனைந்துள்ளனர். ஓரறிவுயிர்களாகிய தளிர், இற்றிமரம், ஈங்கை மரம், நெய்தற்பூ போன்றவை பற்றிய கற்பனைகளும், இயல்பாக நடப்பவையோ என எண்ணும்படி நம்பும்படி புனையப்பட்டுள்ளன. அவர் றுள் ஒருசிலவற்றைத் தனித்து எடுத்துப் பார்ப்பது, ஏனைய முழுமைப்பார்வைக்கு உதவும். இவை அகத்திணைப் பாடல்களில் 'கருப்பொருள் கள்' எனப்படும். அதனால் இவற்றினடிப்படையில் உவமை, இறைச்சி, உள்ளுறை என்ற இலக்கியக் கோட்பாடுகள் விளக்கப் பெற்றுள்ளன. அவை இலக்கியக்கொள்கை பற்றிய ஆய்வாகுமாதலால், இங்கு அந் நோக்கில் எழுதப்படவில்லை. சிற்றுயிர்களிடத்தும் காணப்படும் பாலுணர்வு, குடும்பப் பாசவுணர்வு போல்வனற்றை, மாந்தர்தம் காதல், குடும்பப் புனைவுகட்குத் துணையாகவும் இணையாகவும் பாடியுள்ள பழம்புலவர்தம் புலமைத்திறன் போற்றுதற்குரியதாகும். இது பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் எனப் பிற உயிரினத்தையும் சேர்த்துப் பொதுப்பட மொழிந்த வள்ளுவத்தை நினைப்பூட்டுகிறது.

**ஊர்க்குருவியின் குடும்ப நேயம்**

**'உள்ளூர்க் குரீஇ துள்ளுநடைச் சேவல்'** என்னும் போது சிட்டுக் குருவி, பந்துபோல் துள்ளித் துள்ளி நடப்பது காட்டப் படுகிறது. 'ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன, கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ' என்னும்போது, ஆம்பலின் முதிர்ந்து உதிர்ந்த பூப்போல, அதன் சிறகு இருப்பதைக் கூறி, குருவி காட்சிப்படுத்தப்படுகிறது. அது வீட்டு முற்றத்தில் பயறு வகை ஏதேனும் காயப்போட்டிருந்தால் அதைக் கொத்தித்தின்னும். மன்றத்தே எரு குவித்துவைக்கப்பட்ட இடத்தில், அதைக் குடைந்து விளையாடும். வீட்டின் மேற் கூரை முடியும் இறப்பில் கூடு கட்டி, அதனுள் குஞ்சுகளுடன் தங்கும். ஆண் குருவி, தன் பேடை சூல்முற்றிக் குஞ்சு பொறிக்க இருப்பதால், அதற்கு 'ஈனில்' (பிள்ளை பெறுமிடம்) இழைக்கின்றது. அதற்காகக் கரும்பினது மணமில்லாத தோகை போன்ற வெண்ணிறப் பூவைக் கொண்டு வருகிறது. மெத்தென இருக்கப் பூப்போன்ற படுக்கை கட்டப்படுகிறது. இவை அனைத்தும் குறுந்தொகையில் கண்டன (46,85).

நற்றிணையில் ஒரு பாடலில் அதன் வாழ்வுநெறி காட்டப்படுவது, மாந்தர்தம் வாழ்வின் எதிரொலிபோல் உளது. இவ்வாறு நடந்திருக்குமா எனக் கேட்டு, 'ஏன் நடந்திருக்கக் கூடும்தானே' என எண்ணும்படியான கற்பனை உளது.

தலைவன் சென்ற வினை முடிந்து திரும்பிவிட்டான். அவன் வந்தது கண்ட தோழி மகிழ்ந்து கூறுவது இது.

**உள்இறைக் குரீஇக் கார்அணல் சேவல்**
**பிறபுலத் துணையோடு உறை புலத்து அல்கி**
**வந்ததன் செவ்வி நோக்கி, பேடை**
**நெறிகிளர் ஈங்கைப் பூவின் அன்ன**
**சிறுபல பிள்ளையொடு குடம்பை கடிதலின்**

துவலையின் நனைந்த புறத்தது அயலது
கூரல் இருக்கை அருளி நெடிது நினைந்து
ஈர நெஞ்சின் தன்வயின் விளிப்பக்
கையற வந்த மையல் மாலை
இரீஇய ஆகலின் இன்னொலி இழந்த
தாரணி புரவி தண்பயிர் துமிப்ப
வந்தன்று பெருவிறல் தேரே
உய்ந்தன் றாகும்இவள் ஆய்நுதற் கவினே (181)

உள்இறைக் குரீஇ - வீட்டினுள் இறப்பிலே கூடிகட்டித் தங்கும் சிட்டுக்குருவி. கார் அணல் சேவல் - கரிய தாழ்வாயையுடைய ஆண்குருவி. அது பிறிதொரு புலத்தில் உள்ள குருவியுடன் தங்கி, திரும்பத் தன்கூட்டிற்கு வந்தது. அதனைப் பார்த்த, அதன் துணையான குருவி, ஆண் குருவியின் தோற்றத்தில், அதுபிறிதொரு குருவியுடன் கூடி வந்ததற்கான அடையாளம் இருப்பதைக் கண்டது. நெறித்து முதிர்ந்த குஞ்சுகள் பலவற்றுடன், ஆண்குருவியைக் கூட்டிற்குள் விடாமல், விரட்டியது. சிறிது நேரம் கழித்து, மழைத் தூறலில் நனைந்த முதுகினையுடையதாய், குளிரில் நடுங்கிக் கொண்டு, ஆண்பறவை அயலே ஒதுங்கியிருப்பதைக் கண்ட பெண்குருவி, அருளுடன் மிகவும் சிந்தித்து, ஈரமுள்ள நெஞ்சுடன் அதனைத் தன் கூட்டிற்குள் வருமாறு அழைத்துக்கொண்டது. இத்தகைய மயக்கம் தரும் மாலைப்பொழுது வந்து சேர்ந்தது. அந்நேரம் தாரணிந்த குதிரைகள் இனிதாக விட்டுவிட்டு ஒலித்து, குளிர்ந்த பயிர்களின் மேலே ஏறி, அவற்றைச் சிதைத்துக் கொண்டு ஓடிவந்தன. இவ்வாறு வெற்றி மகனாகிய தலைவனின் தேர் வந்து சேர்ந்தது இனித்தலைவியினது நெற்றியில் அழகு கெடாது, பொலிவு பெறும்.

தலைவனின் குறைகளை எண்ணாது, அவனை ஏற்றுக் கொள்வதே முறை என்ற உள்ளுறை இதில் உளது. அதற்கு ஏற்ப, மாந்தரின் பரத்தைமை ஒழுக்கம் குருவியின் மேல் ஏற்றிச்

சொல்லப்பட்டுள்ளது. ஆண்குருவி வந்து, வெளியே சிறிது தங்கி, பிறகு கூட்டினுள் போயிருக்கும். அதில் புலவரது கற்பனை, இயல்பாகப் பொருந்தியுள்ளது.

**காட்டுக்கோழி**

**பேடை நோக்கிய பெருந்தகு நிலை**

தலைவன் வேற்று நாட்டிற்குப் பொருள் தேடச் சென்றவன், சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு, தேரில் திரும்புகிறான். அவன் உள்ளம் அவனுக்கு முன்பே, சொந்த ஊர் நோக்கிச் சென்றுவிடுகிறது. தேர் ஓட்டும் வலவனிடம் விரைந்து தேரைச் செலுத்த வேண்டுகின்றான். 'தீண்டா வைமுள் தீண்டி' என்று, குதிரையை இதுவரை தீண்டாத கூரியதாற்றுக் கோலாலே தீண்டி, முடுக்கிவிடப் பணிக்கின்றான். அக் காலத்தில் தேருடன் இளைய காவல்வீரர்கள் ஓடிவருவர். குதிரை வேகமாக ஓடியதால் அவர்களும் பெருமூச்சு வாங்க விரைந்து ஓடி வருகின்றனர். அவர்கள் இறுக்கிக் கட்டிய கச்சையைச் சிறிது தளர்த்தி, மெதுவாகத் தாம் விரும்புகிறபடி நடந்துவரட்டும் என்று கூறி, 'ஏகுமதி வலவ தேரே' என்று தலைவன் தேர்ப்பாகனிடம் கூறுகின்றான்.

அங்கே ஒரு காட்டுக் கோழிச் சேவல் நின்று கொண்டிருக்கிறது. அதன் வாயில் நாங்கூழ்ப் புழுக்கள் உள்ளன. அது தன்பெட்டைக் கோழியைப் பெருமிதத்தோடு பார்க்கிறது! இரை கிடைத்தமகிழ்ச்சியில் அது பார்ப்பது, 'பேடையை நோக்கிய பெருந்தகு நிலை' என்று கூறப்படுகிறது. உருக்கிய நெய்யில் பாலைத் தெளித்தது போன்ற புள்ளிகளையுடையதும், கடைவது போன்ற கரகரப்பான குரல் ஒலியையுடையதுமான காட்டுக்கோழி (கான வாரணம்), மழைநீர் வடிந்த அகன்ற முல்லை நிலப்பரப்பில், புலராத ஈரமணலைக் கெண்டி, புதிய இரையாகிய நாங்கூழ்ப் புழுவைக் கொத்தித் தன் அலகில் மாட்டிவைத்துள்ளது. அதனால் பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து, தன் பெட்டையை நோக்குகிறது!

விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்பழித்து அசைஇ
வேண்டமர் நடையர் மென்மெல வருக!
தீண்டா வைமுள் தீண்டிநாம் செலற்கு
ஏகுமதி வலவ தேரே! உதுக் காண்
உருக்குறு நறுநெய் பால்விதிர்த் தன்ன
அரிக்குரல் மிடற்ற அந்நுண் பல்பொறிக்
காமரு தகைய கான வாரணம்
பெயல்நீர் போகிய வியன்நெடும் புறவில்
புலரா ஈர்மணல் மலிரக் கெண்டி
நாளிரை கவர மாட்டித்தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே! (21)

'வலவ! உதுக்காண்!' – அதோ பார்! – என்று தலைவன் இக்காட்சியைத் தேரோட்டிக்குக் காட்டுகின்றான். விரைப்பரி – பரி (குதிரை) விரைந்தோடுதல். வீங்கு செலல் – வருந்தி விரைந்தோடுதல். யாப்பு அழித்து – செறிவாகக் கட்டிய கச்சையை (உடையை) தளர்த்தி. அசைஇ – சிறிது ஓய்வெடுத்து. விதிர்த்தல் – தெளித்தல். காமரு தகைய – அழகு பொருந்திய, பெயல்நீர் – மழைநீர். புறவு – காடு. மலிரக் கெண்டி – மேலெழுமாறு மணலைக் கிளறி, நாள்இரை – பதியஇரை.

காட்டுக்கோழியின் தோற்றத்தைப் பார்த்ததும், தலைவனுக்குத் தானும் அதுபோல், தேடிய பொருளுடன் தலைவியிடம் சென்று காட்டி மகிழவேண்டும் என்று தோற்றுகிறது. அதைக் குதிரையைச் செலுத்துவதிலேயே கருத்தாக இருக்கும் வலவனிடம் காட்டக் காரணம், விரைந்து தேரைச் செலுத்தத் தூண்டுவதற்காகும். இதனை இறைச்சிக் கோட்பாடு என்பார், தொல்காப்பியர்.

**மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை**

குயில் மாமரத்தின் அரும்புகளைத் தின்னும்; இளவேனில் பருவத்தில் இனிதாகக் கூவி, சோலையில் விளையாடும். குயில்கள் ஒன்று மாற்றி ஒன்று என, எதிரொலிகள் போல விடாது கூவும். இதனை இன்றும் இயற்கை சூழ்ந்த இடங்களில் காணலாம்.

மாந்தோப்பில் இளவேனிலாகிய சித்திரை வைகாசி வசந்த காலத்தில் அவை கூவிக்கூவி அங்குமிங்கும் பறந்து விளையாடும் காட்சி இனிமைக்கு இனிமை சேர்க்கும்.

சங்கப் பாடல்களில் குயில் கூவுகிற காட்சிவருவது இளவேனிலாயிருக்கும்; மயிலாடுகிற காட்சி வரின் அது கார்காலமாக இருக்கும். இது மாறி வரவே வராது. குயில் கூவ மயிலாட என்பது காலவழு. குயில் கூவுவது வசந்த காலத்தில் மட்டும்தானா என்ற வினா எழும். அது அதற்குச் சிறந்த காலமாகும் என்பதைக் கருத வேண்டும்.

**மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும்**
**நறுந்தண் பொழில கானம்** (9)

மாமரத்து அரும்பைக் கோதி உண்டு மகிழ்கின்ற குயில் கூவி ஆடும் நறுமணம் மிக்க சோலைகளையுடைய காடு. உடன்போக்கில் தலைவன் தன் காதலியை, 'நாம் போகும் வழி இத்தகைய குளிர்ச்சியுடையது, வருந்தாது நட' என்று ஆறுதல் கூறி அழைத்துப் போகும் இடம் இது.

**செங்கண் இருங்குயில்** - என்று பிறிதொரு பாடலில், குயில் ஓவியம் தீட்டிக் காட்டப்படுகிறது.

கருநிறமான குயிலின் கண்கள் மட்டும் செவ்வரி படர்ந்திருக்கும். அப் பேடைக்குயில் ஆண் குயிலோடு பொருந்தி, கூடும் விருப்புடன், ஒன்றை ஒன்று கூவி அழைத்துச் சோலையில் விளையாடும் இளவேனில் எனப் பருவத்துடன் சார்த்திப் புனையப்படுகிறது.

அடைகரை மாஅத்து அல்குசினை ஒலியத்
தளிர்கவின் எய்திய தண்ணறும் பொதும்பில்
சேவலொடு கெழீஇய செங்கண் இருங்குயில்
புகன்றுஎதிர் ஆலும் பூமலி காலை ... (118)

யாற்றை அடுத்தகரை, அடைகரை. மாமரத்தின் நெருங்கிய கிளைகள் தழைத்தன. இளவேனில் அல்லவா? அவற்றில் மாந்தளிர்கள் அழகுடன் திகழ்கின்றன. இத்தகைய தண்ணிய, நறுமணமுள்ள மரச்சோலையில், செங்கண்கருங்குயில் சேவலுடன் நெருங்கி இருக்கிறது. அவை கூடும் விருப்புடன், ஒன்றை ஒன்று எதிரே இருந்து கூவி விளையாடுகின்றன. பூக்கள் பூத்துக் குலுங்கும் இளவேனிற் பருவம் வந்தும், வாராத காதலனை நினைந்து வருந்துகிறாள் தலைவி.

முன்பனிப் பருவம் வந்தது. அதற்கு அடையாளமாக குரா மரம் அரும்பியது. அது பின்பனிப்பருவம் வரும் என்று கட்டியம் கூறியது. முன்பனி – மார்கழி, தைத்திங்கள், பின்பனி – மாசி, பங்குனி. இளவேனில் – சித்திரை, வைகாசி. 'பிரியேன்' என்று உறுதி கூறிய காதலர், வேனில் வந்தும் வந்திலர் என்ற வருத்தத்தைத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

பின்பனி அமையம் வருமென முன்பனிப்
பொழுதுமுந் துறீஇக் குரவு அரும்பினவே
புணர்ந்தீர் புணர்மினோ என இணர்மிசைச்
செங்கண் இருங்குயில் எதிர்குரல் பயிற்றும்
இன்ப வேனிலும் வந்தன்று (224)

குயில் இன்ப வேனிலில் என்ன சொல்லிக் கூவுகிறது? 'கூடியவர்களே, பிரியாதீர்! இன்னும் கூடியிருங்கள்' என்று மாம்பூங்கொத்துக்களின் மேலிருந்து, குயில்கள் எதிரெதிரே மாறிமாறிக் கூவுகின்றனவாம்!

குயிலைப் பற்றிய இம் மூன்று பாடல்களுமே பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியவை என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்துப் புலவர்களுக்கும் வேந்தர்களுக்கும் இயற்கை பற்றிய, முழுமையான அறிவும் பழக்கமும் பட்டறிவும் இருந்தமை இதனாற் புலனாகும்.

**நீர்வாழ் பறவைகள்**

கடற்கரைகளிலும் ஆற்றோரங்களிலும் பிற நீர் நிலைகளிலும் பறந்து திரியும் நாரை, கொக்கு, குருகு முதலியனவும் ஒன்றற்கு ஒன்று பாசமுடன் கூடித்திரிந்தமை வியப்பளிக்கிறது. இவை ஓரினமே எனினும் சிறுசிறு வேறுபாடும் உடையவை. கடற் காக்கை பற்றியும் குறிப்புளது.

ஆடமை ஆக்கம் ஐதுபிசைந்து அன்ன
தோடமை தூவித் தடந்தாள் நாரை
நலன் உணப் பட்ட நல்கூர் பேடை
கழிபெயர் மருங்கின் சிறுமீன் உண்ணாது
கைதையம் படுசினைப் புலம்பொடு வதியும்
தண்ணந் துறைவன் ....... (178)

காற்றில் ஆடும் மூங்கிலின் உள்ளேயுள்ள உரியை உரித்து, மெல்லிதாகப் பிசைந்து வைத்தது போன்ற, தொகுதியாய் அமைந்த உட்சிறகுகளையும் நீண்ட கால்களையும் உடையது நாரை. அவற்றுள் பெண் நாரை ஒன்று, ஆணால் கூடி இன்பம் நுகரப் பட்டது. அதற்கு இடம் கொடுத்த, அப் பெண் பறவை, வருந்தி உப்பங்கழியின் பக்கத்தே, சிறிய மீனையும் உண்ணாது, தாழையின் பெரிய கிளையில், வருத்தத்துடன் தனித்திருக்கிறது. இத்தயை துறைக்குத் தலைவனாகிய காதலன், பிரிந்து வருந்தச் செய்கிறான் என்று தோழி கூறுகிறாள்

பிறிதொரு பாடலில் தோழி தலைவனை 'வரைவு கடாவுகிறாள்' – அதாவது காதலனைத் திருமணம் செய்து கொள்ளத் தூண்டுகிறாள். அப்போது, நாரைகளின் காதல் உறவைக் கூறி, தலைவன் நாட்டுப்

பறவைகளிடம் உள்ள பண்பு கூட அவனிடம் இல்லையே என்ற குறிப்பைப் புலப்படுத்துகிறாள்.

... இரைவேட்டுக்
கடுஞ்சூல் வயவொடு கானல்எய் தாது
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்
மெல்லம் புலம்பன்.... (263)

என்று புனையப் படுகிறது. ஒரு பெண் நாரை, இரையை உண்ண விரும்பியும், சூல் (கருப்பம்) முதிர்ந்தமையாலே, வயா நோயுடன் கடற்கரைக்குப் போகாது வயலிலேயே தங்கிவிட்டது. சூல்கொண்ட மகளிர்க்கு வருவது. வயா நோய் இங்கு பறவைக்கும் அந்நோய் வருகிறது. இதை உணர்ந்த, முடம் முதிர்ந்த நாரைப்போத்து, கடல் மீனைக் கொத்தி, வளைந்த வாயையுடைய தன் பேடைக்குக் கொண்டு வருகிறது. இத்தகைய பறவைகள் உள்ள நெய்தல் நிலத்திற்கு உரியவன் காதலன்.

இவை மனிதவாழ்வின் எதிரொலிகளாகப் புனையப்பட்டுள்ளன. பறவையுடன் பறவையாய், சிற்றுயிர்களுடன் அவையே ஆகி, வாழ்ந்த புலவர்களின் கற்பனையாதலின், அப் பட்டறிவு சிறிதுமிலாத நாம், இதுபற்றிக் கருத்துக்கூறல் தகுதி ஆகாது.

குருகு எனப்படும் ஒருவகை நாரை, தன் பெடையைக் கூடுவதற்கு, இடைவிடாது கூவிக்கொண்டேயிருக்கும். மாலைப்பொழுதில், யான் பிரிவைத் தாங்கிக்கொண்டிருப்பது எங்ஙனம் இயலும் எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்

...மால்கொள
வியல்இரும் பரப்பின் இரைஎழுந்து அருந்துபு
புலவுநாறு சிறுகுடி மன்றத்து ஓங்கிய

ஆடரைப் பெண்ணைத் தோடுமடல் ஏறிக்
கொடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய
உயிர்செலக் கடைஇப் புணர்துணைப்
பயிர்தல் ஆனா பைதங் குருகே (335)

தலைவி தன் காமமயக்கம் மேலோங்குமாறும் தன் உயிர் கொள்ளை கொள்ளப் படுமாறும் குருகு ஒன்று, தன் பெடையைக் கூடுவதற்காகக் கூட்டிற்கு வந்து சேருமாறு இடைவிடாது கூவுகிறது, என்ன செய்வேன் என்று கூறி வருந்துகிறாள். பெண்ணை – பனைமரம். தோடு – பனந்தோடு, பனையின் உச்சி. குடம்பைச்சேரிய – தன் கூட்டிற்குள் வந்து புணருமாறு. கடைஇ – உயிரை விடுமாறு இடைவிடாது இறுதி வரை. புணர் துணைப் பயிர்தல் – புணரும்படியான பெட்டையைக் கூடும் விருப்புடன் கூப்பிடுதல். பைதலங்குருகு – துன்பம் தரும் குருகு.

இருதலைப் பறவை

குயில் போலவே ஒரு சிறிய பறவை அன்றில். அது ஆணும் பெண்ணும் இணைந்தே காணப்படுமாம். ஒன்றன் தலை மற்றதன் கழுத்தில் வளைந்திருக்க, இருதலையுடைய ஒரு பறவை போலத்தோற்றுமாம். 'இருதலைப் புள்ளின் ஓருயிரம்மே' என்று கூறுவர். ஒன்று இறந்தால் மற்றது வாழாதாம். பனைமடலின் உள்ளே கூடிகட்டிக்கொண்டு இருக்கும் இவை, இரவு நேரங்களில் முரலுவது, காதலருக்குக் காம உணர்ச்சியைத் தூண்டிப் பிரிவுத் துயரை மிகுதிப் படுத்தியுள்ளது.

தமியேன் கேட்குவென் கொல்லோ
பரியரைப் பெண்ணை அன்றில் குரலே (218)

பருத்த அடியையுடைய பனைமரத்தில் குடியிருக்கும் அன்றிலின் குரலை, யான் மட்டும் தனித்திருந்து கேட்டுத் துன்புறுவேனோ – எனத் தோழியிடம் தலைவி வருந்திக் கூறுகிறாள்.

தோழி தலைவனிடம் தங்கள் பிரிவுத்துயரைக் கூறும் பாடலில் தங்கள் வாழ்க்கையே அன்றிலின் வாழ்க்கைபோலாகிவிட்டது என்று சொல்கிறாள்.

**ஒன்றில் காலை அன்றில் போலப்**
**புலம்புகொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை...** (124)

ஒன்று இன்றேல் மற்றதும் இலதாகிப் போகும் அன்றில் போல, தனிமைத் துன்பத்தால் வருந்தும் இத் துயரவாழ்க்கை என்று கூறுகிறாள் தோழி.

**புறாக்களின் குடும்ப உணர்வு**

உகாய் மரம் பாலை நிலத்தில் காணப்படும். அதன் காய் மிளகு சேர்த்துச் சமைத்த உணவுபோல் சுவையுடையது. அதில் வண்டுகள் மொய்க்கும். ஒரு பொலிவிழந்த புறா அவ் வண்டுகளை ஓட்டிவிட்டு அக் காயை உண்டது. அதனால் அது தன் புள்ளிகள் பொருந்திய கழுத்தைச் சிலிர்த்து, வெறித்து மயக்கமுற்று வருந்தியது. புறாவின் செயலை உற்றுநோக்கியமை புலனாகிறது (66). இயற்கையுடன் பழந்தமிழர் மிக நெருங்கிப் பழகியதை இதுபோன்ற பல பாடல்களால் அறியலாம்.

பைம் புறப் புறவின் செங்கால் சேவல் – சேவல் புறாவின் முதுகு அழகாயிருக்கிறது; கால்கள் சிவப்பாக உள்ளன. களர்நிலத்தில் உயரமாய் வளர்ந்த, கவைத்த முட்களையுடைய கள்ளியின் உச்சியிலே, சுள்ளிகளை அடுக்கிக் கட்டிய கூட்டில் பெண்புறா குஞ்சுகளைப் பொறித்து அவற்றைக் காத்திருக்கிறது. அதனால் இளைத்துப்போய், வருந்திய நடையை உடைய அப்பெண்புறா உண்ணும் பொருட்டு, மன்னர் போரில் வென்று அனைத்தையும் கவர்ந்துபோனதால் பாழான இடத்தில் கொட்டிக்கிடக்கும் நெல்லை, ஆண்புறாபொறுக்கும் சேய்நாட்டு வழி. தலைவியைப் பாலை வழியில் அழைத்துப்போகும் தலைவன், கூற்று இது.

**பைம்புறப் புறவின் செங்கால் சேவல்**
**களரி ஓங்கிய கவைமுட் கள்ளி**

**முளரியம் குடம்பை ஈன்றிளைப் பட்ட**
**வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்**
**முனைகவர் முதுபாழ் உகுநெற் பெறூஉம்**
**அரணில் சேய்நாட்டு அதர் (384)**

களரி - களர் நிலம். முளரி - முள்ளையுடைய அடி. வயவுநடை - அடை காத்ததால் வந்த தளர்நடை. அதர் - வழி. புறாக்களிடையே குடும்ப உணர்வு இருப்பதை, அவற்றை வீட்டிலே வளர்த்த பட்டறிவுடன் பாவேந்தர் பாரதிதாசன், அழகின் சிரிப்பு நூலில் மிகச்சிறப்பாகப் பாடியுள்ளார். வீட்டில் புறாக்களையேனும் வளர்க்கலாம், சிட்டுக் குருவியை இறப்பில் கூடுகட்ட விட்டுப் பார்த்திருக்கலாம். இத்தகைய சிற்றுயிர்களுடனான பழக்கம் மனிதமனத்தைப் பக்குவப் படுத்த வல்லது.

**ஓரறிவுயிர்கள்**

மரம் செடி கொடிகளுக்குத் தொடுதல் என்னும் ஊற்றுணர்ச்சி மட்டும் உண்டு என்பர். அவற்றின் செயற்பாடுகள் மீஇயற்கை சார்ந்தவை. பருவங்களுக்கு ஏற்ப அவை தழைக்கின்றன. பூக்கின்றன, காய்க்கின்றன. கொடி அருகிலுள்ளதை எவ்வாறேனும் பற்றிப் படர்கிறது. இனப் பரவலுக்கு அவை செய்யும் முயற்சிகளும் பலவாகும். சங்கப் புலவர்கள் அவற்றை உற்றுநோக்கித் தம் கருத்தையும் ஏற்றிப் பாடியுள்ளனர்.

**மாந்தளிர்**

பிரிவின்கண் ஆற்றாத தலைவி, கார்ப்பருவம் கண்டு வருந்திச் சொல்கிறாள்.

**கரைபொருது இழிதரும் கான்யாற்று இகுகரை**
**வேர்கிளர் மாஅத்து அம்தளிர் போல**
**நடுங்கல் ஆனா நெஞ்சமொடு (381)**

துன்பம் தாங்க முடியாததாக உளதாம்.

கரையை இடித்துக்கொண்டு பாயும் காட்டாற்று வெள்ளத்தால் கரை, உடைகிறது. அக் கரையோரம் நின்ற மாமரத்தின் வேர்கள் வெளியே தெரியும்படி வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறது. இதனால் அம் மாமரத்திலுள்ள தளிர்கள் நடுங்குகின்றன. (என் நெஞ்சமும் அதுபோல் நடுங்குகிறது). தளிர்கள் காற்றில் அசைவதை நடுங்குவதாகக் காட்டுவதில் புலவரின் கற்பனை உளதெனினும், இகுகரையாதலினால் தளிர்கள் உண்மையிலேயே நடுங்குகின்றனவோ என எண்ணும்படி உளது. மாந்தளிர்போலும் மேனி (மாநிறம்) என்று மகளிரின் மேனியழகைக் கூறுவர். அத் தளிர் நடுங்குவதாகக்கூறி, உவமிப்பதில் பொருத்தம் உளது.

**இற்றியின் விழுது**

வேல்போன்று உயர வளர்வது இற்றிமரம். அதன் விழுது நிலத்தில் படியாமல் தொங்குகிறது. கீழே பிடியானை மிக ஆழ்ந்து உறங்குகிறது. மேல்காற்று வீசுந்தோறும் அவ் விழுது அசைந்து, பிடியின் முதுகை வருடுகின்றது. உறங்குபவர்களுக்கு வருடிக்கொடுக்கும் மனிதநேயம் மரத்தின் விழுதிடமும் காணப்படுகிறது.

**வேலின் இற்றித் தோயா நெடுவீழ்**
**வழிநாள் ஊசலில் கோடை தூக்குதொறும்**
**துஞ்சுபிடி வருடும் அத்தம்** (162)

தோயா – நிலத்தில் படாத, வீழ் – விழுது. வழிநாள் – வைகறை. ஊசலில் – ஊசல்போல் அசைவது. கோடை – மேல்காற்று. துஞ்சுபிடி – ஆழ்ந்து உறங்கும் பெண் யானை. இற்றிவிழுது நினைத்து வருடவில்லை. மாந்தரிடத்திலும் நினைத்துச் செய்யாது, தாமே நடப்பன பலவுள.

**ஈங்கைக் குழை**

குளிர்ந்த புதரில் உள்ள ஈங்கையின் அழகிய குழையானது, வாடிய வெள்ளைநிறக் குருகின் முதுகைத் தடவிக்கொடுக்க, அது சிறகு குவிந்து ஒடுங்கி இருந்தது.

**பனிப்புதல் ஈங்கை அம்குழை வருடச்**
**சிறைகுவிந் திருந்த பைதல்வெண் குருகு** (312)

பைதல் - வாட்டம். பார்வைப் புள்ளாக வேட்டுவன் கட்டிப்போட்டிருந்ததால் குருகு வாட்ட முற்றிருந்தது. அதை ஈங்கை, தன் குழையால் தடவிக் கொடுத்ததாம். ஏதோ இரக்கவுணர்ச்சி வயப்பட்டு நடந்ததாகப் புனையப்பட்டுள்ளது.

**பேதை நெய்தல்**

பல இதழ்கள் விளங்கித் தோன்றும் குவியாத நெய்தற்பூ நெல்லரியும் உழவர்களின் கூரிய அரிவாள் பட்டதனால், வருந்தி நீரால் அலைப்புண்ட தோற்றம் போல, தலைவியின் கண்கள் ஈரம்பட்டுக் கலங்கி அழுதன.

**நெல்லரி தொழுவர் கூர்வாள் உற்றெனப்**
**பல்லிதழ் தயங்கிய கூம்பா நெய்தல்**
**நீரலைத் தோற்றம் போல**
**ஈரிய கலுழும் நீ நயந்தோள் கண்ணே** (195)

நெய்தற்பூவில் ஈரம் பட்டு இதழ்கள் கலங்கிக் காட்சியளிக்கிறது. அதனை நெல்லரியும் உழவர்கள் தம் கூரிய அரிவாளால் அறுத்துப் போட்டதால், கண்கலங்கிற்றுப் போலும் என எண்ணவைக்கிறார் புலவர். தலைவி அழுவதற்கு அது உவமையாகிறது.

செந்நெல்லை அறுவடை செய்வோரின் கூரிய அரிவாள் பட்டு, நெய்தல் மலர் புண்பட்டது. அவர்கள் அதை அறியாது, நெற்கதிரைத் தூறுகளோடு களத்தில் கொண்டுவந்து போட்டனர். அந்தப் பூ அரிவாளுடனும் நெற்கதிருடனும் மயங்கிக் கலந்து, அவற்றினிடையே படுத்துக் கிடந்தது. இருந்தும் தனக்கேற்பட்ட துன்பத்தைக் கருதாமல், மெல்லமெல்ல, தன்மீது விழும் ஞாயிற்றின் கதிரொளிபட்டுத் தன் இனிய

துயில்நீங்கி, பசிய வாயைத்திறந்து மலர்ந்தது. பேதை நெய்தலின் அறியாச் செய்கை இது.

செந்நெல் அரிநர் கூர்வாள் புண்ணுறக்
காணார் முதலொடு போந்தெனப் பூவே
படையொடும் கதிரொடும் மயங்கிய படுக்கைத்
தன்னுறு விழுமம் அறியா மென்மெலத்
தெறுகதிர் இன்துயில் பசுவாய் திறக்கும்
பேதை நெய்தல்.... (275)

போந்தென - களத்திற்கு வந்து, படை - அரிவாள். விழுமம் - துன்பம். தெறுகதிர் - சூரியக்கதிர்கள்.

இப்பாடலில் 'உள்ளுறை' உளது. பேதை நெய்தல் - வருந்தும் தலைவிக்குப் படிமம். தன்னுறு விழுமம் (துன்பம்) கருதாது, பேதை நெய்தல் பூப்பதுபோல், தலைவியும் தலைவன் செய்த துன்பத்தைப் பொறுக்கவே எண்ணுகிறாள். ஆனாலும் அவனுடைய அன்பைப் பெறுமாறில்லை என்று தோழியிடம் வருந்திக் கூறுகிறாள்.

மான் குடும்பம்

தலைவியின் ஊர் முல்லை நிலப் புறவில் (காட்டில்) உளது. விதைகளை விதைக்கும் முல்லை நில ஆயர்கள், நன்கு உழுது செம்மைப் படுத்திய, பழங்கொல்லையாகிய புன்செய் நிலத்தில், முறைப்படி விதைகளை விதைத்து நிரப்பினர். அங்கு வளர்ந்த ஈரம்பட்ட இலையினையுடைய வரகின், கவைத்த கதிர்களைக் கறித்த, கண்டார்க்கு விருப்பம் தரும் இளம் பெண்மான், மரல் வித்துக்கள் உதிர்ந்து கிடக்கும் காட்டில், தன் ஆண்மானுடன் தங்கியிருக்கும்.

வினைமுடித்துத் திரும்பும்போது, தேர்ப்பாகன் இம் மான் குடும்பத்தைக் காட்டித் தலைவனிடம் ' நீங்களும் இதுபோல் வாழவேண்டும்' என வாழ்த்துகின்றான்.

விதையர் கொன்ற முதையல் பூழி
இடுமுறை நிரப்பிய ஈரிலை வரகின்
கவைக்கதிர் கறித்த காமர் மடப்பிணை
அரலைஅம் காட்டு இரலையொடு வதியும்
புரவிற்று அம்மநீ நயந்தோள் ஊரே (121)

முதையல் – பழங்கொல்லை, புன்செய் நிலம். கொன்ற – உழுது செம்மைப் படுத்திய. பூழி – புழுதி. நிரப்பிய – விதைகளை விதைத்து நிரப்பிய. அரலை – மரல் வித்துக்கள். இரலை – ஆண்மான்.

ஒரு பெண்மான் தன் குட்டியுடன், தங்களின் கூட்டத்தை விட்டுப் பிரிந்து விலகிப் போனது. தன் பிணைமானைக் காணாது இரலை (ஆண்மான்) பாசமுள்ள நெஞ்சுடன் தேடுகின்றது. இக் காட்சியைப் பாகனே பார் என்று தேர்ப்பாகனிடம் தலைவன் கூறுகின்றான். கார்காலம் வந்து விட்டதால், விரைந்து செல்க என்பது குறிப்பு.

...உவக்காண்
கழிப்பெயர் களரில் போகிய மடமான்
விழிக்கண் பேதையொடு இனன்இரிந்து ஓடக்
காமர் நெஞ்சமொடு அகலாத்
தேடூஉ நின்ற இரலை ஏறே (242)

களர் – களர்நிலம். மடமான் – இளம் பெண்மான். விழிக்கண் பேதை – மருண்டு பார்க்கும் விழிகளையுடைய குட்டிமான். இனன் – தன் இனமான மான்களின் கூட்டம். காமர் நெஞ்சம் – விருப்பமுள்ள மனம்.

### யானைக் குடும்பம்

யானை பற்றிய குறிப்புக்கள் மிகப்பலவாகும். யானைக் குடும்பம் பற்றியும் யானை புலி மோதல் பற்றியும் அவை விவரிக்கின்றன. ஏனைய எவ்வுயிரினத்தையும் விட, யானைகளின் குடும்ப வாழ்வே கூடுதலாகப் பாடப்பெற்றுள்ளது.

யானைகள் களிறும் பிடியும் கன்றுகளுமாகப் பெரிதும் குடும்பமாகவே வாழும். இக் குடும்பம் ஒரு கூட்டமாக அமையும்போது அவைகளுக்கு ஒரு தலைமை யானை இருக்கும். அது ஒருத்தல் எனப்படும். அது காட்டுகிற வழியிலேயே மற்ற யானைகள் நடக்கும்.

ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்து இயம்பும் (14)

தொங்கும் வாயையுடைய களிறு, மலைப்பாம்பின் வாயில் அகப்பட்டதாக, தாளாத துயரத்துடன் அச்சமடைந்த பிடி பிளறிப் பேரொலி எழுப்புகிறது. அவ் ஒலி பெரிய மலையின் பிளவுகளூடே சென்று எதிரொலிக்கின்றது. ஞால் வாய் – தொங்கும் வாய். அதுவே கையுமாகும். பாந்தள் – மலைப்பாம்பு.

ஒளிறுவெள் அருவி ஒண்துறை மடுத்துப்
புலியொடு பொருத புண்கூர் யானை
நற்கோடு நயந்த அன்பில் கானவர்
விற்சுழிப் பட்ட நாமப் பூசல்
உருமிடைக் கடியிடி கரையும்
பெருமலை நாடனை (65)

ஒளி பொருந்திய அருவிக் கரையிலே எதிர்ப்பட்டு, புலியொடு போர் செய்ததால் புண்பட்ட யானையினது தந்தத்தை எளிதில் பெறலாம் என வேட்டுவர்கள் விரும்பினர். அதனால் அந் நற்பண்பற்ற வேட்டுவர்கள் வில்லை வளைத்து எய்ய, அதன் சுழற்சியில் அகப்பட்ட யானை அச்சத்துடன் பிளிறியது. அப்பூசல் இடியினது மிகுந்த முழக்கத்தைப் போலப் பேரொலியாக முழங்கும் பெரிய மலை நாடன். உரும் – இடி. கரையும் – ஒலிக்கும். ‘உருமிடைக் கடியிடி கரையும்’ – என்பதில் இடி முழக்கத்தைக் காட்டும் ஒலிநயம் உளது.

அருவி ஆன்ற நீரில் நீளிடைக்
கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை
அருஞ்சுரம் செல்வோர்க்கு அல்குநிழல் ஆகும். (137)

அருவி வறண்டு போன நீரற்ற நீண்ட வழியில், மெல்லிய தலையையுடைய பிடிக்கு அதன் வருத்தம் மிகும் பசியைக் களையும் பொருட்டு, பெருங்களிறு முறித்துத் தள்ளிய வளைந்த அடியினையுடைய ஓமைமரம் அப் பாலை வழியில் செல்வோர் தங்குவதற்கு நிழல்தரும். தலைவியைத் தலைவன் பசலை பாய்ந்து வாடும்படி வீழ்த்தியது பற்றிய உள்ளுறை இதிலுளது.

...கேழல் கெண்டிய
நிலவரை நிவந்த பலவுறு திருமணி
ஒளிதிகழ் விளக்கத்து ஈன்ற மடப்பிடி
களிறுபுறங் காப்பக் கன்றொடுவதியும் (399)

காட்டுப்பன்றி கிளரியதால் பூமியின் உள்ளிருந்து வெளியே வந்த, பலவான அழகிய மாணிக்கக் கற்களின் ஒளியில், இளம் பிடியானை கன்றை ஈன்றது. அதனைக் களிறு புறத்தே நின்று காத்தது.

இவ்வாறு மிக இயல்பாக, யானைகளின் குடும்ப உறவு பற்றிய உணர்வு நிலைகள் புனையப்பட்டுள்ளன.

## போலச் செய்யும் குரங்குகள்

பறவை விலங்கினங்களிற் சில போலச் செய்யும் இயல்புடையன என்பதை நாம் அறிவோம். கிளியைப் பழக்கினால் நாம் சொல்வதைச் சொல்கிறது. யானை பாகன் சொன்னபடி செய்கிறது. அவன் காட்டும் சைகை அதற்குப் புரிகிறது. குரங்குகள் நாம் ஒன்றை வீசினால், அவையும் அதுபோல வீசும். நாய்கள் ஆடல் கூடாரங்களில் என்னென்னவெல்லாம் செய்கின்றன!

முற்காலத்தில் இவற்றுடன் நெருங்கிப் பழகியதால், அவை மக்களைப் போல ஒருசிலவற்றில் நடந்துள்ளன. குரங்குகளைப் பொறுத்த மட்டில் இவை கூடுதலாகப் புனையப்பட்டுள்ளன.

மடங்கல் - அரிமா, சிங்கம். சிங்கக் கூட்டம் நிறைந்த குன்றம். அங்கு வளைந்த கொம்பையுடைய ஆமான் (காட்டுப்பசு) தன் கன்றுடன் உளது. அவை துயில்வதனைக் கண்டது ஒரு துய்த்தலை மந்தி (பஞ்சு போன்ற மயிரையுடைய தலை). அது கல்லென்னும் ஓசையிடும் தன் சுற்றத்தை, அவை ஒலியாவண்ணம் கையமர்த்திவிட்டு, அப்பசுவின் அருகிலே சென்று, பால் நிறைந்த மடியை அழுந்தக் கறந்து, தன் தாவத் தெரியாத குட்டியின் கையிலே, நிறையப் பிழிந்துவிடுகிறது.

தடங்கோட்டு ஆமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்... (57)

தடங்கோடு – வளைந்த கொம்பு. மடங்கல் – சிங்கம். துஞ்சு பதம் – அயர்ந்து தூங்கும் நேரம். சுரை – பால்மடி.

மிளகுக் கொடி வளரும் மலையடுக்கத்தில், தளிரைத் தின்னும் தன் சுற்றமாகிய கூட்டம் அறியுமென அஞ்சி கடுவனைக் களவில் புணர்ந்த செம்முக மந்தி, புணர்ச்சியால், தன்பால் ஏற்பட்ட வேறுபாட்டை மறைக்க எண்ணுகிறது. அதற்காக மலைமீதுள்ள ஆழமான சுனைநீரில் தன் தலையைக் கவிழ்த்துக் குளித்து, வேங்கை மரத்தின் பூஞ்சினையில் ஏறிஅமர்ந்து தனது புல்லிய தலை முடியைத் திருத்துகின்றது.

கடுவன்

முறிஆர் பெருங்கிளை அறிதல் அஞ்சிக்

கறிவளர் அடுக்கத்தில் களவினில் புணர்ந்த
செம்முக மந்தி செய்குறி கருங்கால்
பொன்இணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சினை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்தலை பாறுமயிர் திருத்தும்... (151)

முறி - தளிர். கறி - மிளகுக்கொடி. செய்குறி - புணர்ச்சி அடையாளம். செலீஇயர். ஏறி அமர்வதற்காக. பாறுமயிர் - பரட்டை முடி . மகளிர் முடியைத் திருத்துவதைப் பார்த்துப் பார்த்து, குரங்கு தன் முடியைத் திருத்துகிறது. புலவர் அதில் தன் கற்பனையை ஏற்றிச்சொல்கிறார் எனக் கருதலாம்.

கடுவன் தன் மந்தியையும் குட்டியையும் காணாமல் நடுங்கட்டும் என்று, அவை இரண்டும் மலை உச்சியில் நகர்ந்து செல்லும் முகில்களினூடே மறைந்து கொள்கின்றன (233).

கொழுத்த பலாச்சுளையுள்ள பலாப்பழங்கள் நிறைந்த மலை முகடு அது. அங்கு பலாப் பழங்களைத் தாங்கமாட்டாது, அந்த மரத்தின் கிளைகள் வளைந்திருக்கும். அதன் கிளையொன்றில் வந்தமர்ந்த கொக்கு, தான் கொத்தி வந்த மீனைக் குடைந்து தின்னுகிறது. அதனால் வந்த புலால் நாற்றத்தைத் தாங்கமாட்டாது, துய்த்தலை மந்தி தும்முகிறது (326).

கரிய விரல்களையுடைய மந்தி, சிவந்த முகத்தையுடைய தன் கூட்டத்துடன், பெரியமலையடுக்கத்தில் அருவியிலாடி, உயர்ந்த மூங்கிலின் நுனியிலேறி ஊஞ்சலாடி, வேங்கைப் பூக்கள் சுனையிலே விழும்படி அதன் கிளையிலேறிக் கடுவனொடு புணர்ந்து, இன்பத்தில் திளைக்கும் மலையக நாடன். இவ்வாறு குரங்குகளின் இன்ப வாழ்க்கை புனையப்படுகிறது.

கருவிரல் மந்திச் செம்முகப் பெருங்கிளை
பெருவரை அடுக்கத்து அருவி ஆடி

ஓங்குகழை ஊசல் தூக்கி வேங்கை
வெற்பணி நறுவீ கற்சுனை உறைப்பக்
கலையொடு திளைக்கும் வரையக நாடன்... (334)

மாந்தர்களின் காதல் வாழ்வைப் போலவே இஃது அமைகிறது.

இறால் மீன்

கடல்நீர் மணலில் ஊர்ந்து பரவுகிறது. கடற்கரையில் இதைக் காணலாம். கடல் அலைகள் வந்துவந்து போன உப்பு விளையும் வயலில், (உப்பளத்தில்), 'முடங்கு புற முதுகின் மோவாய் ஏற்றை' – வளைந்த முதுகும் உயர்ந்த வாயும் உடைய இறால் மீனின் ஏற்றை (ஏறு – ஆண்) கிடந்தது. அதை இரை தேடிப் பறந்துவந்த, கருங்கால் வெண் குருகு குத்த முயன்றது. அக் குத்துக்குத் தப்பிய அந்த மீன், அலைகள் கொண்டுவந்து குவித்த மணல்மேட்டின் உச்சியில், கடலை நோக்கிச் சாய்ந்து கிடக்கும் இலைகளையுடைய தாழையின் வண்டு மொய்க்கும் முதிர்ந்த பூமொட்டினைப் பார்த்து, அதுவும் குருகோ என்று அஞ்சியது. இத்தகை கடற்கரைக்குத் தலைவனாகிய காதலன், பிரிந்து வருத்துவதை யாரிட சொல்வது எனத் தலைவி வருந்துகிறாள்.

யார்க்குநொந்து உரைக்கோ யானே, ஊர்கடல்
ஓதஞ் சென்ற உப்புடைச் செறுவில்
கொடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த
கருங்கால் குருகின் கோள்உய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுகடல் தலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉம்
துறைகெழு கொண்கன் துறந்தனன் எனவே (211)

ஓதம் – கடல் வெள்ளம், பேரலைகள். செறு – உப்புவயல். கழி – உப்பங்கழி, சிறு நீர் நிலை. கோள் – மீனைக் கொத்துதல். முடங்குபுறம் – வளைந்த முதுகு. மோவாய் ஏற்றை – உயர்ந்த, மேல்நோக்கிய வாயையுடைய ஆண்இறால் மீன். திரை – அலை. எக்கர் – மணல்மேடு. துறுகடல் – கடலின் பக்கம். தோடு – இலைகள். வான்போது – வெள்ளை நிறமான தாழம்பூ மொட்டு மலரும் முன்னுள்ளது போது எனப்படும். கொண்கன் – கடற்கரைத் தலைவன்.

**யானையும் புலியும்**

உயிரினங்களில் ஒன்றற்கொன்று பகையாக மோதிக் கொள்வன சிலவுள. கீரியும் பாம்பும், நாயும் நரியும், பூனையும் எலியும் என்று பகையாவனவற்றைக் குறிப்பர். நற்றிணையில் யானையும் புலியும் பகைத்து மோதிக் கொள்வது பல பாடல்களில் வருகிறது.

மூங்கில்கள் வளர்ந்து, வெட்டிக் குவித்தது போன்று செடி கொடி மரங்கள் பின்னிக்கிடக்கும. புதரில் பெண்புலி படுத்துக்கிடக்கிறது. அது ஊனைத் தின்னுவதற்குரிய கொடிய பசியுடன் கிடப்பதால், அதன் பசியைப் போக்க ஆண்புலி எண்ணியது. அதற்காக மக்கள் வழங்குகின்ற சிறிய வழியில் கொடிய கண்ணையுடைய ஆண்புலி பதுங்கியிருக்கிறது. இக் காட்சி புலிகளிடமும் குடும்பப்பாசம் இருந்ததை உணர்த்துகிறது.

**... வேய் உயர்ந்து**

**எறிந்துசெறித் தன்ன பிணங்குஅரில் விடர்முகை**
**ஊன்தின் பிணவின் உட்குபசி களைஇயர்**
**ஆளியங்கு அரும்புழை ஒற்றி வாள்வரிக்**
**கடுங்கண் வயப்புலி ஒடுங்கும்** (322)

எறிந்து செறித்தன்ன – வெட்டிக் குவித்தாற் போன்ற. அரில் – பின்னிக்கிடப்பது. விடர் முகை – மலைக்குகைகள், பிளவுகள். புழை –

சிறுவழி, கடுங்கண் வயப்புலி – வலிய புலியின் கண்கள் நெருப்பு எரிவதுபோல் ஒளிவீசும்.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்ற பழமொழி ஊனை மட்டுமே உண்ணும், மரக்கறியென்னும் புல்லைத் தின்னாது என்பதை உணர்த்தும். எப்பொழுதும் வேலி ஓரமாகவோ, பின்பக்கமாகவோ, பதுங்கியிருந்து பாயும் இயல்பால் 'பாயும் புலி' என்பர். அவ்வாறு பாய்ந்து கொல்லும் போது கொல்லப்பட்ட மானோ, யானையோ எதுவாயினும் அது வலப்பக்கமாக விழுமாம். இது புலியின் பேராற்றலைக் குறிக்க வந்தது.

மஞ்சுதவழ் இறும்பில் களிறுவலம்படுத்த
வெஞ்சின உழுவைப் பேழ்வாய் ஏற்றை
அஞ்சுதக உரறும் ஓசை ... (154)

முகில் தவழும் குறுங்காட்டில், களிற்றை வலப்பக்கமாக விழக் கொன்ற, கருஞ்சினத்தையுடைய புலி, அஞ்சும் படி முழங்கும். உழுவை – புலி.

புலியும் யானையும் போர் செய்வதைப் பார்க்கும் குறவரின் இளம் மைந்தர், அஞ்சாது பாறை உச்சியிலேறி தொண்டகப் பறையை முழக்குகின்றனர். அப்பறை ஓசை தினைப்புனத்தில் மேயவந்த கிளிகளை விரட்டுகிறது.

பூம்பொறி உழுவைப் பேழ்வாய் ஏற்றை
தேங்கமழ் சிலம்பில் களிற்றொடு பொரினே
துறுகல் மீமிசை உறுகண் அஞ்சாக்
குறக்குறு மாக்கள் புகற்சியின் எறிந்த
தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது
பைந்தாள் செந்தினைப் படுகிளி ஓப்பும்... (104)

புலியின் உடம்பில் வரிகளும் புள்ளிகளுமாக இருக்கும். சிலம்பு – மலை. துறுகல் – நீட்டிக் கொண்டிருக்கும் பாறை. குறுமாக்கள் – சிறுவர். புகற்சி – விளையாட்டாக. பாணி – ஓசை.

பாலைவழியில் விலங்கினம் ஒன்றையொன்று அடித்துத் தின்று விட்டுப் போட்டுச் சென்ற எச்சிலை, அவ்வழிப் போவார் தின்றனர் என்று கூறப்படுகிறது. பரத்தமை ஒழுக்கம் கள் குடித்தல் புலால் உண்ணல் எல்லாம் அன்றைய வாழ்வில் கடியப்படினும் மக்களிடையே குடிகொண்டுவிட்ட பழக்க வழக்கமாக இருந்ததை. மறைக்காமல் புனையப்பட்டுள்ளது.

மன்னாயத்தின் குறை குற்றங்களை, புலவர்கள் மீது ஏற்றி விமர்சிப்பது தவறு. தொடக்க கால மக்களின் நிலை மேன்மை நோக்கி வளர்ந்ததா என்றுதான் பார்க்கவேண்டும்.

களவுப் பாடல்கள் எல்லாம் கற்பை - திருமணத்தை நோக்கியனவாகப் பாடப்பெற்றிருப்பதேன்? பரத்தமை வாழ்வில் மனைவியின் உரிமையும் உயர்வுமே வெளிப்படுமாறு கூற்றுக்களை அமைத்திருப்பது ஏன்?

மருதத்திணைப் பாடல்களுக்கு உரிப் பொருளாக 'ஆடல்' என்பதை அமைத்து இன்பக் களியாட்டங்களைப் புனைந்திருக்கலாமே? அவை பற்றிய குறிப்புக்கள் வருகின்றனவே? ஊடல் என்று, உரிப்பொருள் அமைத்து, தலைவியின் உரிமைக்குரலுக்கு வாய்ப்பளித்திருப்பதேன்?

அன்றைய மக்கள் சிற்றுயிர்களுடனும் சமமாகப் பழகியமை, புலனாகிறது.

யாளி என்ற, இன்று காணப் படாததும் கோயில்களிலுள்ள சிற்பங்களில் மட்டும் காணப்படுவதுமாகிய விலங்கு பற்றிய குறிப்பு வருகிறது. 'ஆளி நன்மான்', புலிவீழ்த்திய யானையைத் தனக்கு உணவாக இழுத்துப்போகிறது (205).

பக்கமலையெல்லாம் அதிர்ந்து அஞ்சும்படி, களிற்றைக் கொன்று, அரிமா (சிங்கம்) முழங்குவதாக ஒரு பாடல் உளது (112).

அசுணம், அசுணமா என்பது ஒரு விலங்கு. மனிதரைக் கொல்லும் மிகக் கொடிய விலங்கு அது. இனிய ஓசையில் மகிழும் அது, பறை

ஓசைபோலும் கடிய ஓசை கேட்டால் மயங்கிவிழுந்து இறந்துபடும். இந் நுண்ணிய செவிப்புலனையுடைய அசுணமா, காலப்போக்கில் குறைந்து மறைந்துபோனது. 'மாதர் வண்டின் நயவரு தீங்குரல், மணம் நாறு சிலம்பில் அசுணம் ஓர்க்கும்' (244) என்பர். யாழோசை போன்ற வண்டின் ரீங்கார ஓசையை, அசுணம் கூர்ந்து கேட்கிறது. இதைக் கொல்ல விரும்புபவர் முதலில் யாழோசையை எழுப்புவராம். அதைக் கேட்டு அது மயங்கி நிற்கும் போது, பறையை முழக்கிக் கொல்வராம்.

**அசுணம் கொல்பவர் கைபோல் நன்றும்**
**இன்பமும் துன்பமும் உடைத்தே**
**தண்கமழ் நறுந்தார் விரலோன் மார்பே** (304)

தலைவன் நட்பு தனக்கு இன்பமும் துன்பமுமாவதைத் தலைவி இவ்வாறு கூறுகின்றாள். அசுணமாவைக் கொல்ல விரும்புபவர் கை இருவித இசையை முழக்குவதால், இன்பமுடையதாய்த் தோன்றி உடனே துன்பமாய் முடிகிறது.

பாந்தள் என்றும் (14), மாசுணம் (261) என்றும் மலைப்பாம்பு குறிக்கப்படுகிறது. களிற்றை விழுங்க முயன்ற அது, வயிரம் பொருந்திய மரத்தில் அதைப் பிணித்து வளைத்துப் புரட்டிக் கொல்கிறது.

நண்டு(267), வாளைமீன் (340), செந்நாய் (103), கரடி ((125), கறையான் (325), ஆந்தை (218) என இவ்வாறு சிற்றுயிர்கள் பற்றி வருவன இன்றும் அவ்வாறே காணத் தக்கனவாக உள்ளன.

**நகைச்சுவை**

பாணனைப் பற்றியும் தலைவனைப் பற்றியும் நகைச்சுவை அங்கதமாய்ப் பல பாடல்கள் புனையப்பட்டுள்ளன. நற்றிணையில் ஒரு பாடலிலுள்ள கற்பனை புலவர் நகைச்சுவைப்படுத்த வேண்டுமென்று பாடியதாகத் தோற்றுகிறது.

அலை கொண்டுவந்து குவித்த நீண்ட மணற்பரப்புடைய அடைகரையிலே நாவல்மரம் நின்றது. அந்தப் பொலிவற்ற அடியினையுடைய நாவல் மரத்திலிருந்து, ஒரு 'பொதிப்புற இருங்கனி' கீழே விழுந்தது (களி

பொருந்திய புறத்தையுடைய கரிய நாவற்கனி). அதைத் தன் இனமென்று எண்ணி தும்பிவண்டு அதில் மொய்த்தது.

அவ் வண்டினை நாவற்பழம் என்று கருதி, பல கால்களையுடைய அலவன் (நண்டு) பற்றியது. அவ்வாறு நண்டு பற்றியமையால். துன்பம் மிகப் பெற்ற வண்டு, மிக்க யாழோசை போல் ரீங்காரமிட்டுக் கத்தியது. இரை தேடுகின்ற நாரை அங்கே வர, நண்டு அதனிடமிருந்து தப்புவதற்காக வண்டினை விடுவித்து ஓடியது.

இத்தகைய வளமுடையது சேரநாட்டு மாந்தை என்ற கடற்கரை நகரம். அந் நகரம் போன்ற அழகுடையவள் தலைவி.

அவள் தலைவன் பக்கத்திலிருக்கவும் பசலையடையும்படியான அத்துணை மென்மையுடையவள். எனவே அவளை என்றும் பிரியாது போற்றுக என்று தோழி தலைவனிடம் வேண்டுகிறாள்.

பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழம்செத்துப்
பல்கால் அலவன் கொண்ட கோட்கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்தி விடுக்கும்
துறைகெழு மாந்தை அன்ன இவள் நலம்... (35)

இப்புனைவில் உள்ளுறைக் குறிப்புப் பொருள் உளது. நாவற்கனி – தலைவி. வண்டு – தோழி. அலவன் (நண்டு) – தலைவியின் உறவினர். இரை தேர் நாரை – தலைவன். நாவற்கனியைத் தும்பி மொய்த்தலும் தும்பியைப்பழமென்று அலவன் பற்றிக்கொண்டது. அலவன் நாரை வரக்கண்டு – வண்டையும், வண்டு கனியையும் விட்டுவிட்டன. தோழியுடன் சேர்ந்திருந்த தலைவியை, அவளது பெற்றோரும் உறவினரும் இற்செறிக்க. அப்போது தலைவன் வரைவொடு வர அங்கு கனி தப்பியதுபோல இங்கு தலைவி தப்பித்தாள் என ஒருபுடை ஒப்புமை கொள்ளலாம். இது உள்ளுறை.

# 3

# அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு, மனிதன் 'உடல்மொழி' என்று இன்று கூறும் சைகை மொழியையே கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தினான். அன்று ஆடிப்பாடும் போது, அவனுள்ளிருந்து வெளிப்பட்ட ஒலிகளின் வடிவமே மொழிகளாயின. விலங்கொடு விலங்காக வாழ்ந்த காலம்போய், மனிதன் முன்னேறிய அக்காலப் பகுதியில் எழுதப்படாத - எழுத்துமொழி தோன்றாத, வாய்மொழி மரபு மிக நீண்டகாலம் நிலவியது. இவ்வீரநிலைக் காலத்தின் முதிர்ச்சிபெற்ற நிலையை, கிரேக்கம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் மட்டுமே மிகத் துல்லியமாகக் காண்கின்றோம். பேராசிரியர்கள் சி.எம்.பளரா, க. கைலாசபதி இருவரும் முறையே, இவ்விரு வாய்மொழி இலக்கிய மரபின் தோற்றமும் வளர்ச்சியும்பற்றி நன்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

கரடுமுரடான கற்கள் காட்டாற்று வெள்ளத்தில் அடித்துவரப்பட்டு, உருண்டு உருண்டு மிக நீண்ட காலத்திற்குப் பிறகு, உருண்டைக்கற்களாய் வழுவழு மொழுமொழுவென மாறுகின்றன. இவை கூழாங்கற்கள் எனப்படும். சங்கச் செவ்வியல் இலக்கியத்திற்கு முந்தைய இவ் விலக்கிய மரபு, கூழாங்கல் போன்ற வடிவத்தை அடையச் சில நூற்றாண்டுகளேனும் ஆகியிருக்கும். சங்கச் செவ்வியல் இலக்கியம் இந் நாட்டுப் பாடல் மரபை உட்கொண்டதே யாயினும் அதிலிருந்து வளர்ந்து முதிர்ந்த திறனை

வெளிப்படுத்துவதாக உளது. பெரியதொரு கல்லைச் சிற்பமாக வடிக்க நினைக்கும் சிற்பி, தான் நினைத்த வடிவிற்கு வேண்டியதை மட்டும் வைத்துக்கொண்டு, வேண்டாத பிறவற்றையெல்லாம் நீக்கிவிடுகின்றான் என்றும், அங்ஙனம் தேவையற்றவை நீக்கப்பட்டதும் சிற்பம் உருவாகிறதென்றும் கூறுவர். சங்க இலக்கியச் சிற்பம், வேண்டாதவற்றைக் கழித்துவிட்டதோடு, மிகக் கூர்மையான, செறிவான நுட்பத்திறன்களுடன் படைக்கப் பெற்றிருப்பது பல நூற்றாண்டு வளர்ச்சியைக் காட்டுகிறது.

இன்றும் பழங்கால வாய்மொழி இலக்கிய மரபை நினைவூட்டிக் கொண்டிருப்பன பழமொழி, விடுகதை, தாலாட்டு, ஒப்பாரி, தெம்மாங்கு, சிந்து, பள்ளு போல்பவை ஆகும்.

பொழுதெப்ப' விடியும்
பூவெப்ப' மலரும்
சிவனெப்ப வருவார்
வரமெப்பத் தருவார்

குழந்தைகளிடம் தாய் பாடிக்காட்டும் பாடல் இது.

உறங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மையெழுதி
தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மையெழுதி.

உழக்குத் தினைவிதைத்து – வள்ளி
ஓடிக் கிளிவிரட்டி

நாழித் தினை விதைத்து – வள்ளி
நடந்து கிளி விரட்டி

பதக்குத் தினை விதைத்து – வள்ளி
பாடிக் கிளிவிரட்டி

இன்னார் மகனோ
இனியார் மருமகனோ
தனதாய் விளையாடும்
தமிழோ புனக் கிளியோ

இவை தாலாட்டில் வரும் பாடலடிகள். இவை பல தனித்தனித் தொடர், அடிகளாய் தம்முள் முற்றுப்பெற அமைந்து, பின்னர் அவற்றை அடுக்கியவையாக ஒன்றிநின்று, ஓசையுடன் திகழ்வதைக் காணலாம். பொழுதெப்ப விடியும் - தனித்தும் நிற்கிறது. பூவெப்ப மலரும் - தனியே வினவலாம்தானே? பின்னர் அவை இணைந்து, ஒன்றிநின்றும் பொருள் தருகின்றன.

பழமொழிகளும் விடுகதைகளும் இத்தகையனவே. தொல்காப்பியர் காலத்திலேயே இவை இலக்கிய வகைகளாக ஏற்கப்பட்டன.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
வெந்த புண்ணில் வேலெறிந்தாற் போல

கூழனாலும் குளித்துக் குடி
கந்தையானாலும் கசக்கிக் கட்டு

இவற்றில் ஓரடியே தனிப் பொருள் தருமாறு முற்றப்பெற அமைந்துள்ளன.

கத்திபோல் இலையிருக்கும்
கவரிமான் பூப்பூக்கும்
தின்னப் பழம்பழுக்கும்
தின்னாத காய்காய்க்கும்

வேப்பமரம், வேப்பம்பழம். ஒவ்வொரு தொடரும் ஒவ்வொன்றைக் குறிக்கின்றமை காண்க. ஒவ்வோரடியும் தனித்தும் பாடலாகிறது; ஔவையார் இருசீரடியாலும் நாற்சீரடியாலும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் எனப் பாடியவை, இவற்றின் வழிப்பட்ட இலக்கிய வடிவங்களே.

'அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே' (1292) என்பது தொல்காப்பியம். தனக்குரிய சீர்மை முற்றுப்பெற அமையுமேல் ஓரடிகூடப் பாட்டு என்று சிறப்பித்துச் சொல்லப்படும். அடிகள் இரண்டும் பலவுமாய் அடுத்துவந்து தொடுக்கப்படுவது பாட்டு. 'அடி' - உறுப்பொன்றே, அது இன்ன செய்யுள் என்று காட்டும். ஒவ்வொரு வீடும் நன்றாயிருந்தால், ஊர் நன்றாயிருக்கும்; ஒவ்வோர் ஊரும் நன்றாயிருந்தால் நாடு நன்றாயிருக்கும் என்பது போன்றது இது. பாடலில் ஒவ்வோர் அடியும் சிறப்பாக இருக்க வேண்டும் என்றும், ஓரடியே சிறப்பாக இருந்தால் பாட்டாகும் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். மேற்காட்டிய வாய்மொழி இலக்கியத் தாக்கத்தை இங்கு ஒப்பு நோக்குக.

எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர் (தொல். 1336)

புலவன் தான் கருதிய பொருளை, பொருள்தரும் சிற்றெல்லையாகிய எழுத்து முதலாக, அசை, சீர், தளை, தொடை, அடி ஈறாக, முற்ற முடிய அமைத்துப் பாடுவனேல், அது ஒரு யாப்பாகும் - யாக்கப்படும் இலக்கிய வகையாகும். பாவில் பொருளை நாட்டல் என்னாமல், அடியில் எனக் குறித்திருப்பது காண்க. அடிக்கும் அடிகளாலாகிய பாவுக்கும் பொருந்துமாறு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே (தொல். 1361)

ஓசைக்குச் சிற்றெல்லை உறுப்பாகிய மாத்திரை முதலாக எழுத்து, அசை; சீர், தளை, தொடை, அடி முடியுந்துணையும், கேட்பவர் / படிப்பவர் உற்று நோக்கிப் பயன்கொள்ளுதற்குரிய 'இலக்கியக் கருவி' ஒன்று அமைந்திருப்பது நோக்கு எனப்படும். உற்றுநோக்கி இலக்கிய இன்பம் நுகர்தற்குக் காரணமானதோர் இலக்கியக் கலைநுட்பம், கருவி, திறன் ஒன்று

அமைந்திருப்பதே நோக்கு ஆகும். இந் 'நோக்கு' அமைந்துள்ள பாடல்களே சிறந்தவையாகும். இங்கும் 'பா முடி காறும்' என்னாது 'அடிநிலை காறும்' என்றது அடியின் தனிச் சிறப்பையும் அடிகளின் தொடர் சிறப்பையும் சுட்டுவதாயுளது.

சங்கச் செவ்வியற் பாடல்கள் அனைத்திலும் தம்மளவில் தொடர்கள் சிறப்புற அமையும்; அடிகள் தம்மளவில் முழுமைச் சிறப்புடன் அமையும். அதனால் அவற்றால் தொடுக்கப்பட்ட பாடல்கள் சிறப்புற அமையும். இக் கட்டமைப்பு வேற்றுமொழி இலக்கியங்களில் அரிதிற் காணப்படுவது. சங்கச் செவ்வியற்பாடல்கள் இத்தகைய 'அடிகளின்' தொடர்ச்சியாலும் கலப்பாலும் அமைந்துள்ளமை, பல்வேறு கட்டமைப்பு வடிவ வகைகளாக ஆராயத் தக்கதாகும்.

பாடலில் அடிகளின் அமைப்பு

பாடலுள் பயிலும் முழுமை பெற்ற அடிகள் சிலவற்றைக் காண்போம். இவை ஒரு சோற்றுப் பதம் போல்வன. தனித்தவை, இரண்டு மூன்று அடிகளில் அமைபவை, இடையிற் சில அடிகள், தொடக்கம், முடிவில் அமைபவை என இவை பலவ றுநோக்கத் தக்கவை.

நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ் சூல் வெண் குருகு (31-10) - புன்னை மரத்தின் நீண்ட கிளையிலிருக்கும் முதற்கருக்கொண்ட வெண்கொக்கு. இவ்வாறான பொழிப்பெதுகை மிகுதி. இதனால் அடி சிறப்பும் ஓசையும் பெறுகிறது.

அயலோர் தூற்றும் அம்பலும் அளித்தே (73-1) - ஊரார் தூற்றும் பழிச்சொல்லும் இரங்கத் தக்கதே (காதலர் பற்றி ஊரார் முணு முணுத்தது). இக் கீழ்க்கதுவாய் மோனை, பாடலின் முடிவில் வருகிறது.

அறுமீன் பயந்த அறம்செய் திங்கள் (202-9) - ஆறு புள்ளிகளாக இருக்கும் கார்த்திகை நாள்மீன்; அதற்குரிய மாதம். 'தவத் தைந் நீராடல்'

என மகளிர் நீராடி, வழிபடும் அறம் செய்தற்குரிய திங்கள் என்பது கருத்து. திருக்கார்த்திகை என விளக்குவரிசை ஏற்றி, முருகனை வழிபடும் செய்தி இதில் வருகிறது.

கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர் (212-5) - கடிய ஓசையுடைய பம்பை வாத்தியத்தை முழக்கும், சினமிக்க நாய்களைக் கொண்டு வேட்டையாடும் இயல்புடைய வடுகர். பொழிப்புமோனை ஓசையைச் சிறப்பிக்கிறது.

**பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்**
**கங்குல் மாட்டிய கனைகதிர் ஒண்சுடர்**
**முதிரா ஞாயிற்று எதிர்ஒளி கடுக்கும்**
**கானலம் பெருந்துறைச் சேர்ப்பன் (219 : 6-9)**

கடலில் போய் பெரிய மீன்களைப் பிடிக்கும் சிறிய ஊர்களில் வசிக்கும் பரதவர், இரவில் கப்பல்களுக்கு வழிகாட்டக் கலங்கரை விளக்கம் என அமைத்த, நெருங்கிய ஒளிக் கதிர்களையுடைய ஒளிச்சுடரானது, இளஞாயிற்றின் எதிர் ஒளிபோலத் தோன்றும். அத்தகைய கடற்கரைச் சோலைகளையுடைய தலைவன். முதலடி - பொழிப்புமுரண். இரண்டாம் அடி பொழிப்பு மோனை. மூன்றாம் அடி - பொழிப்பு எதுகை. பாடலினிடையே வரும் இவை நெய்தல் நிலத் தலைவனைக் காட்டுவன.

கண்டல் வேலிய ஊர்அவன்
பெண்டென அறிந்தன்று, பெயர்த்தலோ அரிதே (74:10,11)

காதலரைப் பற்றி ஊரெலாம் அலர் பரவிவிட்டது. எனவே தாழை மரங்களை வேலியாகவுடைய கடற்கரை ஊர், இவளை அவன் மனைவி என அறிந்துகொண்டுவிட்டது. இனி இதை மாற்ற முடியாது. அடி எதுகை, பாட்டின் முடிவுக்கு அழகு சேர்க்கிறது. இறுதியடியில் பொழிப்பு மோனை உளது. இவ்வாறு முடிக்கும் அடிகள் முத்தாய்ப்பாக இருப்பது ஒருவகை.

**என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியும்**
**தன்கைக் கொண்டு என் நன்னுதல் நீவியும்**
**அன்னை போல இனிய கூறியும்**
**கள்வர் போலக் கொடியன் மாதோ...** (28: 1-4)

குறிஞ்சி நிலக் காதலனின் பிரிவினால் வருந்தும் தலைவியும் தோழியும் அவனைப் பொய்யாக நடிக்கும் கள்வன் எனப் பழித்துக் கூறுவது இது. முதல் மூன்றடிகளில் அடி எதுகை; முதல் இரண்டு அடிகளுக்குள் பொழிப்பெதுகை உள்ளன. அன்னை போல நடித்துக் கள்வர் போல நடப்பது முரண்சுவைபடக் கூறப்பட்டுள்ளது. பல பாடல்களில் பாட்டின் தொடக்கமே சொல்லவந்த கருத்தின் சாரத்தைத் தந்துவிடும்.

**பாடல்களின் கட்டமைப்பு**

பாடல்களின் கட்டமைப்பை ஒருசிலவாகப் பகுத்துவிடலாம். செவ்வியற் புலவர்கள், பாடல்களைக் கட்டமைத்திருக்கிற விதம் மனத்தை ஈர்க்கவல்ல அழகும் இனிமையும் உடையது.

தலைவியைப் பற்றி வினவிய பாங்கனிடம், தலைவன் கூறுவது:

**.............குறக் குறுமாக்கள் தாளம்கொட்டும்அக்**
**குன்றகத் ததுவே குழுமிளைச் சீறூர்;**
**சீறூரோளே நாறுமயிர்க் கொடிச்சி;**
**கொடிச்சி கையகத் ததுவே பிறர்**
**விடுத்தற் காகாது பிணித்தஎன் நெஞ்சே** (95)

(குறுமாக்கள் - சிறுவர். குழுமிளை - காடடர்ந்த. நாறும் - மணக்கும். கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண். என் நெஞ்சு அவள்பாற் பிணிக்கப்பட்டது; பிறரால் விடுவித்தற்கு இயலாது.)

நாட்டுப் புறத்தார் கதை சொல்வது போன்ற நடை. விட்ட இடத்தில் மீட்டும் கூறித் தொடுப்பதால் அந்தாதி போலவும் உளது. சிறுபாணாற்றுப்

படையில், விறலியை முடிமுதல் அடிவரை வருணிக்கும் பொழுது இதுபோன்ற நடையுளது.

சேர்ந்துடன் செறிந்த குறங்கின்; குறங்குஎன
மால்வரை ஒழுகிய வாழை; வாழைப்
பூவெனப் பொலிந்த ஓதி; ஓதி
நளிச்சினை வேங்கை நாள்மலர்.... (20 - 23)

முன்னும் பின்னும் இவ்வாறு 21 அடிகளில் விறலியின் அழகு புனையப்படுகிறது. இவை ஒருவகை அமைப்பின.

காதலியை அடைய முடியாத நிலையில், மடலேறி உயிரை விடலாமா என்றெண்ணும் தலைவன், தோழி கேட்பத் தன்னுள்ளே பேசிக்கொள்கின்றான்.

மடலே காமம் தந்தது; அலரே
மிடைபூ எருக்கின் அலர் தந்தன்றே;
இலங்குகதிர் மழுங்கி எல்விசும்பு படர
புலம்புதந் தன்றே, புகன்றுசெய் மண்டிலம்;
எல்லாம் தந்ததன் தலையும் பையென
வடந்தை துவலை தூவ, குடம்பைப்
பெடைபுணர் அன்றில் உயங்குகுரல் அளைஇ
கங்குலும் கையறவு தந்தன்று
யாங்காகு வென்கொல் அளியென் யானே? (152)

காமம் மடலேறும் நிலையைத் தந்தது; ஊரார் பேசும் அலர் எருக்கம்பூ மலர் தந்தது; விருப்பம் தரும் ஞாயிற்று மண்டிலம் ஒளி மங்கி வானில் மாலைப் பொழுதாகித் தனிமைத் துயரைத் தந்தது. இவை எல்லாம் தந்ததற்கு மேலேயும் வாடைக் காற்று, வீசும் கூட்டினுள் தன் பெடையைக் கூடும் அன்றில், சிறு குரலை எழுப்பும் இரவுப்பொழுது செயலற்ற

துன்பத்தைத் தந்தது. யான் என்ன நிலையை அடைவேனோ? என் நிலை இரங்கத் தக்கது.

இப் பாடலில் ஒருசொல் திரும்பத் திரும்ப வந்து; துன்பம் படிப்படியாக வந்து தாக்குவதை உணர்த்துகிறது. குறுந்தொகையில் இதுபோன்ற நடையுடைய பாடலொன்று உளது.

ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறைஅணிந் தன்றுஅவர் ஊரே; இறை இறந்து
இலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்புஅணிந் தன்றுஅவர் மணந்த தோளே (50)

அவர் ஊர் நீர்த்துறையைப் பூக்கள் அழகுசெய்தன; அவரைக் கூடிய என் தோள்கள், வளையல்கள் கழன்றுவிழ, தனிமைத் துன்பத்தையே அழகாகப் பெற்றன. இதுபோன்ற நடையுடையவை பலவுள.

கூன் என்பது தனிச்சொல். ஒரு சொல்லோ அல்லது தொடரோ, பாடலின் தொடக்கத்திலோ, இடையிலோ தனித்து நிற்கப் பாடுவதுண்டு. அது பாடற்கருத்துக்குத் தெளிவு தருவதோடு நடையழகும் தருகிறது.

நிலவே
நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பி
பால்மலி கடலின் பரந்துபட் டன்றே;
ஊரே,
ஒலிவரும் சும்மையொடு மலிபுதொகுபு ஈண்டி
கலிகெழு மறுகின் விழவு அயரும்மே;

கானே,
பூமலர் கஞலிய பொழிலகம் தோறும்

தாம் அமர் துணையொடு வண்டிமி ரும்மே;
யானே,
புனைஇழை ஞெகிழ்த்த புலம்புகொள் அவலமொடு
கனைஇருங் கங்குலும் கண்படை இலெனே;
அதனால்,
என்னொடு பொரும்கொல் இவ்வுலகம்?
உலகமொடு பொரும்கொல்என் அவலமுறு நெஞ்சே? (348)

காதல் வேட்கை மிகுதியால் தலைவி கூறியது இது.

நிலவொளி பாற்கடல் போல் வானில் பரந்தது. ஊர் ஆரவாரத்துடன் கூடி, தெருவெல்லாம் விழாக் கொண்டாடியது. காட்டில், மலர்கள் பூத்துக் குலுங்கி, வண்டுகள் துணையுடன் கூடி ரீங்காரமிட்டன. யான், என் அணிகலன்கள் கழன்று விழுமாறு மெலிந்து துன்புற்று இரவெல்லாம் உறக்கமிழந்தேன். அதனால், இவ்வுலகம் என்னுடன் பகைத்து என்னை அழிக்குமா? அல்லது எனது அவலமுற்ற நெஞ்சம் இவ்வுலகத்துடன் போரிடுமா? என்ன செய்வதென்று அறிகில்லேன்!

இப்பாடலில் ஒவ்வொரு கருத்திற்கும் இரண்டு அடிகள்; அதை விரல்விட்டு எண்ணிச்சொல்வதுபோல் ஒரு தனிச்சொல். இவ்வாறான அமைப்புடைய பாடல்கள் பலவுள.

இவ்வாறு இயல்பான ஒரு செய்தியை – உலகில் நடப்பதை, நடக்கக் கூடியதை, ஏதேனும் ஓர் அமைப்பிற்குள் வைத்து, உட்படுத்திப் பாடுவதென்பது, மிகவுயர்ந்த புலமைத் திறனாகத் தோன்றுகிறது.

## உள்ளத்தில் ஒளியேற்றும் உயர்ந்த சிந்தனைகள்!

ஒருவருடன் பழகுகின்றோம்; முப்பதாண்டுகளுக்குமேல் அவரை அறிவோம். அவர் நல்ல பண்பாளர்; நினைக்குந் தோறும் அவருடைய நல்ல பண்புகளே நினைவுக்கு வரும்.

மற்றொருவரிடமும் பழகியதுண்டு. அவரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவருடைய பொய், வஞ்சனை, பொறாமை முதலியனவே நினைவுக்கு வரும். சிலரைப் பற்றி எண்ணும்போதோ அவருடைய ஒழுக்கக் கேடுகளே தலைதூக்கி நிற்கும்; மற்றும் சிலரை நினைக்கும் பொழுதெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்கும்.

பெருந்தகைஞர்

ஒரு நல்ல நண்பர் பற்றிய வாழ்த்தரங்கில் நாம் சொல்லக் கூடிய தொடர் ஒன்றுளது. அது,

'நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்' (நற்.1)

என்பதாகும். சொன்னசொல் தவறாதவர் – நின்ற சொல்லர். மிக நீட்டிச் சொல்லவேண்டியதையும் ஒரு சிமிழில் அடக்குவது போலச் செறிவுடைய தொடராக்குவது அவையப் பாடல் மரபு. 'நீடுதோறு இனியர்' – எவ்வளவு காலம் நீள நினைத்தாலும் எத்தனைமுறை எண்ணினாலும் மனத்திற்கு இன்பம் தருபவர் அவர். அவருடன் கொண்ட நட்பு எத்தகையது?

'புரைய மன்ற புரையோர் கேண்மை' (நற்.1)

மேன்மக்களுடன் கொண்ட நட்பு மேன்மையுடையதாகவே விளங்கும். எத்தகைய மேன்மை என்பதற்குத் தந்துள்ள உவமையும் சிறந்ததாகும்.

'தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை' (நற்.1)

தாமரையில் குளிர்ந்த மகரந்தப் பொடியை எடுத்து, மலைமேலே இருக்கும் சந்தனமரத்தில் கட்டிய, இனிய தேன்கூடுபோல, மேல்மக்கள் நட்பு மேன்மையுடையதேயாகும். அக்கால இயற்கைச் சூழலில் இவ்வாறு தேன்

கூடு அமைவது நடக்கக் கூடியதே. அந்தத் தேனில் மணமும் இனிமையும் இருப்பதுபோல, உயர்ந்தவர் நட்பில் பண்பும் இனிமையும் இருக்கும் என்று கருதுமாறு உவமை உளது. இப்பாடல் தன் காதலனின் உயரிய பண்பைத் தலைவி தோழிக்குச் சொல்வதாக வருகிறது.

**அடிகளும் பாட்டாகலாம்**

இவ்வாறு ஒரு பாடலின் இடையேவரும் அடிகளைத் தனித்தும், இரண்டடி மூன்றடி என இணைத்தும் பொருந்துமாறு செய்து, பின்னர் அனைத்தையும் தொடுத்த ஒரு பாடலாக்குவது அவையப் பாடற் கட்டமைப்பாகும். புறநானூற்றில் வரும் கணியன் பூங்குன்றன் பாடலிலுள்ள, முதலடியாகிய **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** என்பது மட்டுமே, தனித்ததொரு பாடல்போல எடுத்தாளப்படுவதைக் காண்கிறோம் அல்லவா? அதில் **'தீதும் நன்றும் பிறர்தர வாரா'** என்ற இரண்டாமடியும் தனித்து எடுத்தாளத்தக்கதல்லவா? இறுதியில் **'பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'** என்று முடியும் அடிகள் எத்துணைச் சிறப்புடையன. மேலே உள்ள அடிகளில், அதற்கான காரணம் இருப்பினும், இந்த இரண்டு அடிகளை மட்டும் ஓர் ஒட்டித்தாளாக அச்சிட்டு, அலுவலகங்களில் ஒட்டி வைக்கலாமே?

**தன் முயற்சி தரும் இன்பம் போன்றதே தலைவி தரும் இன்பம்**

தன் மனைவியைப் பற்றிக் கணவன் பெருமிதமாகக் கூறும் பொழுது,

**'உள்ளிய, வினைமுடித் தன்ன இனியோள்'** (நற்.3) என்று கூறுகிறான். நினைத்த காரியத்தை அரிதின் முயன்று, வெற்றியாக முடித்துவிட்டால், மனத்தில் பெருகும் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா? அத்தகைய மகிழ்ச்சியைத் தருபவளாம் மனைவி. இப்படியும் உவமை கூறுவதால், அது விருந்துடன் தரப்பட்ட மருந்தாகிறது.

### வழிபடு தெய்வம்

காதலியைப் பாலை நிலவழியாக உடன்போக்கில் அழைத்துச் செல்லும் தலைவன், அவளுக்கு ஆறுதல் சொல்கின்றான்.

'அழிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண் டாஅங்கு' (நற். 9)

யான் என் வருத்தம் தீர, உன்னைக் காதலியாக அடையப் பெற்றேன் என்று கூறுகிறான் காதலன். அழிவில முயலும் – கேடற்ற நல்ல காரியங்களை முடித்துத் தருமாறு, தெய்வத்திடம் முறையிடுதல் குலதெய்வத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்துவது போல்பவை இன்றும் உள்ள தமிழர் வழக்கமே. அவ்வாறு முயலும் பத்திமையுடையார் முன்னே, நேரில் அத்தெய்வமே தோன்றி நினைத்ததை முடித்துக் கொடுத்தால் எப்படி இருக்கும்? தான் விரும்பிய காதலியை ஒரு காதலன் அடையப் பெற்றதற்கு, இவ் உவமையைக் கூறியிருப்பதால், காதல் பாட்டு வாழிவியல் பாட்டாகவும் அமைகின்றது.

### காதலா, கடமையா?

அக் காலத்தில் ஆடவர்கள் பொருள் தேடப் பிரிவது, அயல் நாடு செல்வது, நீண்ட பயணங்களை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதனால் மனைவியைப் பிரிந்தே ஆக வேண்டும். பிரிந்தால், இளமைக்காலம் இன்பமாகக் கழியாது; அதற்காகப் பிரியாது, வீட்டிலேயே இருந்தால் பொருள் தேட முடியாது. பொருளின்றி வாழ்க்கை இல்லை. இதனால் ஆடவர் நெஞ்சம் பெரும் மனப் போராட்டத்திற்கு ஆளானது. ஒரு கணவன் எண்ணிப் பார்க்கின்றான்,

'புணரின் புணராது பொருளே; பொருள்வயிற்
பிரியின் புணராது புணர்வே'

என்று கூடியிருந்தால் பொருள் கைகூடாது; பொருள் தேடப் பிரிந்தால் கூடி இன்புற்று வாழ்தல் கூடாது. இதற்கு என்ன செய்வது?

'பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ' (நற்.16)

வாடாத பூ மலர்ந்திருக்கும் குளத்தில், ஓடுகிற மீன் போன தடம் உடனே மறைவது போலச் செல்வமும் நிலையின்றிப் போய் விடும். இவ்வாறு சிந்திக்கும் அவன், சிலநாள் தங்கித் தலைவியைத் தேற்றிப் பிறகு பிரிவான். இதனைச் 'செலவழுங்குதல்' என்பர் (பிரிவைச் சிறிது காலம் தவிர்த்தல்).

தமிழகத்திலிருந்து, இன்றைய ஆந்திர இராயலசீமை எனப்படும் அக்காலப் பாலை நிலவழியாக, வடநாட்டிற்குத் தமிழக வணிகர்கள் சென்று வந்தனர். பல்வேறு பாலைத்திணைப் பாடல்கள், மலைகள், காடுகள், வறண்ட பாலைநிலங்கள் வழியாக வடநாட்டுக் கங்கைச் சமவெளி வரை, தமிழக வணிகர்கள் கூட்டம் கூட்டமாகச் 'சாத்து' எனப்படும் வணிகக் குழுக்களாகச் சென்றுவந்தமையை விரிவாகக் கூறுகின்றன. ஐந்நூற்றுவர், ஆயிரவர் என்று கூறப்படும் குலப்பெயரில் வரும் எண்ணிக்கைகள், தொடக்க காலக் குழுக்கள் பற்றியனவே. இதில் பொருள்தேட மனைவியைப் பிரிவதா? பொருள் தேடாதிருப்பதா? – என்ற மனப் போராட்டம் மிகப்பல பாடல்களில் இடம் பெறுகின்றன. அறிஞர் மு.வரதராசனாரின் 'ஓவச்செய்தி' என்ற நூலில் இதுபற்றிய, தெளிவான விளக்கங்கள் உள.

நற்றிணைப் பாடலொன்றில், பொருள் வயிற் பிரியக் கருதிய தலைவன் தன் உணர்வு ஒருபக்கமும், அறிவு மறுபக்கமும் 'கயிறு இழுப்புப் போட்டி' போல இழுப்பதால், தன் உடம்பு வருந்திக் கெடுவதாகக் கூறுகிறான். உணர்வு அழகிய துணைவியைப் பிரியாதே என்று கூறுகிறது. அறிவு பொருள் தேடாமல், வீட்டில் கிடப்பது அறியாமையுடன் இளிவும் தரும் என்று கூறுகிறது. இவை இரண்டிற்குமிடையே இரண்டு பக்கத்திலும் இரண்டுகளிறுகள் நின்று இழுக்கின்ற புரி தேய்ந்த பழங்கயிறு போல, தலைவன் துன்புறுகிறான்.

புறம் தாழ்பு இருண்ட கூந்தல், போதின்
நிறம் பெறும் ஈரிதழ்ப் பொலிந்த உண்கண்,
உள்ளம் பிணிக் கொண்டோள்வயின், 'நெஞ்சம்'
செல்லல் தீர்கம் செல்வாம் என்னும் (284 : 1-4)

முதுகிலே தாழ்ந்து கிடக்கும் கரிய கூந்தலையும் போதின் தண்ணிய இதழ்போலும் நிறமுடைய அழகிய கண்களையும் பெற்று, நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவளிடம் செல்வோம்; துன்பம் தீர்வோம் என என் நெஞ்சம் கூறுகிறது.

செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யாமையோடு இளிவுதலைத் தரும்என
உறுதி தூக்காத் தூங்கி, 'அறிவே'
சிறிது நனி விரையல் என்னும் (5-8)

பொருள் தேடப் புறப்பட்டு, எடுத்த காரியத்தை முடிக்காது மனைவியிடம் செல்ல நினைப்பது, அறியாமையுடன் அவமானத்தையும் தரும். எனவே, உறுதிபட நன்கு ஆராய்ந்து பார். விரைந்து முடிவெடுத்து விடாதே என்று அறிவு தடுக்கின்றது.

ஆயிடை,
ஒளிறேந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல,
வீவது கொல்என் வருந்திய உடம்பே (2-11)

நெஞ்சுக்கும் அறிவுக்குமிடையே ஒரு போராட்டம் என்னுள் நடக்கிறது. ஒளி திகழும் கொம்புகளையுடைய களிறு, எதிரெதிரே நின்று இழுக்கின்ற புரி தேய்ந்த பழங்கயிறுபோல, என் உடம்பு வருந்தி ஒழிந்து போகுமோ? - இவ்வாறு தலைவன் வருந்துகின்றான். இப் பாடலைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. எனவே இடத்திற்கு ஏற்ற, பொருத்தமான

உவமையைப் புனைந்திருப்பதால், அதனையே அவருக்கிட்டு, 'தேய்புரிப் பழங் கயிற்றினார்' என்று குறித்துள்ளனர்.

பொருள் தேடப் போனால் காலம் கழிந்து விடும்; இளமை போய்விடும்; இன்புற்று வாழ்தல் இயலாது. தேடாது சோம்பிக் கிடந்தால், கைப் பொருளின்றித் தானும் இன்புற்று வாழ இயலாது; பிறரை வாழவைக்கவும் முடியாது. இக்காலத்திற்கு ஏற்பச் சொன்னால் தொழில் தொழில் என்று இல்லற வாழ்வின் இன்பத்தை இழக்கவும் கூடாது; அதைவிட்டுவிட்டு எந்தநாளும் துணையுடன் கூடிக் குலவிக் கிடப்பதும் தீதாகிவிடும். இரண்டிற்குமிடையே, வெற்றி நடை போடத்திட்டமிட்டு வாழ வேண்டும்.

அதனால் ஒரு தோழி தலைவன் பொருள்தேடப் போவதற்குச் சம்மதித்துத் தலைவியிடம் கூற; அவளும் அதைப் பாராட்டுகின்றாள்.

**செயல்படு மனத்தர் செய்பொருட்கு**
**அகல்வர் ஆடவர்; அதுஅதன் பண்பே (24)**

ஆடவர்கள் பொருள் தேடப்பிரிவர், அவர்கள் செயற்படும் மனம் படைத்தவர்கள். அம் மனத்தின் பண்பு அது. (எனவே செல்வம் தேடிவர உடம்படுவதே நல்லது) காதலும் வேண்டும்; கடமையும் வேண்டும். இன்பமும் செல்வமும் இணைபிரியாதவை. உணர்வும் அறிவும் ஒருங்கிணைவதே மானுட வாழ்க்கை!

### நட்புக்கு இலக்கணம்

கணவனின் தடுமாற்றத்தால் மனைவி ஊடல் கொண்டாள். மன வேறுபாடு முற்றிவிடாமல் தோழி தலைவியிடம் உடன்பாடு செய்ய முயல்கின்றாள்.

**நாடி நட்பின் அல்லது பெரியோர்**
**நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே (32)**

பெரியவர்கள் நன்கு ஆராய்ந்த பிறகு நட்புக் கொள்வார்களே தவிர, நட்புக் கொண்ட பிறகு குற்ற நற்றம் பார்க்கமாட்டார்கள். நட்புக்கு இலக்கணம் பிழை பொறுத்தலே, கபிலர் இப்பாடலில் திருக்குறளை நினைப்பூட்டுகிறார்.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (791) என்பது திருக்குறள்.

ஆராயாது நட்புக் கொள்வது போல் கேடு தருவது பிறிதில்லை. நட்பை ஒரு கொள்கையாக மேற்கொள்ளும் நட்பாளர்க்கு, அவ்வாறு நட்புக் கொண்டு பிறகு அதிலிருந்து விடுபடுவது என்பதும் இல்லை. காதலுக்கு இது மிகவும் பொருந்தும். இருவரும் பல காலம் ஒருவரை ஒருவர் நெருங்காமல் - சற்றே விலகிநின்று பழகி, ஆராய்ந்து பிறகு 'நட்புக்' கொள்ளுதலே தக்கது. உடலின்பம் கருதி உடனே நெருக்கமாகி விடுபவர், காமுகர். அவர்கள் வாழ்வு சிறக்காது. அவையப் புலவர்கள் காதலை, நட்பென்று குறித்திருப்பது, அவர்களின் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டுகிறது.

நாடல் சான்றோர் நம்புதல் பழியெனின்
பாடில கலுழும் கண்ணொடு சாஅய்ச்
சாதலும் இனிதே காதலம் தோழி! (327)

'நட்புக் கொண்டு விரும்பிப் பழகியவரை நம்புதல் குற்றமென்றால், அக் குற்றத்தைச் செய்த நான், உறங்காது அழுகின்ற கண்ணுடன் வருந்தி, இளைத்துச் சாதலும் இனிதே' - என இவ்வாறு தலைவி தோழியிடம் கூறுகிறாள். காதலித்துப் பழகியவன் திருமணம் செய்யக் காலம் தாழ்த்ததால் வந்த வருத்தம் இது.

ஆடவன் சான்றோனாய் நடந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தும் இப்பாடலில் வருகிறது. 'சான்றோர் கடன்நிலை குன்றலும்

இலர்' (சான்றோர் கடமை தவறார்) என்று, உலகம் கூறும். அதன்படி நடப்பதே ஆடவர்க்கு அழகாகும். இதில் தவறும் ஆடவரைச் 'சான்றோர் அல்லர்' என்று குற்றம் கூறும் பாடல்களும் சிலவுள.

> முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனிநாக ரிகர் (355)

தோழி தலைவனிடம் 'தலைவியைக் கைவிட்டு விடாதே' எனக் கண்டித்துச் சொல்லும்போது, 'நீயும் அத்தகைய நாகரிகம் உடையவன்தானே' என்று குத்திக் காட்டும் பேச்சு இது. 'உன்னையன்றி வேறு பற்றுக் கோடு இல்லாத தலைவியைத் திருமணம் செய்து, அவளுடன் கூடி இன்புறுதல் உன் கடமையாகும்' என்று தோழி வலியுறுத்துகின்றாள். நட்புக் கொண்டவர்கள், கண்ணெதிரே இருந்து தருவது நஞ்சு என்று தெரிந்தும், மிகுந்த நாகரிகமுடையவர்கள் நட்புக் காரணமாக அதனையும் உண்பர். நீ அவளை வெறுத்தாலும் நட்புடைமை காரணமாக அவள்பால் தண்ணளி செய்தலே தக்கது என எடுத்துக்கூறுகிறாள் தோழி. பாடலுக்கு இடையே, ஒரு சிறு பாடல்போல் அமையும் இது. 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்' (580) என்ற திருக்குறளை நினைப்பூட்டுகின்றது.

## பகைவரும் விரும்பும் பண்பாளன்

தலைவனின் புறத்தொழுக்கத்தைக் கையும் களவுமாகக் கண்ட தோழி, அவனை, 'நாணமில்லாதவனே' என்று கூறிவிட்டாள். பாணனிடம் இதைக் கூறும்போது, தோழி, தலைவன் 'செறுநரும் விழையும் செம்மலோன்' (50-9) என எண்ணாமல், தன் சிற்றறிவு காரணமாக அவனைத் திட்டி விட்டதாகக் கூறி அவன் தலைவனுக்காகப் பேசவந்ததை மறுக்கின்றாள்.

ஒருவன் பகைவரும் விரும்பும் பண்புடையாளனாக இருத்தல் வேண்டும். செம்மலோன் - உயர்ந்த பண்புடையவன். அகநானூற்றில்

'செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச், சிறுவர்ப் பயந்த செம்மலோர்' (66:3,4) என வருவதை, இங்கு ஒப்புநோக்கலாம். அறிவறிந்த மக்களைப் பெற்று வாழ்வதே இல்லறத்தின் சிறப்பாகும். பகைவரும் விரும்பும்படியான, குற்றமற்ற நல்லறிவுடைய சிறுவரைப் பெற்ற பெருமைக் குரியவர்கள் என்று பலரும் பாராட்டும் சிறப்பு இதில் குறிக்கப்படுகிறது.

அகத்திணைப் பாடல்கள் காதல் பற்றியவை. எனினும் இனிப்பிடையே மருந்தையும் ஒரு சிறிது வைத்து ஊட்டிவிடுவதுபோல, இத்தகைய நற்கருத்துக்களை இடையிடையே புகுத்திப் பாடியுள்ளனர்.

### பெரியோர் கடமை தவறுதல் வெட்கக் கேடாகும்

களவொழுக்கத்தில் முதலில் அன்பு பாராட்டிய காதலன் பிறகு மெல்லமெல்லப் பின்வாங்குவது கண்டாள் தோழி. அவனைத்திருத்தும் பொருட்டு, 'அவன் நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றிக் கூறுவதே வெட்கக் கேடாக இருக்கிறது', என்று தலைவியிடம் கூறுவதுபோல், அவன் செவியி விழும்படி கூறுகிறாள், அவள்.

பேணுப பேணார் பெரியோர் என்பது
நாணுத்தக் கன்றுஅது காணுங் காலை (72)

பெரியவர்கள் தாம் பேணிக் காக்க வேண்டிய கடமைகளைப் பேணாது கைவிடுவர் என்பது, நன்கு ஆராயுமிடத்து, அதைச் சொல்வதற்கே வெட்கக் கேடாக இருக்கிறது.

### கையேந்தி நிற்பவரைக் காக்கின்ற இல்லறம்

போகிற போக்கில் ஓர் இல்லறக் கடமையை, நயமாக எடுத்துரைக்கிறது ஓர் அகத்திணைப் பாடல். இல்லறம் என்பது பிறரைப் பேணிக் காப்பதற்கே என்ற மனநிலையைத் தமிழர் போற்றி வளர்த்தனர். திருவள்ளுவர், 'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை' (41) என்றார். நற்றிணைப் பாடலில்,

'நேற்றுவரை நம்மைப் பாராட்டி இன்புற்று வாழ்ந்த தலைவர், இன்று கொடிய பாலை வழியிலே பொருள் தேடப் பிரிவதாகக் கூறுகின்றார். அவர் யார், எத்தகையவர், என்று விளக்கப்படுகிறது.

தம்வயின்
இரந்தோர் மாற்றல் ஆற்றா
இல்லின் வாழ்க்கை வல்லா தோரே (84: 10-12)

தம்மிடம் வந்து இரந்து நிற்பவரின் பசியை மாற்ற இயலாத, இல்லற வாழ்வை நெறிப்படி நடத்த முடியாத தலைவர்தான் இவ்வாறு பிரிய நினைக்கின்றார். இவ்வாறு தலைவியைத் தோழியிடம் பேசவைக்கும் புலவர், தலைவன் பிரிந்து பொருள்தேடி வந்தால் தானே, வறியவர் பசியை போக்கும் ஆற்றல் பெற முடியும்; இல்லற வாழ்வை நெறிப்படி நடத்த முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்லவைத்து விடுகிறார். தலைவி வருந்தினாலும், அவன் பொருள் தேடப் பிரிவதை நியாயப்படுத்தி விடுகிறார்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல், அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் (225) என்பது

ஈகைத் திருக்குறள். தன் பசியை அடக்கும் ஆற்றல் துறவிகளிடம் உண்டு. அது சிறந்ததே. ஆயினும் பிறர் பசியை போக்குபவரின் ஆற்றலே அதைவிடச் சிறந்தது. மாற்றுபவர் ஆற்றலுக்குப் பிற்பட்டதே ஆற்றுபவர் ஆற்றல். நற்றிணைப் பாடலில் 'மாற்றல் ஆற்றா' என வருவதை, இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வறியவரின் பசியை மாற்றுதலாவது, அப் பகுதியைப் போக்கி வாழ்வளித்தல். தமக்கென வாழாது, பிறர்க்கென வாழ்வதே இல்லறம் எனச் சிந்திக்கவைக்கும் பழம்புலவர் திறம் பாராட்டத்தக்கதே.

### அரிது அரிது பிரிவது அரிது

திருமணம் செய்ய முயலாது காலம் கடத்தும் காதலனிடம் தோழி, 'தலைவ!' தலைவியுடன் கொண்ட தொடர்பைக் கைவிட நினைப்பதும்

ஏனோ? நான் இதைப் பார்த்து மிகவும் வருந்துகின்றேன் என்று இடித்துக் கூறி, விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு தூண்டுகிறாள், அப்போது அவள் 'பழகிய பகையும் பிரிவு இன்னாதே' என, பழமொழிபோல் ஒருகருத்தைக் கூறுகிறாள். பலநாள் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டிருந்தவர்களில், ஒருவர் வெளியூர் போக நேர்ந்து பிரிந்துவிட்டால், அப் பிரிவு கூட அவர்களுக்கு ஒருவித வருத்தத்தைத் தருமாம். இதிலுள்ள உளவியல் அனுபவ அடிப்படை உடையது. பேயோடாயினும் பிரிவது அரிது என்பர்.

## திருந்துதலும் திருத்துதலும்

திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது - என்பது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாட்டு, ஒரு மாணவனைப் படிபடி என்று நச்சரித்தால் படிப்பு வந்துவிடாது. அவனுக்கே அவ் ஆர்வம் தலை தூக்க வேண்டும். பிறரைத் திருத்துவது என்பது, ஒரு தூண்டுகோலாகலாம். ஆனால் அவரவர் தாமே உணர்ந்து திருந்துவதுதான் நிலையான நன்மை தரும்.

இதுவும் காதல் பற்றிய அகத்திணைப் பாட்டுத்தான். காதலன் திருமணம் செய்யாமல் காலம் நீட்டித்தான். அவனுடன் கொண்ட கேண்மை (ஆழ்ந்த நட்பு), இப்போது முற்றிலும் அற்றதுபோல் ஆனது. இந்நிலையில் குறிஞ்சி நிலப் பெண்டிர், இதுபற்றி இழிவாகப் பேசுவதைத் தவிர்த்திலர். தன் வருத்தத்தைத் தோழியிடம் கொட்டுகிறாள் தலைவி. தலைவனும் தானாக உணர்ந்து திருந்தினால் நல்லது. ஊர்மக்களும் தாமாக இரக்கங்கொண்டு பழிதூற்றுவதைக் கைவிட வேண்டும்.

தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
'தாம் அறிந்து உணர்க' என்ப மாதோ! (116)

தீமை செய்பவரிடத்திலும் பெரியவர்கள் பொறுமையைக் கைக்கொள்வர். அவர்கள் தாமாக அறிந்து திருந்தட்டும் எனக் கூறுவர் (மாது,

ஓ– அசைநிலைகள்). இம் முதலிரண்டு அடிகளே, ஒரு சிறந்த கருத்தை முழுமைபெற வெளிப்படுத்துகின்றன.

### அறநெறி மருத்துவம்

தலைவனுடன் சிறிய பிரிவு ஏற்பட்டதற்கே, தலைவி வருந்தி மெலிந்து போனாளாம். இதனால் தனக்கு வேறு வளையல்கள் வேண்டும் எனத் தலைவி அழுதாளாம். இதைப் பார்த்த அவள் தந்தை, உடல் மெலிவுற்றதற்கு ஏற்ப, கையில் செறிவாக அமையும்படி புதிய வளையல்களைச் செய்து கொடுத்தானாம். இது காதலில் வந்த மெலிவு என்பது தெரியாவிடினும், உடம்பு இளைத்துவிட்டதே என்று, அதைத் தெரிந்தவன் போலத் தந்தை நடந்து கொண்டதைக் காதலன் கேட்கும் அண்மையில் நிற்கத் தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

> **அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது**
> **மருந்துஆய்ந்து கொடுத்த அறவோன் போல (136)**

கடுமையான நோய்வாய்ப்பட்டவர்க்கு, அவர்கள் விரும்பியதை உண்ணத்தராமல், நோய்க்கேற்ற மருந்தை ஆராய்ந்து கொடுத்த அறவோனாகிய மருத்துவன்போலத் தந்தை நடந்து கொண்டான். காதல் வாழ்வுக்கு மட்டுமன்றி, பிற சூழல்களுக்கும் பொருந்தும் அரிய கருத்து இது. மக்களை அறநெறிப் படுத்துவதும் மருத்துவம் போன்றதுதான். மருத்துவன் காட்டும் நெறியை உணர்ந்து நடப்பது நோயாளியின் கடமையாகும்.

### குயில்கள் கூவும் (கூறும்) அறிவுரை

மலைமீது தேனிறால்கள் உள்ளன. தெளிந்த நீர் சூழ்ந்த துறுகல்லின் பக்கத்தில் மணல் நிறைந்த கரையுளது. அதில் தளிர்த்துத் தழைத்த கிளைகளையுடையதும் நறிய மாவடுக்களையுடையதுமாகிய மாமரங்கள் உள்ளன. அந்த மாமரச் சோலைகளில் தங்கியுள்ள 'பூங்கண்

கருங்குயில்கள்', ஆணும் பெண்ணும் உடம்மொடு உடம்பு பொருந்த இருந்து, மாறி மாறிக் கூவுகின்றன. என்ன சொல்லிக் கூவுகின்றன?

தேம்படு சிலம்பில் தெள்ளறல் தழீஇய
துறுகல் அயல தூமணல் அடைகரை
அலங்குசினை பொதுளிய நறுவடி மாஅத்துப்
பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில் (243:1-4)

சூதாடு கருவியைக் குலுக்கிப் போடும்போது, அது மாறிமாறி விழுவதுபோல மானுட வாழ்க்கையும் நிலையற்றதாகும். அதற்குப் பொருள் வேண்டுமென்பதைக் காரணம் காட்டி 'அறிவுடையீர் மனைவியைப் பிரியாதீர்' என்று கூவுகின்றன. மனைவிமார் செயலற்று வருந்துமாறு பிரிந்து போவாரை இடித்துரைப்பதுபோல மாங்குயில்கள் கூவும் இளவேனிற்காலத்தில், பிரிந்து பொருள்தேடப் போவதே ஆடவர்க்கு இயல்பு என்று கூறுகின்றனர். அங்ஙனமாயின் அரியது எது? அறமா, பொருளா, பிரிவதே நியாயம் என்றால். அறத்தைவிடப் பொருளே அரியதுபோலும்!

கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு
அகறல் ஓம்புமின் அறிவுடையீரெனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல
மெய்யுற இருந்து மேவர நுவல
இன்னா தாகிய காலைப் பொருள்வயின்
பிரிதல் ஆடவர்க்கு இயல்பெனின்
அரிதுமன்றம்ம அறத்தினும் பொருளே (243: 5-11)

கவறு - சூதாடுங் காய்கள். அவற்றை உருட்டிவிடும்போது மாறிமாறி விழும். அது போன்றது நிலையற்ற பொருள் வாழ்க்கை. கையறத் துறப்போர் – செயலற்று வருந்துமாறு பிரிவோர். மெய்யுற இருந்து – குயில்கள் உடம்புடன் உடம்பு ஒட்டியிருந்து. இளவேனிற் பருவத்தில் மாங்குயில்கள் கூவுவது, பொருள்தேட மனைவியரைப் பிரிபவர்களை,

'நிலையற்ற செல்வத்திற்காகப் பிரியாதீர்' என்று கூறுவதுபோல் உளது. பொருட் செல்வம் குறுக்கிட்டால் இவ்வுலகம் அறத்தைக் கைவிட்டுவிடும் போலும் என்று முடித்திருப்பது நினைத்தற்குரியதாகும்.

**குன்றுறை தவசியர்**

கொன்றைமரத்தில் உட்துளையுடைய நீண்ட காய்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கும். முறுக்கிய நீண்ட சடைமுடிகள் தொங்க, அசையாத உடம்புடன் குன்றுகளில் தவம் செய்திருக்கும் தவசியர் போல, இக்கொன்றை மரங்கள் கோடைக்காலத்தில், வறண்ட பாலை வழியில் நிற்கின்றன.

**புழற்காய்க் கொன்றை**
**நீடிய சடையோடு ஆடா மேனிக்**
**குன்றுறை தவசியர் போலப் பலவுடன்**
**என்றூழ் நீளிடைப் பொற்பத் தோன்றும்** (141)

சடைமுடியோடு கூடிய தவசியர் என்பதால், வைதிகத் தவசியர் எனலாம். சமணத் துறவியராயின் தலைமுடி இன்றி, வழுக்கைத் தலையினராக இருப்பர். (புழற்காய் - உள்ளீடில்லாத காய். ஆடா மேனி - தாமரை ஆசனமிட்டு அசையாதிருத்தல். என்றூழ் நீளிடை – வெப்பம் மிக்க நீண்ட பாலைவழி)

மந்தி கடுவனுடன் கொடிச்சியர் காக்கும் தினைப்புனத்தில், முதலில் தோன்றிய, பெரிய கதிர்களைப் பறித்துக்கொண்டு மலைமீது உயர ஏறுகிறது; அக் கதிர்களை தன் கையால் தேய்த்து, 'ஞெமிடிக்' கொண்டு, கன்னம் நிறையுமாறு வாயிலிட்டு முக்கிக் கொண்டு, மழையில் நனைந்தபடி இருக்கிறது. இது துறவு மேற்கொண்ட 'நோன்பியர்' கையில் பிச்சைஏற்று, அதை உண்டு கொண்டிருப்பதுபோல் உளது. 'நோன்பியர் கை ஊண் இருக்கையில் தோன்றும் நாடன்' (22) என்று இது குறிக்கப்படுகிறது.

**கடனறி மன்னர்**

தன்னைத் தலைவி ஏற்குமாறு மடலேறத் துணிந்தவன், தன் நெஞ்சிடம் கூறுவதுபோலத் தோழி கேட்பத் தன் வருத்தத்தைக் கூறுகிறான். அப்போது அவன், நெஞ்சமே! சிறிது ஆறுதலாய் இருந்து பிறகு மடலாலான குதிரையில் செல்வாயாக என்று வேண்டுகின்றான்.

**கடன்அறி மன்னர் குடைநிழற் போலப்**
**பெருந்தண் ணென்ற மரநிழல் சிறிது இழிந்து**
**இருந்தனை சென்மோ (146)**

அறநெறி மன்னரது நல்லாட்சி பற்றி உவமை இங்கு வருகிறது. குடிமக்களுக்குத் தான் ஆற்றவேண்டிய கடமையை அறிந்த மன்னர்களது, வெண்கொற்றக் குடை அம் மக்களுக்கு அருள் நிழல் தந்து காக்கும். அது பாலை வழியில், மிகவும் குளிர்ச்சியுள்ள மரங்கள் தரும் நிழலுக்கு உவமையாக இடம் பெறுகிறது. மரம் தரும் நிழலுக்கு மன்னர்களின் குடை நிழல் தருவதை ஒப்பிடுவது, சிறந்த கற்பனையாகும்.

**பிறர்க்கென முயலும் அறம்நிலை பெற்றோர்**

பொருள் தேடப் பிரிந்த தன் கணவரைப் பற்றி, ஒரு தலைவி பெருமையுடன் பேசுகிறாள்.

**பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு**
**காமர் பொருட்பிணிப் போகிய - காதலர் (186)**

தனக்கென வாழ நினையாது, பிறர்க்கு உதவுதற்கென்றே, காதலன் பொருள் தேடப் பிரிந்தானாம். ஒரு தலைவன் தன்னை, 'அறம் நிலைபெற்றோர் அனையேன்' (166) என்று கூறிக்கொள்கின்றான். அற வாழ்க்கையில், சிறிதும் வழுவாது, உறுதியாக நிலைபெற வாழ்பவர் என்பது கருத்து. அத்தகையோர் உலகிற் சிலரேயாவர். அவர்களாலேயே உலகம் நிலைபெறுகிறது.

## நன்மையின் விளைவு தீதாக முடிதலுண்டு

நாம் சிலவற்றை நல்லதென்று கருதி ஏற்கின்றோம்; அது பின்னர் தீதாக முடிகிறது. ஒருவருக்கு நன்மை செய்யப் போய், அது நமக்கே தீதாக முடிவதுண்டு. '**நன்றாற்றலுள்ளும் தவறுண்டு**' (469) என்பது வள்ளுவம். தலைவி தலைவனுடன் காதல்கொண்டு கூடிய போதே, அதனால் பிறகு தனக்குத் துன்பம் நேரலாம் என அறிந்திருந்தாள். அதனால் பிறகு தலைவனிடம் பேசிய தோழி, இவ்வுண்மையை முன்பே நன்கு அறிந்திருந்ததால், எங்கள் தலைவி இப்போது நீ வரைவு நீட்டிப்பது கருதி, வருந்தி மெலிந்திலள் என்று கூறுகிறாள். அதனிடையே வரும் தொடர் இது: '**நன்றி விளைவும் தீதொடுவரும்**' (188). நல்லதாக முதலில் தோன்றுவதின் விளைவும் பின்னர் தீதாகித் துன்பம் தரக்கூடும் என்பது கருத்து.

## அருட்செல்வமே செல்வத்துட்செல்வம்

காதலன் பெருஞ்செல்வன். அதனால் தன்னைப் பற்றி மிகுந்த பெருமை பேசிக்கொண்டு குதிரையில் வருவான்; நேரிலும் வருவான். இச் செல்வச் செருக்கால், அவனிடம் பரத்தையரை நாடும் பழக்கமும் இருந்தது. அவன் தன் மனைவியிடம் திரும்பி வந்தபொழுது, தோழி அவன் மனத்தில் படுமாறு இடித்துரைக்கின்றாள். நீ பெரிதாக நினைக்கிற செல்வமெல்லாம் உண்மையான நிலைத்த செல்வமல்ல; தன்னை நம்பியவரையும் தன்னைச் சார்ந்தவரையும் போற்றிக் காத்து, அவர்களின் துன்பம் கண்டு வருந்தி, அதனை நீக்க உதவும் அருளுடைமையே உண்மையான செல்வமாகும். இவ்வாறு கடிந்து கூறும் தோழியின் திறமையும் சாதுரியமும் வியப்பிற்குரியன. இதன் மூலம் அவள் தலைவியையும் சாந்தப்படுத்தி விடுகிறாள். இவ்வாறு காதலரை இணைத்து வைக்கும் பாலமாக, தோழி நடந்துகொள்ளுமிடங்கள் பலவாகும்.

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம்என் பதுவே (210)

(நெடிய மொழிதல் – மிகைப்படப் பெருமை பேசுதல், கடிய ஊர்தல் – விரைந்து செல்லுந் தேர் அல்லது குதிரையில் ஏறிச் செல்லுதல். புன்கண்– துயரம். மென்கண் – அருள்). ஒருவரிடம் செல்வம் உண்மைக்கும் இன்மைக்கும் முன்செய்த வினைப்பயனே காரணம் என்ற கருத்து, இப்பாடலில் பதிவாகியுளது.

**புகழ்தரும் செல்வமே பொலிவுடையது**

செல்வத்திற்கேகூட ஓர் அழகுண்டு, பொலிவுண்டு. கருமிகைப்பட்ட செல்வம் கறுத்துச் சிறுத்திருக்கும் போலும்.

இசைபட வாழ்பவர் செல்வம் போலக்
காண்தொறும் பொலியும் கதழ்வாய் வேழம் (217)

பிறர்க்கும் ஈந்து புகழ் பெற்று வாழ்பவரிடம் சேர்ந்த செல்வம் மேன்மேலும் பொலிவுடையதாகத் திகழுமாம். சினம் பொங்கும் வாயையுடைய யானையைக் காணுந்தொறும் பெருமிதமாய்த் தோன்றுவதற்கு, புகழ்தரும் செல்வம் உவமையாகிறது. இடைக்காலப் பெரும்புலவர்களும் கதை கூறிப் போகும் போது, அறக் கருத்துக்களை இடைமிடைந்து பாடியுள்ளனர். அதற்கு இத்தகைய சங்கப் பாடல்களின் செல்வாக்கே காரணமாகும். காதற்பாடல்களில் அமைந்துள்ள அறக்கருத்துக்கள், அப்பாடல்களின் சிறப்பை உயர்த்திக் காட்டுகின்றன.

**அளவுக்கு மிஞ்சினால்**
**அமிழ்தமும் நஞ்சே**

தலைவன் பொருள்தேடப பிரிந்தவன், ஓரளவு செல்வம் சேர்ந்ததும் திரும்பியிருக்க வேண்டும். அவ்வாறன்றித் தான் தேடும் செல்வத்தின் அளவறியாது மேன்மேலும் தேடுவதற்காக அங்கேயே தங்கிவிட்டான்.

இங்கே தலைவி மிகமெலிந்து சாவின் எல்லைக்கு வந்து விட்டாள். செல்வத்தைத் தேடிக் கொண்டு, பிறகு வந்து பயன் என்ன? இந்நிலையில் தலைவி தோழியிடம் தன் துன்பத்தை எடுத்துக் கூறுகிறாள்.

**மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்;**
**உரம்சாச் செய்யார் உயர்தவம்; வளம்கெடப்**
**பொன்னும் கொள்ளார் மன்னர் (226)**

மருந்துமரம் பட்டுப் போகும்படி அதன் பட்டை முதலிய மருந்துகளை முழுவதுமாக, மக்கள் பறித்துக்கொள்ள மாட்டார்கள்.

உண்ணா நோன்பு முதலியவற்றை மேற்கொண்டு தவம் செய்பவர்கள் தம் வலிமை முழுவதும் அற்றுப்போகுமளவு அதனை மேற்கொள்ள மாட்டார்கள்.

மன்னர்கள் குடிகளின் செல்வம் முழுவதும் கெடுமாறு, வரி முதலியன கொள்ள மாட்டார்கள்.

அவற்றைப் போலாது நம் தலைவர், ஓரளவில் நில்லாது, அனைத்தும் கெடுமாறு செல்வம் தேடுகிறார். அவர் இருப்பதால், நாமும் உயிரோடு இருக்கிறோம். நுகர வேண்டியவர்கள் முடிந்துபோன பிற்பாடு, செல்வம் தேடி என்ன பயன் என்பதே இங்கு தலைவியின் வருத்தமாகும்.

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும் (476) என்பது வள்ளுவம்.

இளமை திரும்புவதில்லை

'என்றும் உன்னுடன் இன்புற்றிருப்பேன்' என்று சொன்னவர், தம் சொல்லைப் பொய்யாக்கிவிட்டார்; தாம் பாலைவழியில் பிரிந்து போய், குறித்த காலத்தில் திரும்பாத தலைவர், தன்னிடம் சொன்ன பொன்மொழியைத் தலைவி நினைவு கூர்கின்றாள்.

முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்;
வாழ்நாள் வகைஅளவு அறிஞரும் இல்லை (314)

முதுமையடைந்தவர், இளமையைத் தவறுதலாகவும் திரும்பப் பெறமாட்டார். ஒருவரது வாழ்நாளின் எல்லை அளவு இதுவென அறிந்து கொள்ளக் கூடியவர்களும் எவருமிலர். எனவே உன்னைப் பிரியாதிருப்பேன் என்று தலைவர் கூறிய வாக்கைத் தலைவி எண்ணிப் பார்க்கிறாள். இத்தகைய பாடலடிகள், பொன்மொழிகள் போலப் பொதுவாகவும் நோக்கத்தக்கனவாக அமைந்துள்ளன.

பொதுவான காதற்பாடல்களிலிருந்து, தமிழ்ச் செவ்வியல் சார்ந்த அகத்திணைப் பாடல்கள் வேறுபடுகின்றன. அவற்றின் தனித்தன்மையை ஆராய்ந்து, உலகிற்குரைப்பது நம் கடமையாகும்.

## குறுந்தொகையில் பாடலால் பெயர்பெற்ற பாவலர்கள்

சங்க இலக்கியத்தைத் தொகுத்தவர்கள், பாடல் கிடைத்து, பாடியவர் பெயர் கிடைக்காதபோது, அப்பாடலில் வரும் தொடர் அல்லது உவமையால் பெயர் குறித்துள்ளனர். பதிற்றுப் பத்தில், ஒரு பாடலில் வரும் சிறந்த தொடரால் அப் பாடலுக்குப் பெயரிட்டுள்ளது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

சிலருக்கு அவர்கள் மிகுதியாகப் பாடிய திணை, துறை (கூற்று) அடிப்படையிலும் சிறப்பு அடைமொழி கொடுத்துள்ளனர்.

பாலைத்திணையையே கூடுதலாகப் பாடியதால், பாலை பாடிய பெருங்கடுகோ என அழைத்தனர். நெய்தல்திணையை மிகுதியாகப் பாடியதாற்போலும் ஒரு புலவர் நெய்தற்கார்க்கியர் எனப்பட்டார். (குறு. 55, 212)

மடல் பாடிய மாதங்கீரனார், மடலேறுதல் பற்றிச் சிறப்பாகப் பாடியவர் (குறு. 182)., காக்கை பாடினியார் - விருந்துவரக் கரைந்த காக்கையைப் பாடியவர் (210), அவரது இயற்பெயர் நச்செள்ளையார்.

### உவமையால் பெயர் பெற்ற புலவர்கள்

**1. அணிலாடு முன்றிலார் (41)**

தலைவி பிரிவால் பொலிவிழந்தாள். எப்படி? ஓர் ஊரில் மக்கள் வெளியேறிவிட்டதால், பாழடைந்த வீட்டின்முன் அணில் விளையாடுவதுபோல் ஆனாள். 'மக்கள் போகிய அணிலாடு முன்றில் போல' என்ற உவமையால் இவர் பெயர் பெற்றார்

**2. ஓரேருழவனார் (131)**

வினைமுடித்துத் திரும்பும் தலைவன் உள்ளம் தன் வீட்டை விரைவில் அடையத் துடிதுடிக்கின்றது. மழை நன்குபெய்து, விதைத்தற்கேற்ற செவ்வியையுடைய நிலத்தை விரைவில் உழ, ஒரே ஒரு

ஏர்மட்டும் உடைய உழவனது உள்ளம்போல் அது பட படக்கின்றது. 'ஓரேர் உழவன்போல' என்ற உவமையால் இவர் பெயரிடப்பட்டுள்ளார்.

### 3. கங்குல் வெள்ளத்தார் (387)

பிரிவில் வருந்தும் தலைவி இரவு வந்துவிட்டது; இனி வருவது நள்ளிரவாகிய வெள்ளம்; அது கடலினும் பெரிது ; அதனை எவ்வாறு கடக்கப் போகிறோம் என்று தோழியிடம் கூறுகிறாள். 'கங்குல் வெள்ளம் கடலைவிடப் பெரிது' என்றதும் ஒருவகையில் உவமை ஆவதால், இப் பெயர் பெற்றார்.

### 4. கயமனார் (9)

பசிய இலைகளின் மேலே, திரண்ட காம்பின்மேல் உள்ள நெய்தற்பூ, கடலலை வந்து மோதுந்தோறும் உள்ளே மூழ்கி, மேலே எழும் இது குளத்தில் மூழ்கி எழும் மகளிரின் கண்ணைப் போல் தோன்றும். 'கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்' என்ற உவமையால் இவர் 'கயமனார்' எனப்பட்டார். (கயம் – குளம்).

### 5. கல்பொரு சிறுநுரையார் (290)

பிரிவால் வாடும் தலைவி கூற்று. பெருவெள்ள நீர் கற்பாறையில் மோதுந்தோறும் அதன் சிறு நுரைகள் சிறிது சிறிதாகக் கரைந்து முழுவதும் மறைவதுபோல தலைவனைக் காணாவிட்டால் நாங்களும் வருந்தி மெலிந்து மெல்ல மெல்ல உயிரற்றவராகி விடுவோம் என்கின்றாள் தலைவி. 'கல்பொரு சிறுநுரை போல' என்ற உவமையால் வந்த பெயர் இது.

### 6. கவைமகன் (324)

தலைவன் வரும் வழிக்கு ஒருபுறம் அச்சம்; அவனை நினைத்து வருந்தும் தலைவிக்காக மறுபுறம் அச்சம். இது தோழிக்கு இரட்டையாய் ஒட்டிப்பிறந்த இருபிள்ளைகளும் நஞ்சுண்டால், அவ் இருவர்க்குமாக வருந்த நேருவதுபோல் ஆனது. இரட்டையாய் ஒட்டிப்பிறந்த 'கவைமகன்' என்றதால், பாடியவர் அப் பெயர் பெற்றார்.

7. காலெறி கடிகையார் (267)

காதலியை முத்தம் கொடுக்கும் இன்பம் எத்தகையது? கரும்பின் அடியில் வெட்டிய துண்டத்தை மென்று தின்னும்போது இனிப்பது போல இருக்கும். 'கரும்பின் கால் எறி கடிகைக் கண் அயின்றன்ன' இனிமை. (கால் – அடிப்பாகம். கடிகை – துண்டம். அயின்றன்ன – மென்றுதின்றாற் போன்ற.) கரும்புத்துண்டே பெயராயிற்று.

8. குப்பைக் கோழியார் (305)

தலைவியின் ஆற்றாமை இது. 'குப்பைக் கோழித்தனிப்போர் போல' தானே விளிதல். குப்பைக் கோழிகள் தாமாகப் போரிடும் போது அவற்றை யாரும் தடுத்துக் காப்பாற்ற மாட்டார்கள். தலைவியின்நிலைக்கு உவமை கூறிய இதனால், இப்பெயர் இடம்பெற்றுளது.

9. கூவன் மைந்தன் (224)

கூவல், குரால்ஆன் படுதுயர் இராவில்கண்ட, உயர்திணை ஊமன்போலத் தலைவி துயர் பொறுக்கமாட்டாதவள் ஆனாள். கூவல் – கிணறு. குரால்ஆன் – சிவலைப்பசு. அது கிணற்றில் விழுந்ததைப் பார்த்த ஊமைமனிதன் செய்வதறியாது வருந்துவது போல் ஆனது. உயர்திணைஊமன் – ஊமை மனிதன். கிணற்றால் வந்த பெயர் இது.

10. செம்புலப் பெயனீரார் (40)

ஒருவரை ஒருவர் முன்பின் அறியாத இருவர், எதிர்பாராமல் கண்டு காதல் கொண்டனர். அது வானத்து மழைநீர், செம்மண் நிலத்தில் பெய்ததும் கலந்து ஒன்றானது போல இரண்டு அன்புடை நெஞ்சமும் இரண்டறக் கலந்தன. செம்புலம் – செம்மண் நிலம். பெயல் – மழை. செம்புலப் பெயல்நீர் பிரித்தறிய முடியாதவாறு கலப்பதுபோல என்ற உவமையால் இப்பாடற் புலவர் பெயரிடப்பட்டுள்ளார்.

11. மீனெறி தூண்டிலார் (54)

யானை மூங்கிலை வளைத்தபோது, காவலர் எறிந்த கவண்கல் ஒலி கேட்டு, அதைக் கைவிட்டது. உடனே வளைந்த மூங்கில் துள்ளி எழுந்தது. அது மீன்பிடிக்கத் தூண்டிலைப் போட்டு அதை மேலே விசைப்போடு தூக்குவதுபோல இருந்தது. மீனெறி தூண்டிலை உவமை சொன்னவர் அப்பெயரைப் பெற்றார்.

12. விட்ட குதிரையார் (74)

இதுவும் பச்சை மூங்கிலை வளைத்துவிட, அது வானை நோக்கி விசைத்து எழுவது, அவிழ்த்துவிட்ட குதிரை, எழுந்து குதிப்பதைப் போல இருந்தது என்ற உவமையால் வந்த பெயராகும்.

13. வில்லக விரலினார் (370)

பரத்தை கூற்று இது. தலைவனைத் தழுவும்போது, ஐந்து விரல்களாய் இருந்தவை, வில்லைப் பற்றும்போது, ஒருங்கிணைந்து இறுகப் பற்றுவதுபோல், நாங்களும் தலைவனை இறுகத் தழுவிக் கொள்வோம். 'வில்லக விரல்' என்ற சிறந்த தொடர் உவமையாக வந்ததால் இப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

## அரிய தொடர்களால் பெயர் பெற்றவர்கள் ஐவர்

14. நெடுவெண்ணிலவினார் (47)

நெடுவெண்ணிலவு - இரவு முழுவதும் ஒளிவீசும் முழுநிலவு. (பௌர்ணமி என்பர்). இத்தொடரால் வந்த பெயர் இது. இரவில் காதலர் சந்திப்பதற்கு இது தடையாயிருக்கிறது. (நல்லை அல்லை நெடுவெண்ணிலவே)

15. ஓரிற் பிச்சையார் (277)

அறிவர் ஒரே ஒரு வீட்டில் பிச்சையேற்று, வயிறார உண்பார்களாம். குற்றமற்ற, நாயில்லாத, அகன்ற கடைவாயிலையுடைய ஒரு வீட்டில், செந்நெல்லாலான அரிசிச் சோற்றை, வெண்ணெய்த் திரளுடன் கலந்து உண்டு, வெந்நீர் பருகும் அறிவர் என்ற தொடரால், இப்புலவர் 'ஓரிற் பிச்சையார்' ஆனார். (ஓரிற் பிச்சை ஆரமாந்தி

16. கள்ளிலாத்திரையன் (293)

கள்குடிக்கும் நண்பர்கள் பனைமரம் தேடி யாத்திரைபோய் குடித்துவிட்டு, நுங்குகளுடன் வீடு திரும்புவராம். கள்ளிலாத்திரை என நகைச்சுவைபடக் கூறிய இவருக்கு, அதுவே பெயரானது.

17. பதடி வைகலார் (323)

தலைவியுடன் கூடிவாழும் நாள்களே வாழும் நாள்களாகும்; பிற எல்லாம் பயனற்றன; அவை உள்ளீடில்லாத பதர் போன்றவையாகும். பதடி – பதர். பதடி வைகல் – பயனற்ற நாட்கள் என்ற தொடரால் இவர் பெயர் பெற்றார்.

18. குறி இறையார் (394)

மலைப்பக்கத்துக் குறமகள் ஈன்ற மக்களை, 'குறி இறைப் புதல்வர்' – குறிய முன்கைகளையுடைய புதல்வர்கள் என்றதனால், இவர் குறியிறையார் எனப்பட்டார்.

'சங்க காலச் சிறப்புப் பெயர்கள்' என்ற தம் ஆய்வு நூலில், மொ. அ. துரையரங்கனார், சங்க நூல்கள் அனைத்திலும் காணப்படும் சிறப்புப் பெயர்கள் முழுவதையும் திறம்பட ஆராய்ந்து, விளக்கியுள்ளார்.

## நற்றிணையில் பாடலால் பெயர் பெற்ற பாவலர்கள்

ஒரு திணை அல்லது துறை (கூற்று) பற்றி மிகுதியாகவோ, சிறப்பாகவோ பாடியதால் சிலர் அடைமொழி பெற்றுள்ளனர். பாலை பாடிய பெருங்கடுங்கோ (9), மருதம் பாடிய இளங் கடுங்கோ (50), மடல் பாடிய மாதங்கீரனார் (377), நெய்தல் தத்தனார் (49), வெறிபாடிய காமக் கணியார் (268) ஆகிய ஐவர் ஆவர். பாலை பாடிய வரும் மடல் பாடியவரும் குறுந்தொகையிலும் காணப்படுகின்றனர். குறுந்தொகையில் நெய்தல் கார்க்கியர் போல நற்றிணையில் நெய்தல் தத்தனார் உள்ளார்.

## உவமையால் பெயர் பெற்ற புலவர்கள்

1. கயமனார் (12)

குறுந்தொகையிலும் இவர் இடம்பெற்றுள்ளார்.

2. தனிமகனார் (153)

தலைவி பிரிவில் வருந்திக் கூறும்போது, 'பாழ் காத்திருந்த தனிமகன்போல' ஆனேன் என்ற உவமை வருகிறது.

3. தும்பிசேர் கீரனார் (277)

வரையாது பொருள் வயிற் பிரிந்தான் தலைவன். காலம் நீட்டித்த போது, தலைவி தும்பியை அழைத்துத்தூது செல்லாததற்காகக் கடிந்து கொள்கிறாள்.

4. தேய்புரிப் பழங்கயிற்றினார் (284)

தலைவன் பொருள் தேடச் சென்றவன், காரியம் முடியாதபோது, காதல் நெஞ்சம் (உணர்வு) ஒரு பக்கம் இழுக்க, அறிவு வினை முடிக்குமாறு மறுபக்கம் இழுக்க, புரிதேய்ந்த கயிறுபோல ஆனேன் என உவமை கூறுவதாக வருகிறது.

### 5. எயினந்தையார் (43)

பிரிவுணர்த்திய தலைவனைத் தோழி செலவழுங்குவிக்கின்றாள், தலைவி, உடைமதில் ஓரெயில் மன்னன் போலத்தலைவிக்கு அழிவு வந்து விட்டது என்று கூறுவதாக 'எயில்' இடம் பெறுகிறது.

## தொடர்ச்சிறப்பால் பெயர் பெற்றவர்

### 6. வண்ணப்புறக் கந்தரத்தனார் (71)

'வண்ணப் புறவின் செங்காற் சேவல்' என்ற தொடரால் பெயரிடப்பட்டுள்ளது.

### 7. விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் (242)

பிணைமான் தன் 'விழிக்கட் பேதையாகிய' குழவிமானுடன், தன் கூட்டத்தைவிட்டு ஓடவே, இரலைமான் அதைத் தேடுகிறது. மான் கன்றை, 'விழிக்கண் பேதை' என்றதால், இப்பெயரிடப் பட்டுள்ளது.

# 4

# பழந்தமிழர் வாழ்க்கைப் படங்களின் தொகுப்பு

எங்கு நோக்கினும் இயற்கை வளம். பூமித் தாயின் கன்னிப் பருவம். காடடர்ந்த சோலைகள், மலைகள், குன்றுகள். அருவிகளும் அவை ஆறாக மாறி ஓடிவரும் வெள்ளமும் அவற்றைத் தழுவிநிற்கும் பலவகை மரத்தோப்புகளும் எனக் கண்கொள்ளாக் காட்சி நம்முன் விரிகிறது.

இன்று கற்பனை செய்து பார்க்கவும் கூடாத அளவு, செயற்கைத் தன்மை பரவிவிட்டது. மீண்டும் இயற்கை அழைக்கிறது, மானுடத்தை. வா! மானுடனே வா! என்னுள் கலந்து விடு! உனக்கு மன அமைதி தருகிறேன்; உனக்கு இனிமை தருகிறேன்; உன் வாழ்வில் ஒளியூட்டுகிறேன் என்று சங்கப் பாடல்கள் வழி, அது அழைப்பு விடுக்கிறது.

நம் பழந்தமிழ் இலக்கியம் இவ் இயற்கை வளத்தைக் கண்ணுள் சுழலவிடுகின்றது. காட்சிகள் வந்துவந்து மறைகின்றன. மாந்தோப்பில் குயில் கூவுவதையோ, பாறைமீது ஏறி தோகை விரித்து மயில் ஆடுவதையோ நம் பிள்ளைகள் அறிவார்களா?

கார் காலம், பனிக் காலம், வேனிற் காலம் என்று எதனையேனும் அவை நம் உடம்பில் பட்டு, உள்ளத்தில் தோய்ந்து நிற்க உணர்கிறோமா? தென்றல் வந்து தழுவுவதன் இன்பத்தை நம் உடம்பு என்றேனும் நுகர வாய்ப்புளதா? மின் விசிறிக் காற்றன்றி பிறிதெதுவும் அறியாத குழந்தைகளுக்குத் தென்றல் என்றால் என்ன என்று தெரியுமா? மிகப்

பெரிய வளமனைகளுக்குள்ளும் அலுவலகங்களுக்குள்ளும் அடைபட்டுக் கிடக்கும் மாந்தருக்கு, பருவநிலை மாற்றங்களை ஐம்பொறிகளால் உற்று அறிய ஒரு சிறிது வாய்ப்பேனும் உண்டா? இச் சூழலில் பழங்காலத் தமிழகத்தைச் சங்கப்பனுவல்கள் நேரே, கண்ணெதிரில் காட்டும்போது, மக்கள் அதனை விளங்கிக் கொள்வது கூடக் கடினமே.

இறைமை உறையுமிடம் இயற்கையே. அவ் இயற்கையை விட்டு வெகுதூரம் விலகிவிட்டவர்களால். இறைமையைப் பற்றி, நான்கு சுவர்களுக்கிடையே பேசமுடியுமே தவிர, அதைத் தன்னனுபவமாக உணர முடியுமா?

சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களில் நாம் அறிந்து, அனுபவ நிலைபெற, பற்பல அரும்பெரும் காட்சிகள், இன்றையக் குறும்படங்கள் போலப் பாடல்கள் தோறும் தோன்றித் தோன்றி மறைகின்றன. சிறிதும் செயற்கைத் தன்மை பட்டுவிடாமல் அவை நகர்கின்றன.

மாந்தோப்பில் மாமரங்கள் அரும்பிப் பூத்து மலர்கின்ற இளவேனிற் காலம் (வசந்த காலம்) வருகிறது. மா நனை கொழுதிக் குயில்கள, அவ் இளவேனிலில் எழுச்சியுடன் மாறி மாறிக் கூவுகின்றன.

முகில்கள் தவழும் குன்றுகளின்மேல், நாட்டிய மங்கைபோல் மயில்கள் ஏறிநின்று, தோகையை விரிக்கின்றன; அப்போது ஒருசிலிர்ப்பும் ஒலிப்பும் கொண்டு அவை ஆடுகின்றன. ஆடிக்கொண்டே அவை அகவும் ஒலி, சேய்மையிலும் கேட்கிறது. கார்கால அனுபவத்தை நாம் உணர்கிறோம்.

மழை ஓய்ந்தது. அதன்பின் கூதிர் காலம் (கூதக காலம்) தொடர்ந்தது. எஞ்சிநின்ற முகில்கள் மழைத்துளிகளைச் சிதறவிட, தூற்றல் போட்டது. பின்னர்ப் பனிக் காலம் தொடங்கியது. மயிர்க்காய் உழுந்து

முற்றினால், பனிக் காலம் என்பது மக்களுக்குத் தெரிந்துவிடும். பனி கொட்டுகிறது. உழுந்தின் அகன்ற இலைகளைக் குளிர்காற்று வீசி அலைக்கிறது.

இவ்வாறு பருவங்களை ஐம்புலன்களுக்கும் உணர்த்துவது போல காலை, நண்பகல், மாலை என்னும் பொழுதுகளும் புலனாக்கப்படுகின்றன. இதில் பேரிடம் வகிப்பது மாலைப் பொழுதே. மாலையானதும், நான்கு நிலமக்களும் வீட்டினுள் விளக்கேற்றி வழிபாடு செய்வதைக் காண்கின்றோம்.

உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழுதெனவே

நினைத்த காரியத்தை முடித்தபோது ஏற்படும் மகிழ்ச்சிபோன்று இனிமைதரும் என் மனைவி, வீட்டினுள் விளக்கேற்றி வழிபடும்போது, என்னை நினைத்து வருந்தும் மாலைப் பொழுது இது எனத் தலைவன் எண்ணிப் பார்க்கின்றான்.

காடடர்ந்த முல்லை நிலத்தில் மாலைப்பொழுது வந்து கவிகின்ற காட்சி இனிதாயிருக்கிறது.

பல்கதிர் மண்டிலம் பசல்செய்து ஆற்றிச்
சேயுயர் பெருவரைச் சென்றவண் மறையப்,
பறவை பார்ப்புவயின் அடையப், புறவின்
மாஎருத்து இரலை மடப்பிணை தழுவ,
முல்லை முகைவாய் திறப்பப், பல்வயின்
தோன்றி தோன்றுபு புதல்விளக் குறாஅ,
மதர்வை நல்லான் மாசில் தெண்மணி,
கொடுங்கோல் கோவலர் குழலொடு ஒன்றி
ஐதுவந்து இசைக்கும் அருளில் மாலை ------- (69)

இத்தகைய மாலைப்பொழுது, தலைவன் சென்ற நாட்டிலும் இருந்தால், தன் தொழிலே பெரிதென்று, சேய்நாடு போனவர் அங்கே தங்கமாட்டார் என்பது தலைவி கருத்து. சூரியன் பகல் எல்லாம் ஒளிசெய்து, இப்போது அவ்வெப்பம் ஆறி மிகவுயர்ந்த மலையில் சென்று மறைந்தது. பறவைகள் தம் குஞ்சுகளிருக்கும் கூடுகளில் சென்றடைந்தன. காடுகளில் கரிய கழுத்தையுடைய ஆண்மான்கள் தத்தம் பெண்மான்களைத் தழுவிநின்றன. முல்லை மொட்டு விரிகிறது. புதர்கள் தோறும் பல இடங்களில் செங்காந்தட் பூக்கள் விளக்கேற்றியதுபோல மலர்ந்துள்ளன. கொழுத்த பசுக்கள் வீடு திரும்பும் போது அவற்றுடன் காளைகள் புணர்தலால் அவற்றின் கழுத்தில் கட்டியுள்ள மணிகள் மெல்லிதாய் ஒலிக்கின்றன. கோவலரின் குழலிசை இவற்றுடன் கலந்து இனிதாக ஒலிக்கின்றது. இவ்வாறு வருகின்ற அருளற்ற மாலைப்பொழுது அவர் சென்ற நாட்டிலும் இருக்குமல்லவா?

மாலைப் பொழுதினால், வரும் துயரத்தைத் தலைவன் நினைத்துத் திரும்பவில்லையென்றால், தான் வாழ இயலாது எனத் தலைவி வருந்திக் கூறுகிறாள். கடற்கரைப் பகுதியில் கவியும் மாலைப்பொழுதுப் புனைவு இது.

**பெருங்கடல் முழங்கக், கானல் மலர,**
**இருங்கழி ஓதம் இல்லிறந்து மலிர,**
**வள்ளிதழ் நெய்தல் கூம்பப், புள்ளுடன்**
**கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேரச்,**
**செல்சுடர் மழுங்கச், சிவந்துவாங்கு மண்டிலம்**
**கல்சேர்பு நண்ணிப் படர்அடைபு நடுங்கப்**
**புலம்பொடு வந்த புன்கண் மாலை ----- (117)**

வருத்துமெனத் தலைவன் எண்ணவில்லை என்பதே தலைவியின் வருத்தம்.

பெரிய கடலோசை முழங்குகிறது. கடற்கரைச் சோலைகளில் பூக்களெல்லாம் மலர்கின்றன. கரிய உப்பங்கழி வெள்ளம் வீட்டெல்லையைக் கடந்து பாய்கிறது. அகன்ற இதழையுடைய நெய்தற் பூக்கள் குவிகின்றன. பறவைகளெல்லாம் பூக்கமழும் மரச்சோலைகளிலுள்ள தத்தம் கூடுகளில் போய் அடைகின்றன. வானில் செல்லும் ஒளி மங்குகிறது. செவ்வானத்துச் சூரியன் மலையை அணுகிச் சென்றது. இவ்வாறு காதலர் துயருற்று வருந்த வந்தது, இரக்கமற்ற மாலைப்பொழுது.

நிலத்தைவைத்து, அதில் உள்ள மரங்கள், மலர்கள், சூழல் மாற்றங்களை வைத்துக் காலம் உருண்டோடுவது அறியப் படுகிறது. காலம் என்ற அருவப் பொருள் பல்வேறு பருவங்களாகவும் பொழுதுகளாகவும் மாறுவதை வானியல், பூவியல் (பூமி) மாற்றங்களை வைத்தே உருவப் படுத்திப் பார்க்கிறோம். தொல்காப்பியம்,

முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே (950)

என்று கூறியிருப்பது, இயைபுப் படுத்திப் பார்க்கும் (Ralativity Theory) கோட்பாட்டிற்கு ஒத்து வருவது கருதத் தக்கது. அகத்திணைப் பாடல்களின் உள்ளடக்கப் பொருளை முதல், கரு, உரி எனப் பகுத்திருப்பது, மிகச்சிறந்த அடிப்படையான, எதிர் கால உலகமும் போற்றிக் கற்று, ஆராயும் படியான கோட்பாடாகும்.

**நம்பிக்கைகள்**

**கணி வேங்கை**

வேங்கை மரம் குறிஞ்சி நில மலைபபகுதிகளில் அடர்ந்து காணப்பட்டது. அது கார்காலத்தில் பொன்னிற மலர்களுடன் பூத்துக்குலுங்கும். அக்காலப் பகுதி, திருமணம் நடத்துவதற்கு நல்லநாள் என்று கருதப்பட்டது. **'அன்னையும், நன்னாள் வேங்கையும்**

மலர்கமா, இனிஎன என்முகம் நோக்கினள்' – 'திருமண நன்னாளைக் (முழுத்த நாள், முகூர்த்த நாள்) காட்டுகின்ற வேங்கையும் விரைவில் மலர்வதாக என்று கூறி அன்னையும் என்முகம் நோக்கினாள்' எனத் தலைவன் காதில் விழுமாறு கூறுவது இது (206). 'வேங்கை தந்த வெற்பு அணி நன்னாள்' எனவும் வருகிறது (396). 'கார் அரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை' (373) என்பது மிக நுட்பமாகக் கருதத் தக்கது. கார்காலத்தில் வேங்கை அரும்பு மலர்ந்தது, 'சோதிடம்' கூறுவதுபோல இருந்ததாம். வேங்கை அரும்புங்காலம் தினை முற்றும் காலம். தினை முற்றியதும் அறுவடை செய்வதுடன், கன்னியர்க்கு மணமும் முடிக்குமாறு, அக் காலப் பகுதி அமைந்தமையின் 'கணி வாய் வேங்கை' எனப்பட்டது. கணியன், கணி என்பன வானநூல் வல்லாரையும் சோதிடநூல் வல்லாரையும் குறித்தன. இதிலிருந்து, இவ் அறிவியற் கலைகளில் தமிழர்க்கு இருந்த அடிப்படை அறிவு புலனாகும். இதுபோல முழுமதி நாளும் திருமண நாளாகக் கருதப்பட்டது.

அணங்கு

அரமகளிர் பற்றி ஒரு நம்பிக்கை இருந்துளது. தெய்வ மகளிர், தேவதைகள் எனும் பொருள்படவே வழங்கியுளது. வான் + அரமகளிர், சூர் + அரமகளிர், நீர் + அரமகளிர், வரை + அரமகளிர் என வருவன யாவும் ஒப்பிட்டு ஆராயற்பாலன. உலக மகளிரில் மிக்க அழகுடையவரை 'இவர்கள் அர மகளிர்' போல்வர் எனக் கற்பனை செய்துள்ளனர். இமயமலையில் அரமகளிர் இருப்பதாக ஒரு குறிப்பு உளது. அது அழகும் நிறமும் பற்றி எழுந்தவியப்பினால் கூறப்பட்டதாதல் வேண்டும். அவ்வாறே, அத்தகைய மகளிரைத் தாக்கணங்கு என்றும் குறித்துள்ளனர்.

காதலர்கள் ஒருவரை ஒருவர் அணங்கியதாகக் கூறிக்கொள்வர். ஒருவர் மீது கொண்ட காதலால், அவரை அடைய எண்ணித் துடிக்கும் நெஞ்சம் வருந்துவதையே, தாக்கி வருத்தும் அணங்கு என்றனர்.

தலைவன் 'தான் நம் அணங்குதல் அறியான், நம்மில் தான் அணங் குற்றமை கூறிப் பணிந்து நிற்பதாகத்' தோழி கூறுகிறாள் (245). 'அணங்கும் அணங்கும்போலும்' (376) - முருகனும் வெறியாட்டத்து வந்து எம்மை வருத்தும் போலும் என்று தோழி கூறுகிறாள்.

அணங்கு - தெய்வம், வீற்றுத் தெய்வம், தீண்டி வருத்தும் தெய்வம், கடல்கெழு செல்வி எனப் பலவாறு உணரப்படுகிறது.

அணங்கு வீட்டு நிலை, ஊருணித் துறை, கடல் பரப்பு, யாழ், யானைத் தந்தம், மத்தகம் எனக் கண்டாரை வருத்தும் அழகுடைய பொருள்களில் எல்லாம் உறைவதாக நம்பினர்.

மகளிர் மார்பில் அணங்கு உறைகிறது. 'சுணங்கணி வனமுலை அணங்குகொளத் திமிரி' (9) என்பர். இயல்பான பேரழகில், ஒரு தெய்வ ஒளி வீசுவதைக் கண்டே, அங்ஙனம் கூறியுள்ளனர். தமிழர் படைத்த தொன்மங்களில் சிறந்த ஒன்று இது. அணங்கு காணும் பொருளில் உளது கண்டவர் உளத்தில் உளதா என ஆராய்வது உளவியலாகும்.

### கொல்லிப் பாவை

ஒரு பேரழகு கண்டாரைக் கொல்வதாகக் கூறுவது உலக வழக்கு. திருவள்ளுவரும் தாக்கணங்கு, கண்டார் உயிருண்ணும் கூற்று என்பார். இதனைப் போலவே, கொல்லி மலை மீது ஒரு பாவை இருந்ததாகவும் அது தன்னைக் கண்டாரைக் கொன்றுவிடும் என்றும் பல்வேறு செய்திகள் பழந்தமிழ் நூல்களில் வருகின்றன.

ஆனா நோயொடு அழிபடர்க் கலங்கி
காமம் கைம்மிகக் கையறு துயரம்
காணவும் நல்காயாயின், பாணர்
பரிசில் பெற்ற விரியுளை நன்மான்
கவிகுளம்பு பொருத கன்மிசைச் சிறுநெறி

இரவலர் மெலியாது ஏறும் பொறையன்
உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்
அகலிலைக் காந்தள் அலங்குகுலைப் பாய்ந்து
பறவை இழைத்த பல்கண் இறாஅல்
தேனுடை நெடுவரை, தெய்வம் எழுதிய
வினைமாண் பாவை அன்னோள்
கொலை சூழ்ந் தனளால் நோகோ யானே (185)

பாணர்கள், தாம் பரிசாகப் பெற்ற குதிரைகளில் சென்றமையால், மலை மீது, அவற்றின் குளம்புபட்டுப்பட்டு தேய்ந்துபோனது. அந்நெறியில் இரவலர் வருந்தாது மேலே நடந்துசெல்வர். அத்தகைய கொல்லிமலையின் மேற்கே, அகன்ற இலைகளையுடைய காந்தள் மலர்களில் தேனீக்கள் சேகரித்த, தேன் இறால்கள் உள்ளன. அங்கு தெய்வம் செதுக்கிவைத்த திறன் மிக்க சிற்பமாகிய கொல்லிப்பாவை உளது. அதனைப்போன்ற தலைவி தன் அழகால் என்னைக் கொல்ல நினைத்தாள். அதனால் துன்புறும் என்னைக் காத்து, 'பங்கனே, நீ உதவாவிட்டால், யான் விதியை நொந்து போக வேண்டியதுதான்; வேறு வழியில்லை' என்று தலைவன் கூறுகின்றான்.

எழுதுதல் – சிற்பமாக வடித்தல். சிலப்பதிகாரத்தில், 'கடவுள் எழுத ஓர் கல் தாரானாயின்' என்று இடம்பெறும். தெய்வமே உருவாக்கிய சிற்பம் என்பது, குடைவரையில் தானே தோன்றியதாகலாம்.

......... பயங்கெழு பலவின் கொல்லிக் குடைவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரி கதிர் இளவெயில் தோன்றி யன்ன ... (192)

தலைவியின் அழகு என இடம்பெறுகிறது. இதில் பூதம் என்பதும் தெய்வம் என்று கருதப்படுகிறது. தெய்வம் செய்து வைத்த புதிது இயல், புதுமையுடைய பாவையாம். அந்தப் பாவை, ஞாயிற்றின் இளவெயில்பட்டு, ஒளிர்வது போன்ற அழகினள் என்பது சிறந்த கற்பனைக் காட்சியாகும்.

மலையுறை குறவன் காதல் மடமகள்
பெறலருங்குரையள் அருங்கடிக் காப்பினள்
சொல்லெதிர் கொள்ளாள் இனையள் அனையோள்
உள்ளல் கூடாது என்றோய்! மற்றும்
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு
அவ்வெள் ளருவிக் குடவரை அகத்துக்
கால்பொருது இடிப்பினும் கதழுறை கடுகினும்
உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினும் திருநல உருவின்
மாயா இயற்கைப் பாவையின்
போதல் ஒல்லாள்என் நெஞ்சத் தானே (201)

குன்றத்துக் குறவன் மகள் பெறுதற்கரியவள் என்றான் பாங்கன். அதற்குத் தலைவன் அவள் கொல்லிப் பாவைபோலத் தன் நெஞ்சைவிட்டுப் போக மாட்டேன் என்பதால் என்ன செய்வேன் என்று கூறி, தன் நிலையை விளக்குகின்றான்.

பலாமரங்கள் நிறைந்த கொல்லிமலை, அதன் உச்சியில் தெய்வம் காக்கும் மேற்குப் பகுதியில், பாவை ஒன்று உளது. அது புயல்காற்று மோதினும் கடுமழை பெய்தாலும் இடி இடித்தாலும் பிறஊறுகள் பல தோன்றினும், இம்மண்ணுலகமே அதிர்ந்தாலும் தன் அழகிய வடிவம் சிறிதும் அசையாத இயல்புடையதாகும். அதுபோலத் தலைவி தன் நெஞ்சை விட்டுப் போகவில்லை என்று கூறுகின்றான் தலைவன்.

சங்கப் பாடல்களில் பெண்ணின் பேரழகுக்கு உவமையாகும் இப் பாவை பற்றிப் பல்வேறு குறிப்புகள் உள்ளன.

**தெய்வ மரங்கள்**

மரங்களில் தெய்வம் உறைவதாகக் கருதி வழிபட்டுள்ளனர். பிற்பாடு 'தல விருட்சம்' என்று பெரிய கோயில்களில் எல்லாம் குறிப்பிடுவது இதன் தொடர்ச்சியாகும்.

எம்மூர் நீர்த்துறையில் உள்ள கடவுள் முதுமரத்தில் தங்கும் கூகையே, பெரும் ஓசை எழுப்பாதே – என்று தோழி சொல்கிறாள். 'கடவுள் முதுமரத்து' (83) என்று குறிப்பதால், மிக நீண்டகாலமாகவுள்ள, முதிர்ந்த மரத்தில் கடவுள் உறைகிறது என அறிகின்றோம். 'எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும் குருகார் கழனி' (216) என்று, நெருப்புப்போல் பூக்கும் கடவுளேறிய வேங்கைமரம் குறிக்கப்படுகிறது.

'தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை, மன்றப் பெண்ணை' (303) என்று, தொன்று தொட்டுக் கடவுள் உறையும், பொதுமன்றத்திலுள்ள பருத்த அடியையுடைய பனைமரம் குறிக்கப் படுகிறது.

தாதெரு மறுகின் ஆபுறந் தீண்டும்
நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை (343)

எரு உரம் கிடக்கும் தெருவில், பசு முதுகை உராய்ந்துகொள்ளும் நீண்ட விழுதுகளைத் தொங்கவிட்ட கடவுள் உறையும் ஆலமரம் உளது. அதில் இட்ட பலிச் சோற்றைக் காக்கை உண்டது. இவ்வாறு வேங்கைக் கடவுள், கடவுள் ஆலம் என வருகின்ற தொடர்கள் கருதுதற்குரியன.

**கோயில், விழா, குயவன்**

கண்ணி கட்டிய கதிர அன்ன
ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடி
யாறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்
சாறுஎன நுவலும் முதுவாய்க் குயவ! (200)

ஒளிக்கதிர்களை அரும்புகளாக வைத்துக் கட்டியது போல, பூங்கொத்துக்களை வைத்துக்கட்டிய, நொச்சி மாலையைச் சூடி, ஆறு கிடந்தாற்போன்ற, அகன்ற தெருவில் எல்லோரும் கேட்ப, திருவிழா வருவது பற்றிக் கூவிச் செல்லும், அறிவார்ந்த குயவனே – என்பது குயவன் கோயில்

வழிபாட்டாளனாக இருந்ததை உணர்த்துகிறது. இன்று கிராமக் கோயில்களில் வேளார் என்பர். கோயிலைக் காட்டி குயவன் பிழைத்தாற் போல என்பது பழமொழி. காலம் செல்லச் செல்லவே கோயில்கள் பெரிதாக வளர, பார்ப்பனர்கள் அருச்சகர்களாக ஆனார்கள் போலும்!

**தொல்வினை**

தலைவன் களவு ஒழுக்கத்தில், திருமணம் செய்து கொள்ளாது காலம் கடத்தினான். இதனால் வருந்திய தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுகிறாள்.

'யாம் செய் தீவினைக்கு எவன்பேதுற்றனை' (88) என்று தோழி கூறுகின்றாள். கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் பாடல் இது. இது நாம் முன்பு செய்த தீவினையின் பயன். இதற்கு வருந்த என்னாவது? நாம் அவன் இருக்குமிடம் சென்று நம் வருத்தத்தைச் சொல்லி வருவோம். புறப்படு! அவனுடைய பழம்முதிர் குன்றுகூட அன்புமிகவுடையது. அதனால் தன்னவன் செய்யும் கொடுமையை எண்ணி, கண்ணீர் அருவியாகக் கொட்டி அழுகின்றது, அதனைப் பார்! என்று தோழி கூறுகிறாள். இது தற்குறிப்பேற்ற அணி.

**அரிய செய்திகள்**

அக் காலத்தும் நம்பவியலாத பல அரிய செய்திகள் நடந்துள. அவை பரவலாக மக்களிடையே பேசப்பட்டுள்ளன.

**........ மாசில் கற்பின் மடவோள் குழவி**
**ஒய்ய வாங்கக் கைவிட் டாங்கு... (15)**

குற்றமற்ற கற்பினையுடையாளின் குழந்தையைப் பலியிட என்று வெடுக்கென வாங்க, அவள் தன்னை மறந்து குழந்தையைக் கைவிட்டாற் போல. தலைவி, களவு நீட்டித்ததால் தன் நாணமும் தொலைந்ததற்கு இதை உவமை கூறுகின்றாள்.

சிலப்பதிகாரத்தில் வரும் மாலதி கதை இதனுடன் ஒருபுடை ஒத்துளது. அவள் மாற்றாள் மகவுக்குப் பால் கொடுக்கும்போது, அது பால்விக்கி இறந்துவிட்டது. அக் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, பாசண்டச் சாத்தன் கோயிலில், பிள்ளையைப் பிழைக்க வைக்க வேண்டிப் பாடு கிடந்தாள். அவ்வாறு இருந்த போது, திடீரென இடாகினிப்பேய் வந்து, குழந்தையைப் பறித்துச்சென்று தின்றுவிட்டது (காதை. 9)

**பல்லி சொல்லும் பலன்**

பல்லி கத்துவதைக் கொண்டு 'குறி' பார்க்கும் பழக்கம் பல பாடல்களில் காணப்படுகிறது. தலைவன் வினை முடித்துத் திரும்பி வருகின்றான். அப்போது தலைவிக்கு, 'நம் வருகையை முன்கூட்டி உணர்த்துமாறு, நம் பெருமனையில், பல்லி கத்திக் குறிகாட்டுமா' என எண்ணிப் பார்க்கின்றான். 'படுங்கொல் வாழி நெடுஞ் சுவர்ப் பல்லி' (169). சுவரிலே பல்லி இருப்பதுதானே அதன் இயல்பு.

பொருள் தேடப்பிரிந்த தலைவன் திரும்பிவிடுவான் என்று தோழி, தலைவிக்கு ஆறுதல் கூறுகின்றாள். அவனை நினைக்குந் தோறும், நடுயாமத்திலும் அவன் வருவானெனப் பல்லி குரல் கொடுக்கிறதாம்.

> உயர்புகழ் நல்இல் ஒண்சுவர்ப் பொருந்தி
> நயவரு குரல பல்லி
> நள்ளென் யாமத்து உள்ளுதொறும் படுமே (333)

பல்லி கத்துவதை 'நய வரு குரல' என்பது, அது நற்குறி காட்டுதலாற் போலும். முள்ளம்பன்றி கற்பிள விடையே இருந்தது. அது தினைப்புனத்தை அழிப்பதால், அதைப் பிடிக்க வேட்டுவர்கள் ஒரு பொறியை வைத்திருந்தனர். அப் பன்றி அதனுள் நுழைய இருந்த பொழுது, பக்கத்திலிருந்த பல்லி கத்தியது. இதைத் தீக்குறி என உணர்ந்த பன்றி, சிறுகச் சிறுகப் பின்னிட்டுத் தப்பியது. மீண்டும் தானிருந்த கல்பிளவுக்குள் போயிருந்தது.

எய்ம்முள் அன்ன பரூஉமயிர் எருத்தின்
செய்ம்ம் மேவல் சிறுகண் பன்றி
ஓங்குமலை வியன்புனம் படீஇயர், வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதின், தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்த்துதன்
கல்லளைப் பள்ளி வதியும் நாடன் (98)

நூழை – புழை வழி. பன்றிக்குப் பல்லி கத்தியதும் ஏதோ ஒன்று நிகழ்வதாகப் பொறியுணர்வு வரக்கூடும். அதுவும் பல்லி சொல்லும் பலன் கேட்டுத் தப்பியது வியப்பே. உயிர்களின் இயல்பறிந்தார் இதுவும் நடக்கக் கூடியதே என ஒப்புவர். விலங்கு, பறவை, செடி கொடி இனத்துடன் எங்ஙனம் அன்றையத் தமிழர்கள் ஒன்றி வாழ்ந்தனர் என்பதற்கு இத்தகையவை சான்றாகும்.

திருக்கார்த்திகை

கார்த்திகை மாதம் விளக்கீடு பற்றிப் பழந்தமிழிலும் இடைக் காலத் தமிழிலும் குறிப்புக்கள் காண்கின்றோம். அதுபோலத் தீபாவளி பற்றிய குறிப்பு எதுவும் காணப்பட்டிலது. கோங்கின் பூக்கள் விளக்கேற்றி வைத்ததுபோல இருக்கும். எங்கு நோக்கினும் கோங்கு பூத்துக் குலுங்கும் காடு திருக்கார்த்திகையில் வரிசையாக விளக்கேற்றிவைத்தது போல இருக்கிறது.

அறுமீன் பயந்த அறம்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே (202)

கார்த்திகை நாள்மீன் ஆறு புள்ளிகளாக இருக்கும். முருகனுக்குரியதாகக் கருதப்படும் அம் மாதம் அறம்செய் திங்கள் எனப்படுகிறது. செல்சுடர் – ஒளி வீசும். நெடுங்கொடி – நீண்ட வரிசை.

மாமலை விட ரகம் என்பதால், மலைமீது விளக்குகள் ஏற்றப்படுவது புலனாகிறது.

**எழுமீன் கூட்டம்**

கார்த்திகை நாள்மீன் ஆறுமீன்களின் கூட்டம் என்றால், ஏழு மீன்களின் கூட்டம் ஒன்றும் குறிக்கப்படுகிறது. இதனை வடமொழியில் சப்தரிஷி மண்டிலம் என ஆக்கிக் கொண்டனர்.

கரிய கடற்பரப்பின் மேலே, வெண்ணிறக் கடற் காக்கைகள் பறப்பது நீலவானில் எழுமீன் கூட்டம் மின்னுவதைக் காட்டுகிறது.

**மையற விளங்கிய மணிநிற விசும்பின்**
**கைதொழும் மரபின் எழுமீன் போலப்**
**பெருங்கடற் பரப்பின் இரும்புறம் தோயச்**
**சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும் ........ (231)**

**விடிவெள்ளி**

புலர்காலையில் தோன்றும் விடிவெள்ளியும் அழகு விளங்கக் கூறப்படுகிறது. ஆம்பல் மலரின் முற்றிய அரும்பு போதாகிக் காலையில் மலர்கிறது. அது வெண்ணிறமாக, விடிவெள்ளி போலத் துலங்குகிறது.

**முயப்பிடிச் செவியின் அன்ன பாசடை**
**கயக்கணக் கொக்கின் அன்ன கூம்புமுகை**
**கணைக்கால் ஆம்பல் அமிழ்துநாறு தண்போது**
**குணக்குத் தோன்று வெள்ளியின் இருள்கெட விரியும்.. (230)**

குணக்கு - கிழக்கு. ஆம்பல் மலர் மொட்டாகக் குவிந்திருந்து சிறிதுசிறிதாக விரிந்து மலர்வது காட்சிப் படுத்தப்படுகிறது. அதன் இலைகள் முயலின் காதுகள் போல அகலமாக இருக்கும். அதன் குவிந்த மொட்டு குளத்திலுள்ள கொக்குகள் போல இருக்கும். திரண்ட தண்டினையுடைய ஆம்பலின் (அல்லி) அமிழ்தென மணக்கும் போது, கிழக்கில் தோன்றும் வெள்ளி மீனைப்போல இருள்கெடுமாறு விரிகிறது.

தமிழர்களின் வானியலறிவு மிக நுட்பமானது. அவை யாவும் தொகுத்து ஒருங்கிணைத்துப் பார்க்கப்படவேண்டும்.

**ஓவத் தன்ன வளமனை**

'ஓவத் தன்ன இடனுடை வரைப்பு' என்பது (182) திரும்பவரும் ஒரு தொடர். வீடு ஓவியம் வரைந்ததுபோல இருக்குமாம்; பரந்த இடத்தில் பெரிய வளமனையாக விளங்கும். 'ஓவுக்கண்டன்ன இல்வரை' (268) என்றும் கூறப்படுகிறது. ஓ, ஓவு, ஓவம் என்பன ஓவியம் என்பதன் அடிச்சொற்கள். அமெரிக்காவில் ஏக்கர்க் கணக்கில் தனிவீடுகள் உள்ளன. ஏனெனில் அங்கு மக்கள் தொகை குறைவு; நிலப்பரப்பு மிகுதி. சங்க காலத்தில் இத்தகைய நிலை இருந்துளது. வீட்டினுள்ளேயே பின்பகுதித் தோட்டம் துரவுகளில் காதலனைச் சந்திக்கும் பழக்கமும் தலைவன் கேட்கும் அண்மையில் நிற்க, தலைவியும் தோழியும் அவனுக்குக் கூற வேண்டியதைக் குறிப்பாகத் தம்பேச்சில் வெளிப்படுத்தும் சூழ்நிலையும் இருந்துள்ளன. இதனைச் சிறைப்புறத்தானாகக் கூறியது என்று குறிப்பர். வீட்டு வேலிக்கு - எல்லைக்குப் புறத்தே தலைவன் நிற்கிறான் என்பது பொருள்.

**நடுகாற் குரம்பை**

பெரும்பெரும் வளமனைகளில் வாழும் காதலரைப் போலவே, குடிசைகளில் வாழ்பவர்களையும் காண்கின்றோம்.

-- உரவுக்கணை
**வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி**
**உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையொடு**
**மனைவாய் ஞமலி ஒருங்குபுடை ஆட**
**வேட்டுவலம் படுத்த உவகையன் காட்ட**
**நடுகாற் குரம்பைத் தன் குடிவயிற் பெயரும்**
**குன்ற நாடன் ......** (285)

வலிய கணையைத் தொடுத்து, வில்லை வளைத்த வன்கைக் கானவன் முள்ளம் பன்றியை அதன் நெஞ்சிலே பாய்ச்சிக் கொன்றான். அந்த இறைச்சியைத் தூக்கிக்கொண்டு, வேட்டை நாய்கள் உடன் ஆட, மிக்க களிப்புடன் வீடு திரும்பினான். காட்டின் நடுவே, கால்களையூன்றிக் கட்டிய தன் குடிசையிருக்கும் சேரிக்குள் சென்றான்.

## தேர் ஏறி வரும் காதலன்

தேர் ஏறி வரும் காதலனைப் பற்றிய பாடல்கள் குறிப்பிடற்பாலன. செல்வ வளம் மிக்கவன் என்பது பெறப்படுகிறது. அவன் ஏழைக் குடும்பத்து அழகிய மகளிரை நாடி வருவதாகக் கருத இடமுளது. **இனமணி நெடுந்தேர் (19), செய்வினை நெடுந்தேர் (221)** என்பதால் தேரின் அழகை அறிகின்றோம். இனமணி – ஒரே அமைப்புள்ள மணிகள். **மன்னர் மதிக்கும் மாண்வினைப் புரவி (81), பொலம்படைக் கலிமா (361)** போன்ற தொடர்களால், தேரில் பூட்டிய குதிரைகளைப் பற்றிய சிறப்பு புலனாகிறது. **கவர்பரி நெடுந்தேர் (307).** விருப்பந் தரும் குதிரை பூட்டிய தேர் காட்டப்படுகிறது. தேரின் கூடவே இளையர் என்னும் வீரர்கள், காவலாளர் போல் கச்சையை இறுகக்கட்டிக் கொண்டு ஓடி வருவர் எனத் தெரிகிறது. **'விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர், அரைச்செறி கச்சை யாப்பழித்து அசைஇ', மென்மெல வருக (21)** என்பதால் இதை அறியலாம். இன்றும் **'என்னடா இது? கச்சை கட்டிக்கொண்டு சண்டைக்கு வருகிறாய்'** என இச்சொல் உலக வழக்கில் உளது.

## சமுதாய ஏற்றத்தாழ்வு

சங்க காலத்தில் நான்கு நில மக்களின் வாழ்வியலில் வேறுபாடுகள் இருந்தன. அன்று வருணாசிரம முறை தமிழகத்தில் அறவே இல்லை. இத்தனைக்கும் அன்று புகுந்த பார்ப்பனர்கள் தமிழர்களாகவே வாழ்ந்தனர். அதே சமயம் வேதம் ஓதுதலையும் வேள்வி செய்தலையும் கைவிட்டிலர். அவர்களும் குடிமக்களுள் ஒருவராகவே கருதப்பட்டனர்.

குடிமக்களிடையே தொழிலால் வேற்றுமை, செல்வ வளத்தால் வேற்றுமை, பழக்க வழக்கங்களால் வேற்றுமை எனப் பலவும் இருந்தன. ஒவ்வொரு நிலத்திலும் செல்வ வளம் மிக்கவர்களும் ஏழைகளுமாக இருந்தமை புலனாகிறது. வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் என்பதற்கு (புறம். 183) நான்கு நில மக்கள் என்று கோடலே பொருத்தமாகப் படுகிறது. நற்றிணைப் பாடலொன்று, நான்குநிலக் குடிவழி முறையில் ஏழை செல்வன் என்ற வேறுபாடிருந்ததை விளக்கிக்காட்டுகிறது. தலைவி மீன்பிடி தொழிலையுடைய பரதவர் மகள். அவளைக் காதலித்தவனோ, மருத நிலம் சார்ந்த செல்வவளம் மிக்க தேர்களை ஊர்தியாகவுடைய வணிக குலச் செல்வன். தோழி இவ் வேறுபாட்டைச் சுட்டிக் காட்டி, 'எம் உடலில் புலால் நாற்றம் வீசும். எம்மருகில் வரவேண்டாம். எமக்கும் உமக்கும் ஒத்து வராது. எங்கள் ஊரிலும் உம்மைப் போன்ற பெருஞ்செல்வர்கள் உளர்' என்று கூறுகின்றாள்.

இவளே,
கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீன்எறி பரதவர் மகளே,
நீயே,
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ
புலவு நாறுதும் செலநின் றீமோ
பெருநீர் விளையுள்எம் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே
எம்ம னோரில் செம்மலும் உடைத்தே (45)

கானல் – கடற்கரைச் சோலைகள், நியமம் – கடைத்தெரு. அங்கு நீண்ட கொடிகள் அசைவது, பண்டங்களை எழுதிவைத்து விலைபகர்தற்காகும். சுறாமீன் அறுத்தவற்றை வெயிலில் காயவைப்பதற்குக் கூட்டமான புறவைகளை விரட்டும் எம் உடம்பில் புலால் வீசும். ஆதலால் விலகிப்போய்விடும், கடல் விளையுள் என மீன் பிடித்தும் உப்பு விளைத்தும் வாழும் எம் எளிய வாழ்க்கை, உம்முடன் பொருந்தி வராது. எம் குடியிலும் உம்மைப் போன்ற செம்மலுடையார் – செல்வர் உள். நியம மூதூர் என்பதால் மருதநில வணிகர் எனலாம்.

பல்வேறு நிலவழியான வாழ்வுடைய குடிமக்களையே காண்கின்றோம். அவ்வந் நிலத்துக் கேற்ற தொழிலினராக அவர்கள் காட்சி தருகின்றனர். தொல்காப்பியர் நிலமக்கள், நிலமக்களில் தலைமக்கள், வினைவலர், அடியோர் எனக் குறித்தற்கேற்பவே, சங்க காலச் சமுதாயத்தைப் பாடல்கள் வழி அறிகிறோம்.

கைவினை வல்ல கம்மியர் பொற்கொல்லர், ஓவியர், தேர்ப்பாகர், இளையர் (வேலையாட்கள்), உழுவோர், மீன்பிடிப்போர், வேட்டையாடிப் பிழைப்போர் என்றுதான் பல்வேறு வகையான தொழில் செய்வோரை, பல்வேறு உழைப்பு, திறமை, முயற்சி, வாழ்நிலை உடையோரைப் பார்க்கின்றோம். புலைத்தி என ஆடைகளைச் சலவை செய்து தருபவளும் பூவிலையாட்டி எனப் பூ விற்பவளும் தமிழகப் பார்ப்பனரும் கூடிவாழ்ந்துள்ளனர்.

மீனைப் பிடிக்கும் போது சிக்குண்ட வலைகளைப் பிரித்துச் சிக்கலெடுக்கும் பரதவர்கள் கடற்கரை சார்ந்த நெய்தல் நிலத்தில் வாழ்கின்றனர் (207). மறுகால் உழுத வயலில் விதைத்துவிட்டு, அவ் வட்டியில், மீன்களைப் பிடித்துக்கொண்டு வரும் உழவர்களுக்குப் புதுவருவாய்க்குக் குறைவில்லையாம் (210)

'பார்வை வேட்டுவன்', பார்வைப் பறவைகளை வைத்து புதிய பறவைகளைப் பிடிக்கின்றான் (212). விலங்குகளை வேட்டையாடப் போகும் வேட்டுவனுடன் இளையரும் போகின்றனர் (389). உமணர்கள் உப்பு

மூடைகளை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு நீண்ட வரிசையில் ஊர்ஊராகப் போகும் காட்சி பலபாடல்களில் புனையப் படுகிறது. குன்றைப் போன்ற உப்புக் குவியலை, மலைநாட்டிற்குக் கொண்டுபோய் விற்கின்றனர். உப்பு வண்டி சில சமயம் உடைந்துபோவதுண்டு (138). உப்பு அன்று மிகஅரிய பொருளாகக் கருதப்பட்டது. 'கடல்விளை அமுதம்' (88) என்று அது குறிக்கப்படுகிறது. காட்டில் மலர்ந்த முல்லைப் பூக்களை, புறஞ்சேரியில் வாழும் பார்ப்பன மகளிர் மாலைப் பொழுதில் சூடி மகிழ்கின்றனர் (321). இங்ஙனம் நூல் முழுதும் தேடினால், பிறப்பினால் வேறுபாடு என்பதோ, நீண்டாமை என்பதோ ஒருசிறிதும் இடம்பெற்றில. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் அவரவர் செய்யும் தொழிலாலும் சிறப்பு வேறுபாடு கூறுதல் ஒவ்வாது. அவரவர்க்கு அவரவர் செய்யும் தொழிலே சிறப்புடையதாகும். தொழில் வேற்றுமையால் கன்னார், கொல்லர், புலையர், பரதவர், உழவர், வேட்டுவர், இளையர் எனப்படுகின்றனர். இவர்களிடையே வருமானம், வாய்ப்பு, வசதிகளால் ஏற்றத்தாழ்வு அமையவே செய்யும். ஆயினும் எல்லாத் தொழிலும் அதனதன் நிலையில் சிறப்புடையது எனக் கோடலே மன்னாயம் (சமுதாயம்) போற்றத்தக்க சிந்தனையாகும்.

### ஓவியம்

சங்க காலத்தில் ஓவியக் கலையும் சிற்பக் கலையும் சிறந்து விளங்கின எனத் தெரிகிறது. 'சுவரை வைத்துத் தானே சித்திரம் தீட்டவேண்டும்' என்ற பழமொழிப்படி, வீடுகளுக்குள் சுவர்களில் ஓவியம் தீட்டி வைத்துள்ளனர். பழைமையான வீடுகளிலும் கோயில்களிலும் இதன் தொடர்ச்சியை காண்கிறோம். எழுதுதல் என்பது கண்ணுக்கு மைஎழுதுதல், ஓவியம் எழுதுதல், சிற்பம் எழுதுதல் (செதுக்குதல்) என மூன்றனையும் உணர்த்தியது. தலைவியின் அழகு, 'வல்லோன் எழுதியன்ன காண்தகு வனப்பின் ஐயள்' (146) என்று பாராட்டப்படுகிறது. ஓவிய வல்லுநன் எழுதிய சித்திரம் போன்ற அழகாம். 'துய்' எனப்படும் பஞ்சு போன்ற தலையையுடைய பாதிரிப்பூ, ஓவியன் ஒள்ளிய அரக்கு வண்ணத்தை

ஊட்டிய, துகிலிகை (தூரிகை) போலவுளது. 'ஓவ மாக்கள் ஒள்ளரக்கு ஊட்டிய துகிலிகை அன்ன துய்த்தலைப் பாதிரி' (118) என்று, அதன் சிறப்பனைத்தையும் உணருமாறு கூறப்பட்டுள்ளது. செந்நிற அரக்கைத் 'தீட்டிய' என்று கூற வேண்டிய இடத்தில் 'ஊட்டிய' என்று சொல்லியிருப்பது மிக நுட்பமான சொல்லாட்சியாகும். இதனால், அகநானூற்றில் ஒரு புலவர்க்கு 'ஊட்டியார்' என்றே பெயரிட்டுள்ளனர்.

**பஞ்சு நூல், அறுவை, துகில், மரல்நார்உடுக்கை, தழையுடை**

தொடக்க காலத்தில் தழையுடையையே உடுத்தி வாழ்ந்துள்ளனர். பின்னர் தழையுடை, ஒரு பழைமையின் சின்னமாய் விழாக் காலங்களிலும் துணங்கைக் கூத்துப் போன்றவற்றிலும் காதலர் பரிசளித்தல், மணச்சடங்குகளில் அணிதல் போன்றவற்றிலும் பயன்பட்டுள்ளது.

**'மரல் நார் உடுக்கை மலையுறை குறவர்'** (64) என்பது, குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர்கள் (வேட்டுவர்கள்) மரல் மரப் பட்டையைத் தைத்த உடையை அணிந்தமையைக் குறிப்பிடுகிறது. துறவு பூண்பவர், மரவுரி தரித்ததாக வருவதுண்டு. பிறகு அது செந்நிறத் துவராடையைக் குறிக்கலாயிற்று.

**ஆளில் பெண்டிர் தாளில் செய்த**
**நுணங்குநுண் பனுவல் போலக் கணங்கொள**
**ஆடுமழை தவழுங் கோடுயர் நெடுவரை** (353)

கணவனில்லாத கைம்மை மகளிர் தம் முயற்சியால் செய்த மிக நுண்ணிய பஞ்சுத் திரள்போல, உயர்ந்த மலையில் முகில்கள் தவழ்கின்றன. வில்லால் பஞ்சை அடித்துக் கொட்டை நீக்குவதும் குறிக்கப்படுகிறது.

துணிகள் தறியில் நெய்து, அறுத்தெடுக்கப் படுவதால், அறுவை எனப்படன்டன. 'துறைபோகு அறுவைத் தூமடி அன்ன, நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே' (70) – நீர்த்துறையிலே தோய்த்தெடுத்த வெள்ளாடையின் மாசற்ற மடி போல, வெண்மை நிறம் விளங்கும் சிறகுகளையுடைய குருகே (நாரையே). மடி – என்ற சொல் இன்றும் வழக்கிலுள்ளது.

துகில் என்பது பட்டாடை. அது வெயிலொளிக்கு ஒப்பிடப்படுவதால், நல்ல நிறத்துடன் இருந்திருக்கக் கூடும். '**துகில் விரித்தன்ன வெயில் அவிர் உருப்பின்**' (43,99) என்று துகில் உவமை கூறப்படுமளவு சிறந்து விளங்கியுள்ளது. இடையில் மென்மையான துகிலை உடுத்து, அதன் ஊடே பல படங்களையுடைய மேகலையை அணிந்தவள் நடப்பதுபற்றிய குறிப்புளது (366). மேகலை - காழ் எனப்படும் பொற்காசுக் கொத்துகளையுடையது அது. '**காழ் பெய் அல்குற் காசுமுறை திரியினும்**' (66) என்று, நடக்கும்போது, அவை பின்னிக் கொள்வது குறிக்கப்படுகிறது.

**சங்கு வளையல்**

'**வாள் அரம் பொருத கோண் ஏர் எல்வளை**' (77) - வாள் அரத்தால் அராவிய, வளைந்த, அழகிய, ஒளி பொருந்திய சங்கு வளையல் பற்றிப் பலபாடல்களில் வருகிறது. '**சங்கறுப்பது எங்கள் குலம், சங்கரனார்க்கு ஏதுகுலம்**' என்று, சங்கை அறுத்து வளையல் செய்வது பற்றி, இடைக் காலத் தனிப் பாடலிலும் வருகிறது.

**பொன் அணிகலன்கள்**

**இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை**
**நீலத்து அன்ன பாசிலை அகந்தொறும்**
**வெள்ளி அன்ன விளங்கிணர் நாப்பண்**
**பொன்னின் அன்ன நறுந்தாது உதிர .....** (249)

புன்னை மரக் காட்சி இது. அதன் கிளைகள் இரும்புபோல் கரு நிறத்தன; பசிய இலைகள் நீலம்போன்றன; வெள்ளி போன்ற வெண்ணிறப் பூங்கொத்துக்கள்; அதிலிருந்து உதிரும் பொன்போன்ற மகரந்தப் பொடி என இவ்வாறு வருவதுகொண்டு, அன்று இவை புழக்கத்திலிருந்தமை பெறப்படும்.

காட்டு மல்லிகை மான்குளம்பு பட்டு மழைநீருடன் அழுத்திச் சிதைந்து கிடப்பது, மூசுபோடுவதற்கு உருக்கிய வெள்ளிபோல இருக்கிறது.

'வெள்ளி உருக்குறு கொள்கலம் கடுப்ப' (124) என்பதால், வெள்ளியை உருக்கி அணிகலம் செய்தமை அறியப்படும்.

தும்பி வண்டு கருப்பாக இருக்கும். அது நறவம்பூவில் தாதினை ஊதியதால், பொன்னிறக் கீற்றுடன் காணப்படுகிறது. பொன்னை உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல் கருப்பாக இருக்கும். அதில் பொன்னை உரைத்த இடம் பொன்னிறமாய் இருக்கும். தும்பியை உரைகல்லுக்கு உவமை கூறுவதால், அன்று பொன் வாணிகம் சிறந்திருந்தமை பெறப்படும். 'பொன் உரை கல்லின் நன்னிறம் பெறூஉம்' தும்பி என வருகிறது. (25)

வேங்கையும் பூத்துக் குலுங்குவது, பொற்கொல்லன் அணிகலன் செய்வது போல உளதாம்.

**கருங்கால் வேங்கை நாள்உறு புதுப்பூ**
**பொன்செய் கம்மியன் கைவினை கடுப்ப** (313)

என்று கூறப்படுகிறது.

ஞெமை மரத்தில் இருக்கும் குடிஞை எனப்படும பேராந்தை, அடித்துத் தட்டுவதுபோல் எழுப்பும் ஓசை, பொன் அணிகள் செய்யும் கொல்லன் தட்டித்தட்டிச் செய்யும் ஒலிபோல் உளது. 'கானத்து, அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை, பொன் செய் சொல்லனின் இனிய தெளிர்ப்ப' (394) என்று இது கூறப்படும்.

செங்காந்தட்பூ கைவிரல்கள் போலப் பூக்கும். அதன் பக்கத்தில் உள்ள வாழைப்பூ மொட்டு சேர்ந்திருப்பது கை விரலணியாகிய மோசை என்னும் மோதிரத்தை மகளிர் விரலில் அணிந்திருப்பது போல உளது (188).

மகளிர் இளம் பருவத்தே அணியும் காற்சிலம்பு பொன்னாலானது. ஒருபெண் காதலனுடன் நண்டுகளைப் பிடித்து ஆட்டி விளையாடும்போது சிலம்பு உடைந்து விட்டது. அதற்குரிய மண்ணினைக் கொணர்ந்து, சிலம்பை மீட்டும் ஒட்ட வைத்துச் சீர் செய்யவேண்டும். தன் தொழிலில் சிறிதும் தளர்ச்சி காட்டாத கம்மியன் அதைச் செய்து தருவான். தலைவியுடன் கூடிப் பிரியும் தலைவனிடம் பேசும் தோழி, பிரிவதானால் அவள்

காற்சிலம்பைப் பழுதுபார்க்க, வேண்டிய மணலைக் கொண்டுவந்து தந்துவிட்டுப்போம் என்று வருந்திக் கூறுகிறாள். '**சில விளங்கு எல்வளை ஞெகிழ, அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே,... உறுவினைக்கு அசாவா உலைவுஇல் கம்மியன், பொறி அறு பிணைக்கூட்டும் துறைமணல் கொண்டு வம்மோ!**' (363) என்பதாக, இது கூறப்படுகிறது.

இரும்பு அடிக்கும் கொல்லனைப் பற்றியும் அவனுடைய ஊதுலை பற்றியும் பல இடங்களில் கூறப்படுகிறது. கரடி எறும்புப் புற்றில் அதன் உள்ளேயுள்ள பாம்பு நடுங்கும்படி, அதன் முனையில் வாய்வைத்து, உள்ளே இழுத்து உறிஞ்சுகிறது. அது கொல்லனின் உலைக்களத்தில், உலை மூக்கில் காற்றை உள்ளிழுத்து விடுவது போல உளது. '**கொல்லன் ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த்து அகழும்**' என இது கூறப்படுகிறது (125)

**பாய்மரக் கப்பல்**

வங்கம் என்பது பெரிய பாய்மரக் கப்பல். கங்கையாற்றில் வங்கம் கடக்கப் பயன்பட்டதாக ஒரு குறிப்பு வருகிறது. '**கங்கை வங்கம் போகுவர் கொல்லோ**' என்று தோழி தலைவியிடம் பிரிந்த தலைவனைப் பற்றிக் கூறுகிறாள். (189)

கடல்மரம் - கட்டுமரம் குறிக்கப்படுகிறது. கடலில் புயற்காற்று வீசவே, அது உடைந்து கவிழ்ந்ததாக, அதிலிருந்து உடைந்த பலகையை அதில் ஏறிவந்த பலரும் பற்றிக்கொண்டு உயிர் பிழைக்கப் போராடுவராம். இவ் அனுபவம் ஓர் உவமையாக வருகிறது.

**கால்ஏமுற்ற பைதரு காலைக்**
**கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி உடன்வீழ்பு**
**பலர்கொள் பலகை போல** (30)

என்ற உவமை, தமிழரின் கடல்வழிப் பயணத்தைச் சிறு பனித்துளி ஒன்று பெரிய ஆலமரத்தைத் தன்னுள் காட்டுவதுபோல உணர்த்துகிறது.

**சூதாட்டம்**

குயில்கள் ஒன்றுடன் ஒன்று இணைபிரியாது நின்று, மாந்தரைப் பார்த்து அறவுரை பகர்கின்றனவாம். சூதாடு கருவியை உருட்டிவிட்டால், அது மாறிமாறி விழுவதுபோல, இந்த வாழ்க்கை நிலையில்லாதது என்று கருதி, இதைச் செயலற முற்றிலும் துறப்போரை விளித்து, குயில்கள் கடிந்துரைப்பது போலக் கூவுகின்றன.

இருங்குயில்

கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு
அகறல் ஓம்புமின் அறிவுடையீர் எனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல
மெய்யுற இருந்து மேவர நுவல ...... (243)

'கவறுபெயர்த் தன்ன' என்னும் போதே, சூதாடு களம் அல்லது கழகம் கண்முன் தோன்றி மறைகின்றனது.

**மகளிர் விளையாட்டுக்கள்**

'வரியணி பந்து' - அழகான வரி புனைந்த பந்து. இது மகளிர் ஆடுதற்குரியது (305). காட்டில் தலைவி யானைகளுக்குப் பயந்து, அங்குமிங்கும் ஓடுவது, தந்தையின் இடமகன்ற வீட்டில் 'ஆடு பந்தை உருட்டுநள் போல' உளதாம் (324).

கற்பாறையில் ஈங்கையின் உருண்டு திரண்டபூ உதிர்ந்து பரவிக் கிடக்கிறது. அது கூரை வேய்ந்த குடிசையில் வாழும் மகளிர் தம் வீட்டு முன்றிலிலுள்ள மணற்பரப்பில் உருட்டிவிளையாடுகிற கழற்சிக்காய்கள் போல உளது.

சிறைநாள் ஈங்கை உறைநனி திரள்வீ
கூரை நன்மனைக் குறுந்தொடி மகளிர்
மணலாடு கழங்கின் அறைமிசைத் தாஅம்... (79)

என்று மகளிர் கழங்கு விளையாட்டுக் குறிக்கப்படுகிறது. பிறிதோரிடத்தில் விளாம்பழம் உவமையாவதால், பந்தின் உருண்டை வடிவம் தெரிகிறது. (24) நெய்தல் நிலத்து மகளிர், கடற்கரை ஓரமாக நண்டுகளுடன்

விளையாடுவது, அவற்றைப் பிடித்து ஆட்டுவது, அதனால் அவை அஞ்சி வளைக்குள் போவது எனப் பலவாறு பலபாடல்களில் 'அலவன் ஆட்டும்' விளையாட்டுக் குறிக்கப்படுகிறது. 'சில விலங்கு எல்விளை அலவன் ஆட்டுவோள்' (363) என இது வருகிறது.

ஊஞ்சலாடுதல் ஒரு மகளிர் விளையாட்டாகும். இதுவும் பல பாடல்களில் வருகிறது.

புலைத்தி இரவிலே தோய்த்துத் தந்த பூத்தொழிலையுடைய ஆடையுடன், வாடாத பொன்னரி மாலையும் அசைந்தாட, பனைநாரினைத் திரித்த கயிற்றைத் தொங்கவிட்ட ஊஞ்சலில் ஏறித் தலைவி ஆடும் வழக்கமுண்டு (90). வேங்கை மரத்தில கட்டிய ஊசலில் ஆடுவது பற்றி 'கருங்கால் வேங்கை ஊசல் தூங்கி' (368) என்று வருகிறது.

உப்பங்கழிகள் சூழ்ந்த கடற்கரைச் சோலைகளில் மகளிர் ஆடிப்பாடித் திரிகின்றனர். 'சிறு பாசடைய நெய்தல்' பூக்களைக் கொய்து விளையாடுகிறார்கள். பூக்களைக் கொய்வது, அவற்றைத் தழைகளுடன் பிணைத்து ஆடையாகத் தைத்து உடுத்துவது மகளிர் வழக்கமாக இருந்துளது (27).

நெய்தல் நில மகளிர் தழையுடை அணிந்துகொண்டு, பூமாலைகளுடன் கடலில் குளித்து, நீராடி மகிழ்கின்றனர். 'ஓங்கற் புணரி பாய்ந்தாடு மகளிர்' (395) என்பர். புணரி - கடல்

ஓரை விளையாட்டே மிகுதியாகப் பேசப்படுவது, மகளிர் பஞ்சாய்ப் பாவை வைத்து, சிறுவீடு கட்டி, சிறு சோறாக்கி மணலில் விளையாடுவர். நீர்நிலைகள் உள்ள இடமெல்லாம் மணலில் விளையாடும் இதை வண்டல் என்றும் குறிப்பர். 'விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது, இளையோர் இல்லிடத்து இற் செறிந்திருத்தல், அறனும் அன்றே' (68) என வரும். 'ஓரை மகளிரும் ஊர் எய்தினரே' (398) என்பர்.

உரையாய் வாழி தோழி!...
கானல் ஆயமொடு காலைக் குற்ற
கட்கமழ் அலர தண்ணறுங் காவி

அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇ
வரிபுனை சிற்றில் பரிசிறந்து ஓடிப்
புலவுத்திரை உதைத்த கொடுந்தாள் கண்டல்
செம்பேர் இரணை அலவற் பார்க்கும்
சிறுவிளை யாடலும் அழுங்க
நினக்குப் பெருந்துயரம் ஆகிய நோயே (123)

பூக்கொய்து தழையுடை அணிந்து, சிற்றில் இழைத்து, இரட்டை நண்டுகள் சேர்வதைப் பார்த்து மகளிர் ஓடி விளையாடுகின்றனர். இதில் பூக்கொய்தல், ஓரை, அலவனாட்டல் என்ற மூன்று விளையாட்டுக்களும் சொல்லப்பட்டுள்ளன. கானல் ஆயம் - கடற்கரைத் தோழியர். காவி - குவளை. குற்ற - மலர்களைக் கொய்தமை. அம்பகை நெறித்தழை - மாறுபட்ட நிறத்தையுடைய முற்றிய தழைகள். தழையுடை உடுத்து, சிற்றில் புனைந்து விளையாடுதல். இரணை - ஆணும் பெண்ணுமான இரட்டை நண்டுகள்.

**கூத்து**

துணங்கைக் கூத்து ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆடுவது. இக் கூத்துக்களை ஆடும்போது தழையுடை உடுத்துள்ளனர். பெரிதும் பரத்தையருடன், தலைவன் 'தலைக்கை' தந்து, ஆடுவதால் துணங்கைக் கூத்து காம வயப்பட்டதாகத் தோற்றுகிறது.

குழையன் கோதையன் குறும்பைந் தொடியன்
விழவயர் துணங்கை தழூஉகம் செல்ல.. (50)

தலைவன் காதில் குழையணிந்து, மாலையணிந்து, கைவளையணிந்து, பெண்வேடமிட்டு, விழாக் காலத்தில் துணங்கை ஆடச் சென்றானாம். தன்னை மறைத்து, வேடமிட்டுச் சென்றதால் அவனது குற்றவுணர்ச்சி புலனாகிறது.

குரவைக் கூத்து பெண்பாலரே கூடி ஆடுவது. அது குறிஞ்சி நிலத்தில் மிகுதி. 'பெருமலை வாங்கு அமை பழுநிய நறவுண்டு. வேங்கை முன்றில் குரவையும் கண்டே' (276) செல்லுக தலைவ என்று

தோழி வேண்டுமிடம் இது. 'மலைமீது குழாய் போன்ற மூங்கிலினுள்ளே, நிரப்பி நன்கு முற்ற வைத்த மதுவை பருகி, வேங்கைமரம் நிற்கும் வீட்டின் முன்புறத்திலே நாங்கள் ஆடும் குரவையையும் கண்டு போவிராக' - இவ்வாறு தலைவி வேண்டுகிறாள் (276). ஆரியராடும் கழைக்கூத்துப் பற்றிய குறிப்புக்கள் பலவுள.

தழையுடை

விழாக் காலங்களில் தழையுடை உடுத்திக்கொண்டே, ஆடிப் பாடியுள்ளனர். **'ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கமும்'** பருத்தி ஆடைகளும், பட்டாடைகளும் இருந்த காலத்தில், தழையுடை பழைமையின் சின்னமாய்ச் சடங்குகளின் அடையாளமாய்ப் பயன்பட்டுள்ளது. தோழிய கூட்டமாகச் சேர்ந்து மலர் கொய்து, தழைகளுடன் சேர்த்துத்தைத்து உடையாக அணிந்துள்ளனர். காதலனும் மலர் கொய்யவும் தழையுடை தைக்கவும் உதவியுள்ளான். இது விழாவின் அடையாளமாகவும் காதலின் சின்னமாகவும் பயன்பட்டுள்ளது. முதன் முதல் சந்திக்கும்பொழுது, தலைவன் தன்னூரிலுள்ள பூக்களையும் தழைகளையும் சேர்த்துத் தைத்த தழையுடையையே பரிசாகத் தலைவியிடம் தருகின்றான். அதை அவள் ஏற்றுக்கொண்டால், அவனுடைய காதலையும் ஏற்றதாகப் பொருள். இன்றேல் மறுத்ததாகும். அவன் வேற்றூரினன் ஆதலால், அவன் தரும் தழையுடையில் வேறுவிதமான பூக்களும் தழைகளும் இருக்கும். இதைப் பார்த்தால் தாயர்க்குத் தலைவி மீது ஐயம் ஏற்படும். பிறகு அவளை வீட்டுக் காவலில் வைத்து, இற்செறிப்பர். இதனால் அவள் தலைவனைச் சந்திக்க முடியாமற் போகும்.

... குன்ற நாடன்

**உடுக்கும் தழைதந் தனனே அவையாம்**
**உடுப்பின் யாய் அஞ்சுதுமே, கொடுப்பின்**
**கேளுடைக் கேடஞ் சுதுமே......** (359)

தலைவன் தரும் தழையுடையை ஏற்றால் தாய்க்கு அஞ்ச நேரும்; ஏற்காது திருப்பிக் கொடுத்தால் நட்புடைய காதலனின் துன்பத்திற்கு

அஞ்சநேரும் என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். தழையுடையில் உள்ள பூக்கள் வாடிவிடுமாதலால் தலைவியை ஏற்கச் செய்யவே தோழி இவ்வாறு பேசுகிறாள்.

**அரசும் அவையமும்**

மன்னர்களின் பட்டத்து யானைகளுக்கு நெற்றிப்பட்டம் எனும் ஓடையை, துதிக்கையின் மேலே அணிந்திருப்பர். அது பொன்னாலானது; மணிகள் பதித்தது. **'வினைவல் யானைப் புகர்முகத்து அணிந்த, பொன்செய் ஓடை புனைநலம் கடுப்ப'** - கொன்றை மரம் பொன்னிற மலர்களுடன் பூத்துக் குலுங்குவதாகப் புனையப்படுகிறது. (296)

புன்னையின் மலராது குவிந்திருக்கும் அரும்புகள், கழுவப்படாத முத்துக்கள் போல விளங்குகின்றன. **'கைவல் கம்மியன் கவின் பெறக் கழஅ மண்ணாப் / முத்து ஏய்ப்பக் குவியிணர்ப் புன்னை அரும்பிய புலவு நீர்ச் சேர்ப்பன்'** (94) என்று இது கூறப்படுகிறது. மண்ணா - கைத்தொழில் வல்ல கம்மியனால் கழுவப்படாத, கொத்தாகக் குவிந்துள்ள புன்னை அரும்புகள் முத்துப்போல் உள்ளன.

தலைவன் பிரிய நினைக்கின்றான். அது தலைவிக்கு ஆதரிப்பார் இல்லாத அவலநிலையாகின்றது. இது எவ்வாறு எனில், ஓர்எயில் மன்னன் நிலைபோல உளது. ஒரு கோட்டை மட்டும் இருந்தால், எதிரிகள் உட்புகுதல் எளிதாகிவிடும். மேலும் 'அஞ்சல்' என்று சொல்லிய மன்னனும் கைவிட்டால் என்னாகும்?

**அஞ்சல் என்ற இறைகை விட்டெனப்**
**பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்தலில்**
**களையுநர்க் காணாது கலங்கிய உடைமதில்**
**ஓரெயில் மன்னன் போல** (43)

தலைவன் பிரிவைக் கேட்ட தலைவி நிலை பேரவலமாகியது என்று தோழி கூறுகிறாள். தலைவனைச் செலவழுக்குவிக்கும் முயற்சி இது. புறத்து இறுத்தல் - முற்றுகையிடல். ஒரே ஒரு எயில் - கோட்டைமதில். அதுவும் உடைந்துளது. தலைவன் பிரிந்தால், தலைவி நிலை ஆதரிப்பார் இன்றிக்

கேடுவிளைவிக்கும் என்பது உட்பொருள். இப்பாடலைப் பாடியவர் பெயர் எயினந்தையர் என்று காணப்படுவது, இவ் 'எயில்' பற்றிய உவமையால் ஆகும். அந்தை என்பது இயற்பெயர்.

அக்காலத்திலும் ஊர்க் காவல் இருந்தது என்ற குறிப்புக் கருதத் தக்கது. வளமனையில் பல்பூஞ்சேக்கையில் படுத்திருக்கும் நிலையிலும் சுற்றிலும் காப்பு மிகுதியாக இருந்ததாம். அதற்கு மேலும் ஊர் காவலர் களும் மணியடித்துக் கொண்டு சுற்றிவருகிறார்களாம். இதனால் தலைவிக்கு காதலனைச் சந்திக்க முடியாத துன்பம் பேரவலமாய் முடிந்தது.

'காப்புடை வாயில் போற்றோ' என்னும்
யாமம் கொள்பவர் நெடுநா ஒண்மணி
ஒன்றெறி பாணியின் இரட்டும்
இன்றுகொல் அளியேன் பொன்றும் நாளே (132)

'காவலையுடைய தலைக்கடை, புழைக்கடை வாயில்களை மூடித் தாளிட்டுப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று ஊர்க்காவலர் கூவுகின்றனர். யாமம் கொள்பவர் – இரவில் ஊரைக்காக்கும் காவலர். அவர்களது மணி எதிரொலிக்கும்; தாளத்துடன் இரட்டி ஒலிக்கும். எனவே காதலரைச் சந்திக்க முடியாத எனக்கு இன்று உயிர்விடும் நாள்போலும் என வருந்துகிறாள், தலைவி.

இறந்தவர்களைத் தாழியிலிட்டுக் கவித்து வைப்பது பற்றிய குறிப்பு இன்றைய தொல்பொருள் ஆய்வுடன் சேர்த்து எண்ணத் தக்கதாகும். (271) பேய்க்கரும்பின் வெண்ணிறப் பூக்கள் வாடைக் காற்று வீசுதொறும் அசைவது, வேந்தர்களுக்குக் கவரி வீசுவதுபோல் இருக்கிறது (241). இனக் குருகு, குப்பை வெண்மணல் ஏறி அரைசர், ஒண்படைத் தொகுதியின் இலங்கித் தோன்றும் (291). நாரைகள் கடலருகே மணல்மேட்டில் வரிசையாக இருப்பது, அரசர்களின் காலாட்படை அணிவகுப்புப் போலவுளது.

...... எந்தை
வேறுபல் நாட்டின் கால்தர வந்த

பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறைக்
கலிமடைக் கள்ளின் சாடிஅன்னஎம்
இளநலம்... (295)

பல்வேறு நாட்டிலிருந்து, வேலைப்பாடுமிக்க நாவாய்களில் காற்றுச் செலுத்துதலால் கொண்டுவரப்பட்ட மது அது. செருக்கை மிகுவிக்கும் அம்மதுவைக் குடித்துவிட்டுக் கடல் துறைக்கண் போட்ட சாடி போன்ற தம் இளமை அழகு, தலைவன் பிரிவால் கெடுவதைக் கூறி, தோழி தலைவனிடம் திருமணம் செய்யத் தூண்டுகிறாள். வெளி நாட்டு மதுச்சாடி அத்துணை அழகாக இருந்தது போலும்! அவ்வாறே பலப்பல நாடுகளிலிருந்து, பண்டங்கள் பல கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டன.

வேறுபல் நாட்டிற் கால்தர வந்த
பலவுறு பண்ணியம் இழிதரு நிலவுமணல் (31)

கால் - காற்று. பண்ணியம் - பண்டங்கள். இழிதரு - இறக்கப்படுகின்ற. நிலவுமணல் - நிலாப்போன்ற மணலையுடைய கடற்கரை. வேந்துடை அவை - வேந்தனுடைய அறங்கூறு அவை பற்றிய குறிப்பு, அன்றைய முறைமன்ற நிகழ்வைச் சுட்டுகிறது (90). அழுதுகொண்டிருந்த இளம்பரத்தையைச் சமாதானப்படுத்தாத, வேந்துடைய அவை பயனற்றது என்று கூறுகிறாள், தோழி. 'மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து, அறங்கெடல் அறியாது' (400) சோழர் களது உறையூரில் இருந்த நீதிமன்றம் புகழ்பெற்றது. அது 'அவையம்' எனப்படுகிறது. புறாவுக்காக தன் உடம்பை அறுத்துவைக்க முன்வந்த சிபி, நரை முடித்து முறைசெய்த கரிகாலன், பெரியபுராணம் கூறும் மனுநீதிச் சோழன் ஆகியவர்களின் நீதி தவறாமையால், உறந்தை புகழ்பெற்றது.

பாண்டியர் அவையம் தமிழ் இலக்கிய இலக்கணம் காத்தது; சேரர் அவையம் தமிழர் வீரம் ஈகம் மானம் காத்தது; சோழர் அவையம் தமிழர் நீதிமுறையைக் காத்தது.

## கற்பகம் பல்கலைக் கழகம்

ஈச்சநாரி அஞ்சல், கோயம்புத்தூர் 641 021

•

செவ்விலக்கியக் களப் பயிற்சித் தொடர்
Training in Classical Thamizh Literature

சான்றிதழ் வகுப்பு
Certificate Course

•

நானொரு தமிழன் எனதொரு மொழியும்
தேனென வழங்கும் செவ்வியல் மொழியே

# நற்றிணை

பழந்தமிழகத்தைக் கண்முன் காட்டுகிறது.
இயற்கைச் சூழலும் பருவ வேறுபாடும்
பண்பாடும் நாகரிகமும்
மானுடக் காதலும் மன்னுயிர்க் காதலும்
அனைத்தையும் பார்க்க உங்களைக்
கைகொடுத்து அழைத்தேகும் கையேடு
இந்நூல்

நாம்தமிழர் என்ற அடையாளம் தருவது
நற்றமிழ்ச் செவ்வியல் இலக்கியந்தானது!
இந்நூலை நன்கு கற்றுப்
பல்கலைக்கழகச் சான்றிதழ் பெற்றிட முயலுங்கள்!

தொடர்பு கொள்க

தமிழ்த்துறைத் தலைவர்
**கற்பகம் பல்கலைக் கழகம்**
கோயம்புத்தூர் 641 021

**தமிழண்ணல்**
ஏரகம், சதாசிவநகர்
முதன்மைச் சாலை
மதுரை 625 020